
www.malankaralibrary.com




**வினாவிடைகள்**

**தொடர்புக்கு : frmariajohn@gmail.com**

**2.11.2019**

**(தனிச்சுற்று)**

www.malankaralibrary.com

## பாடம் 1 இறைபராமரிப்பு - இஸ்ரயேலரின் வாழ்வில்

பயிற்சி வினாக்கள் :-

*1. இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் அவர்கள் இறைபராமரிப்பை அனுபவித்து உணர்ந்த இரு நிகழ்ச்சிகளை எழுதுக?*

பஞ்சகாலத்தில் இஸ்ரயேல் மக்களை எகிப்துக்கு அழைத்து வந்ததும், அடிமை வாழ்விலிருந்து மோசேயின் தலைமையில் இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலை அளித்ததும் இஸ்ரயேல் மக்கள் இறைபராமரிப்பை அனுபவித்து உணர்ந்த இரு நிகழ்ச்சிகள் ஆகும்.

*2. உடன்படிக்கைப் பேழைக்கு இஸ்ரயேல் மக்கள் அளித்திருந்த முக்கியத்துவம் யாது?*

இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கைப் பேழையை அவர்கள் பயணம் செய்த இடங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்றனர். அவர்கள் உடன்படிக்கைப்பேழை வாயிலாக இறைபிரசன்னத்தை உணர்ந்தனர்.

*3. இஸ்ரயேல் மக்கள் யோர்தான் ஆற்றைக் கடந்து சென்றது எவ்வாறு?*

யோசுவா இஸ்ரயேல் மக்களை யோர்தான் ஆற்றின் மேற்கிலுள்ள கானான் நாட்டிற்கு வழிநடத்தினார். அப்போது இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கைப் பேழையை எடுத்துச் சென்ற குருக்களின் முன்னிலையில் எக்காள ஒலிகளுடனும், வெற்றி ஆர்ப்பரிப்புக்களுடனும் யோர்தான் ஆற்றைக் கடந்தனர்.

குறு வினா விடைகள்

1. *கடவுள் தொடக்கத்தில் எவற்றை படைத்தார்?* விண்ணுலகையும் மண்ணுலகையும்.
2. *படைப்புச் செயலின் இறுதியில் கடவுள் யாரைப் படைத்தார்?* மானிடரை
3. *மானிடரை கடவுள் எவ்வாறு படைத்தார்?* கடவுள் தமது உருவிலும், சாயலிலும், மானிடரைப் படைத்தார்.
4. *கடவுள் மானிடரை குடியமர்த்தியது எங்கே?* ஏதேன்தோட்டத்தில்
5. *ஆதி மனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் எவ்வாறு பாவம் செய்தனர்?* கடவுளின் கட்டளையைப் புறக்கணித்து
6. *கடவுளின் கட்டளையைப் புறக்கணித்து ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததால் தண்டித்த பின்னர் கடவுள் அவர்களை என்ன செய்யவில்லை?* புறக்கணித்துவிடவில்லை.
7. *பாவத்திலிருந்து மனித குலத்தை மீட்பதற்காக கடவுள் யாரை அழைத்து வேறுபடுத்தி ஆசீர்வதித்தார்?* ஆபிராமை
8. *ஆபிராம் எந்த வழிமரபைச் சார்ந்தவர்?* நீதிமான் நோவாவின்
9. *ஆபிராமின் தந்தை யார்?* தெராகின்
10. *கடவுள் ஆபிராமுக்கு அளித்த வாக்குறுதி என்ன?* மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்'
11. ஆபிராமின் மகன் *ஈசாக்கின்* பிறப்பு வழியாக இறை பராமரிப்புத் தொடர்ந்தது.
12. ஈசாக்கின் மகனாகிய *யாக்கோபிடமும்* கடவுள் தமது வாக்குறுதியை தொடர்ந்தார்.
13. *பஞ்ச காலத்தில் இஸ்ரயேல் மக்களை எந்த நாட்டிற்கு கடவுள் அழைத்து வந்தார்?* எகிப்து
14. *கடவுள் இஸ்ரயேல் மக்களுக்கு அடிமை வாழ்விலிருந்து விடுதலை அளித்த போது இஸ்ரயேலரின் தலைவர் யார்?* மோசே
15. எகிப்திலிருந்து இஸ்ரயேலரை விடுவித்த கடவுள் தாம் *வாக்களித்த* நாட்டை நோக்கி அவர்களை வழிநடத்தினார்.
16. நாற்பது ஆண்டுகால *பாலைவன* வாழ்வின்போது அவர்கள் பலமுறை கடவுளுக்கு எதிராக பாவம் செய்தனர்.
17. *பாலைவன வாழ்வில் இஸ்ராயேல் மக்கள் பாவங்கள் செய்தபோதும் மோசேயின் பரிந்துரையால் கடவுள்*

www.malankaralibrary.com

*அவர்களை என்ன செய்தார்?* மன்னிக்கவும் பராமரிக்கவும்

18. *மோசே எங்கே மரணமடைந்தார்?* நெபோ மலையில்
19. *நெபோ மலை எங்கே உள்ளது?* கானான் நாட்டின் பக்கத்திலுள்ள மோவாபு சமவெளியின் அருகே
20. *மோசே இறந்த பின்னர் இஸ்ரயேல் மக்களை யோர்தான் ஆற்றின் மேற்கிலுள்ள கானான் நாட்டிற்கு வழிநடத்திய மோசேயின் உதவியாளர் யார்?* யோசுவா
21. *இறைபிரசன்னத்தை எதன் வாயிலாக இஸ்ரயேல் மக்கள் உணர்ந்தனர்?* உடன்படிக்கைப்பேழை
22. *இஸ்ரயேல் மக்கள் கடவுளின் பிரசன்னத்திற்காக பயணம் செய்த இடங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்றது என்ன?* உடன்படிக்கைப் பேழை
23. *உடன்படிக்கைப் பேழையை தூக்கிச் சென்றவர்கள் யாவர்?* குருக்கள்
24. *ஆண்டவரின் பராமரிப்பில் இஸ்ரயேல் மக்கள் யார் தலைமையில் கானான் நாட்டைக் கைப்பற்றினர்?* யோசுவா
25. *இஸ்ரயேல் மக்கள் முதலில் எந்த நகரை கைப்பற்றினர்?* ஜெரிக்கோ
26. *இஸ்ரயேல் மக்கள் ஜெரிக்கோவை கைப்பற்றிய பின்னர் எந்த நாட்டுப் பகுதிகளில் வாழத்தொடங்கினர்?* கானான் நாடு
27. *யோசுவா எந்த இடத்தில் வைத்து இஸ்ரயேல் மக்களை கடவுளிடம் உள்ள உடன்படிக்கையை புதுப்பிக்கச் செய்தார்?* செக்கேமில்
28. *யோசுவா இறந்த போது அவருக்கு வயது என்ன?* நூற்றிபத்து
29. ஆபிரகாமை <u>அழைத்து</u> <u>வேறுபடுத்தி</u> ஆசீர்வதித்த நாளிலிருந்து, இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கைக் கடவுளின் சிறப்பான <u>பராமரிப்பிலேயே</u> கடந்து சென்றது.
30. *<u>இஸ்ரயேல்</u>* மக்களின் வரலாறு முழுவதிலும் <u>இறைபராமரிப்பை</u> நாம் உணரமுடியும்.

## பாடம் 2 இஸ்ரயேல் குலங்கள்

பயிற்சி வினாக்கள்

1. *இஸ்ரயேலின் குலங்கள் எத்தனை? அவை யாவை?*

இஸ்ரயேலின் குலங்கள் பன்னிரண்டு ஆகும். அவை 1.ரூபன், 2.சிமியோன், 3.லேவி, 4.யூதா, 5.இசக்கார், 6.செபுலோன், 7.தாண், 8.காத், 9.ஆசேர், 10.நப்தலி, 11.பென்னியமின், 12.எப்ராயிம்- மனாசே

2. *இஸ்ரயேலர் யோர்தான் ஆற்றைக் கடந்து சென்றபோது நினைவுக்கற்கள் நிறுவியதன் காரணம் யாது?*

   யோசுவா தலைமையில் இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களும் ஒருங்கே யோர்தான் ஆற்றை அற்புதமாக கடந்து சென்றனர். இந்த நிகழ்ச்சியின் நினைவுச்சின்னமாக ஆண்டவரின் கட்டளைக்கேற்ப பன்னிரண்டு நினைவு கற்கள் யோர்தான் ஆற்றின் நடுவே நிறுவினர். (யோசுவா 3-4)

3. *லேவி குலத்தினருக்கு சொந்தமாக நாடு கொடுக்கப்படாதது ஏன்?*

   லேவிகுலம் குருத்துவகுலம் ஆகும். ஆதலால் அவர்களுக்கு சொந்தமாக நாடு கிடைக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு குலத்தினரும் தங்களுக்கான பங்கிலிருந்து நகரங்களும், நிலங்களும் லேவி குலத்தாருக்கு அளித்தனர்.

4. *இஸ்ரயேலரின் வரலாற்றில் 'குலங்களுக்கு உள்ள இடத்தை விவரி?*

இஸ்ரயேலின் வரலாற்றில் ' பன்னிரண்டு குலங்கள்' மிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. 'பன்னிரண்டு' என்ற எண்ணுக்கு மீட்புத்திட்டத்தின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் உண்டு. இந்த 'பன்னிரண்டு' என்ற எண் இஸ்ரயேல் இறைமக்களின் முழுமையைக் குறிக்கிறது.

www.malankaralibrary.com

5. *யோசுவாவின் தலைமையில் இஸ்ரயேல் மக்கள் கானான் நாடு அடைந்ததை விவரி?*

மோசே இறப்பதற்கு முன் ஆண்டவரின் அறிவுரைக்கேற்ப இஸ்ரயேல் மக்களை வழிநடத்த யோசுவாவை ஏற்படுத்தினார். யோசுவா தலைமையில் இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களும் ஒருங்கே யோர்தான் ஆற்றை அற்புதமாக கடந்து சென்றனர். இந்த நிகழ்ச்சியின் நினைவுச்சின்னமாக ஆண்டவரின் கட்டளைக்கேற்ப பன்னிரண்டு நினைவுக் கற்கள் யோர்தான் ஆற்றின் நடுவே நிறுவினர். (யோசுவா 3-4)

குறு வினாக்கள்

1. *விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?* ஆபிரகாம்
2. *ஆண்டவர் யார் வழியாக மக்கள் குலத்தை உருவாக்கினார்?* ஆபிரகாம்
3. *யாக்கோபின் புதல்வர்கள் எத்தனை?* பன்னிரண்டு
4. *கடவுள் யாக்கோபின் பெயரை எவ்வாறு மாற்றினார்?* 'இஸ்ரயேல்'
5. *ஆண்டவர் உருவாக்கிய மக்கள் குலம் எந்த பெயரை பெற்றது?* 'இஸ்ரயேல்
6. *யாக்கோபின் பன்னிரண்டு புதல்வர்களின் பெயராலேயே அழைக்கப்படுவது என்ன?* இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்கள்
7. *ஈசாக்கிடமிருந்து தவறான முறையில் ஆசி பெற்ற அவரது மகன் யார்?* யாக்கோபு
8. *யாக்கோபுவின் மூத்த சகோதரன் யார்?* ஏசாயா
9. *யாக்கோபு ஏசாயாவுக்குப் பயந்து எந்த நாட்டை விட்டு தப்பி ஓடினார்?* கானான்
10. *தப்பி ஓடிய யாக்கோபு எந்த இடத்தை அடைந்தார்?* காரான்
11. *யாக்கோபுவின் தாயின் சகோதரர் லாபான் வாழ்ந்திருந்த இடம் யாது?* காரான்
12. *யாக்கோபு மணந்த லாபானின் புதல்வியர்கள் யாவர்?* லேயா, ராகேல்
13. *யாக்கோபு தனது பன்னிரண்டு புதல்வர்களில் யாரை அதிகமாக அன்பு செய்தார்?* யோசேப்பை
14. *யோசேப்பின் புதல்வர்கள் யாவர்?* எப்ராயிம், மனாசே
15. *யாக்கோபு தன் முதிர்ந்த வயதில் யாருக்கு ஆசிவழங்கி தனது புதல்வர்களுக்கு நிகராக்கினார்?* எப்ராயிம், மனாசே
16. *யாக்கோபின் தலைமுறையினர் யாவர்?* பன்னிரண்டு குலங்கள்
17. *பன்னிரண்டு குலங்களும் ஒன்று சேர்ந்து எவ்வாறு அழைக்கப்பட்டது?* இஸ்ரயேல்
18. *யாக்கோபின் பன்னிரண்டு புதல்வர்களும் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?* "குலத்தந்தையர்கள்"
19. *யாக்கோபின் பன்னிரண்டு புதல்வர்களுள் "குலத்தந்தை" என அழைக்கப்படாதவர் யார்?* யோசேப்பு
20. *யோசேப்புக்குப்பதிலாக அவரது இரு புதல்வர்களின் பெயராலேயே அழைக்கப்படும் குலங்கள் யாவை?* எப்ராயீம், மனாசே
21. *இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தனர்?* நானூற்று முப்பது ஆண்டுகள்
22. *இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து கானான் நாட்டிற்கு யார் தலைமையில் கானான் நாட்டை நோக்கி புறப்பட்டனர்?* மோசே
23. *கானான் நாட்டை அடைவதற்கு முன் இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் பயணம் செய்த ஆண்டுகள் எத்தனை?* நாற்பது ஆண்டுகள்
24. *கானான் நாட்டை அடைய முடியாத இஸ்ரயேல் மக்களை வழிநடத்திய தலைவர் யார்?* மோசே
25. *மோசே இறந்த பின்னர் ஆண்டவரால் இஸ்ரயேல் மக்களை வழிநடத்த நியமிக்கப்பட்டவர் யார்?* யோசுவா

www.malankaralibrary.com

26. *யோசுவா தலைமையில் இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களும் எந்த ஆற்றை கடந்து சென்றன?* யோர்தான்
27. *இஸ்ரயேலின் பன்னிரண்டு குலங்களும் யோர்தான் ஆற்றை கடந்து சென்றதன் நினைவுச்சின்னமாக யோர்தான் ஆற்றின் நடுவே எதை நிறுவினர்?* பன்னிரண்டு நினைவுக் கற்கள்
28. *யார் தலைமையில் இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டை கைப்பற்றினர்?* யோசுவா
29. *யோசுவா தனது முதிர் வயதில் கானான் நாட்டை என்ன செய்தார்?* இஸ்ரயேலின் 12 குலங்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார்.
30. *சொந்தமாக நாடு கிடைக்காத குருத்துவகுலம் எது?* லேவிகுலம்
31. *லேவி குலத்தாருக்கு ஒவ்வொரு குலத்தினரும் எவ்வாறு உதவினர்?* தங்களுக்கான பங்கிலிருந்து நகரங்களும், நிலங்களும் அளித்தனர்.
32. *யோசேப்பின் உரிமைப்பகுதிகள் யாருக்கு அளிக்கப்பட்டன?* எப்ராயிம், மனாசே குலத்தினர்
33. *அதிகமான சொத்துக்கள் பெற்றுக்கொண்ட குலம் எது?* யூதா குலம்
34. *யோசுவாவுக்குப் பின்னர் இஸ்ரயேல் மக்களை வழிநடத்தியவர்கள் யாவர்?* நீதித்தலைவர்கள்
35. *நீதித்தலைவர்களுக்குப் பின்னர் இஸ்ரயேல் மக்களை வழிநடத்தியவர்கள் யாவர்?* அரசர்கள்
36. *எந்த அரசர்களின் ஆட்சி காலங்களில் இஸ்ரயேல் குலங்கள் ஒன்றிணைந்திருந்தன?* தாவீது, சாலமோன்
37. *சாலமோன் அரசரின் மகன் யார்?* ரெகாபெயாம்
38. *இஸ்ரயேல் குலங்களை ஒற்றுமையோடு வழிநடத்த இயலாத அரசர் யார்?* ரெகாபெயாம்
39. *இஸ்ரயேல் குலங்கள் பிளவுபட்டு உருவான இரு அரசுகள் யாவை?* யூதேயா அரசும், இஸ்ரயேல் அரசும்
40. *யூதேயா அரசில் உள்ள இரு குலங்கள் யாவை?* 1.யூதா, 2.பென்யமின்
41. *இஸ்ரயேல் அரசில் உள்ள பத்து குலங்கள் யாவை?* 1.ரூபன், 2.சிமியோன், 3.லேவி, 4.இசக்கார், 5.செபுலோன், 6.தாண், 7.காத், 8.ஆசேர், 9.நப்தலி, 10.எப்ராயிம்- மனாசே
42. *'பன்னிரண்டு' என்ற எண் எதில் முக்கியத்துவம் பெற்றுள்ளது?* மீட்புத்திட்டத்தின் வரலாற்றில்
43. *'பன்னிரண்டு' என்ற எண் எதைக் குறிக்கிறது?* இறைமக்களின் முழுமையைக் குறிக்கிறது.
44. *இஸ்ரயேலின் குலங்களைப்பற்றி குறிப்பிடப்படும் உயிர்ப்பின் இரவு மன்றாட்டின் மூன்றாம் கௌமாவில் வரும் பாடல் எது?*

யாரை எண்ணி உயிர்வாழ்வோர் / பொருத்தனைகள் செய்கின்றனரோ,

அவரின் ஞாபகம் நிலைபெறுமே / விண்ணினி லெந்நாளும்

குலத்தினர் தன் பெயராலிறைவன், / திருமுன்னதில் மோ- சே

கற்பலகைகளிலெழுதியதோ / உண்மையில் மெய்யாயின்

உங்கள் நீத்தோர் பெயர்களையும், / இங்கே கோவிலில் நினைந்திடவும்,

விண்ணுலகதனில் எழுதிடவும் / மெசியா வரும்போதவருடனே

மகிழவும் 'பிறிஸ்தா' வில்* எழுதவும் செய்யாரோ?

45. “கடவுள் நமக்கு <u>அடைக்கலமும்</u> <u>ஆற்றலுமாய்</u> உள்ளார். இடுக்கணுற்ற வேளைகளில் நமக்கு <u>உற்ற துணையும்</u> அவரே” (திருப்பாடல்கள் 46 : 1)

www.malankaralibrary.com

## பாடம் 3 நீதித்தலைவர்கள்

பயிற்சி வினாக்கள்

1. *நீதித்தலைவர்கள் என்பவர்கள் யார்?*

கானான் நாட்டில் வாழத்தொடங்கிய இஸ்ரயேல் மக்களை யோசுவாவின் இறப்பு முதல் இஸ்ரயேலில் அரச ஆட்சி தொடங்கும்வரை பகைவர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக கடவுளால் ஏற்படுத்தப்பட்டவர்களே நீதித்தலைவர்கள் ஆவர்.

2. *நீதித்தலைவர்கள் ஆகமம் விவரிப்பது என்ன?*

நீதித்தலைவர்கள் மூலமாக கடவுள் இஸ்ரயேல் மக்களை பராமரித்து, பாதுகாத்து வந்த வரலாற்றை கூறும் திருவிவிலியத்தின் நூல் தான் நீதித்தலைவர்கள் ஆகமம். இந்நூலில் இஸ்ரயேலரை வழிநடத்திய பன்னிரண்டு நீதித்தலைவர்களின் வரலாறு விளக்கப்பட்டுள்ளன. கடைசியாக வழிநடத்திய நீதித்தலைவர்களின் வரலாறு இப்புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை.

3. *நீதித்தலைவர்களில் முக்கியமானவர்கள் யாவர்?*

1.தெபோரா, 2.கிதியோன், 3.இப்தா, 4.சிம்சோன், 5.சாமுவேல் ஆகியோர் நீதித்தலைவர்களுள் மிக முக்கியமானவர்கள் ஆவார்கள்.

4. *சிம்சோன் பெலிஸ்தியர்களை பழி வாங்கியது எவ்வாறு?*

மாபெரும் விழா ஒன்றில் வேடிக்கை காட்டுவதற்காக பெரிய கட்டிடத்திற்குள் சிம்சோன் கொண்டுவரப்பட்டார். அவமரியாதைக்கு ஆளான சிம்சோன், பெலிஸ்தியர் மீது வஞ்சம் தீர்க்க ஆற்றல் அளிக்குமாறு ஆண்டவரை நோக்கி மன்றாடினார். ஆண்டவரின் ஆற்றல் அவர் மீது இறங்கியது. தம்மைச் சங்கிலியால் கட்டியிருந்த தூண்களில் ஒன்றின் மீது வலக்கையும், மற்றொன்றின் மீது இடக்கையும் பிடித்து சிம்சோன் முழுவலிமையுடன் தூண்களை சாய்த்தார். கூடியிருந்த பெலிஸ்தியர் மீது கட்டிடம் நொறுங்கி விழுந்தது. பல்லாயிரக்கணக்கான பெலிஸ்தியருடன் சேர்ந்து சிம்சோனும் இறந்தார். இவ்வாறு சிம்சோன் பெலிஸ்தியர்களைப் பழி வாங்கினார்.

5. *இஸ்ரயேலின் கடைசி நீதித்தலைவராகிய சாமுவேலைப் பற்றி குறிப்பு வரைக?*

எப்ராயிம் குலத்தவரான எல்கானா, அன்னாவின் மகனே சாமுவேல். மலடியான அன்னா மனம் நொந்து அழுது புலம்பி ஆண்டவரிடம் மன்றாடியதன் விளைவாக கடவுளின் சிறப்பான ஆசியினாலேயே சாமுவேல் பிறந்தார். சாமுவேலை சீலோவிலுள்ள ஆண்டவரின் ஆலயத்தில் அவரது தாய் அர்ப்பணித்தாள். குருவாகிய ஏலியின் மேற்பார்வையில் சாமுவேல் ஆண்டவருக்கு ஊழியம் செய்யவும் இறையருளில் வளரவும் செய்தான்.

ஓர் இரவில் ஆலயத்தில் கடவுளின் பேழை வைக்கப்பட்டிருந்ததன் அருகில் சாமுவேல் படுத்திருந்தான். அப்பொழுது ஆண்டவர் சாமுவேலை “சாமுவேல், சாமுவேல்” என அழைத்தார். தொடர்ந்து மூன்றாம் முறை ஆண்டவர் அழைத்த போது 'ஆண்டவரே பேசும்', உம் அடியான் கேட்கிறேன்" என்று சாமுவேல் பதிலளித்தான். ஏலியின் புதல்வர்களின் பாவச் செயல்களால் அந்த குடும்பத்தாருக்கு நீங்காத தண்டனைத் தீர்ப்பு வழங்கப்போவது பற்றி ஆண்டவர் சாமுவேலோடு பேசினார்.

சாமுவேல் திறமை வாய்ந்த நீதித்தலைவரும் இறைவாக்கினருமாக செயல்பட்டார். இஸ்ரயேலின் கடைசி நீதித்தலைவராக விளங்கியவர் சாமுவேல் ஆவார்.

குறு வினாக்கள்

1. *யோசுவா இறந்த பின் இஸ்ரயேல் மக்களை வழிநடத்தியவர்கள் யாவர்?* நீதித் தலைவர்கள்
2. *நீதித்தலைவர்களின் முக்கிய பணி என்ன?* இஸ்ரயேல் மக்களை பகைவர்களிடமிருந்து பாதுகாப்பது
3. *கானான் நாட்டில் வசித்துவந்த இஸ்ரயேலர் கானானியருக்கு சொந்தமான எவற்றை பின்பற்றி வாழ்ந்தனர்?* கானானியரின் சில வாழ்க்கை முறைகளையும், அவர்களது வழிபாட்டு முறைகளையும்

www.malankaralibrary.com

4. *யோசுவாவின் தலைமையில் இஸ்ரயேல் மக்கள் கடவுளிடம் உடன்படிக்கை செய்து கொண்ட இடம் எது?* செக்கேமில்

5. *எவ்வாறு இஸ்ரயேல் மக்கள் கடவுளிடம் பிரமாணிக்கம் தவறினார்கள்?* கானானியரின் சில வாழ்க்கை முறைகளையும், அவர்களது வழிபாட்டு முறைகளையும் பின்பற்றியதன் மூலம் இஸ்ரயேல் மக்கள் கடவுளிடம் பிரமாணிக்கம் தவறினார்கள்

6. *உடன்படிக்கையை மீறிய இஸ்ரயேலர்கள் மீண்டும் தங்கள் தவறுகளுக்காக மனம் வருந்தி ஆண்டவரிடம் முறையிட்ட போது கடவுள் அவர்களை மீட்க மக்களிடமிருந்தே யாரை தேர்ந்தெடுத்தார்?* நீதித்தலைவர்களை

7. *நீதித்தலைவர்கள் மூலமாக கடவுள் இஸ்ரயேல் மக்களை பராமரித்து, பாதுகாத்து வந்த வரலாற்றை கூறும் திருவிவிலியத்தின் புத்தகம் எது?* நீதித்தலைவர்கள் (ஆகமம்).

8. *நீதித்தலைவர்கள் என்னும் நூலில் எத்தனை நீதித்தலைவர்களின் வரலாறு விளக்கப்பட்டுள்ளன?* பன்னிரண்டு

9. எந்த நீதித்தலைவர்களின் வரலாறு நீதித்தலைவர்கள் என்னும் நூலில் குறிப்பிடப்படவில்லை? இஸ்ரயேலரை இறுதியில் வழிநடத்திய நீதித்தலைவர்களைப் பற்றி

10. *இஸ்ரயேலரின் இறைவாக்கினரும், நீதித்தலைவியுமாக இருந்தவர் யார்?* தெபோரா

11. *கானானிய மன்னன் யாபினின் அடிமைத்தனத்தில் துன்புற்றிருந்த இஸ்ரயேல் மக்களை காப்பாற்றுவதற்கு கடவுளால் அழைக்கப்பட்டவர்கள் யாவர்?* தெபோரா, பாராக்கு

12. *பாராக்கு யார் உதவியுடன் கானானியரைத் தோற்கடித்தார்?* தெபோரா

13. *தெபோரா இஸ்ரயேலுக்கு நீதி வழங்கிய காலத்தில் தலைமை ஏற்று போரை நடத்தி இஸ்ரயேலுக்கு வெற்றியைத் தந்தவர் யார்?* கடவுள் தாமே

14. *தெபோராவுக்குப் பின்னர் இஸ்ரயேல் மக்கள் மீண்டும் ஆண்டவரின் பார்வையில் தீமைச் செய்த போது ஆண்டவர் அவர்களை எந்த பகைவர்களிடம் ஒப்படைத்தார்?* மிதியானியரிடம்

15. *இஸ்ரயேலரை மிதியானியர்களிடமிருந்து மீட்பதற்காக ஆண்டவர் யாரை அழைத்தார்?* கிதியோனை

16. *கடவுள் கிதியோனை போருக்குத் தலைமையேற்க அழைத்த நிகழ்ச்சியை விவரி?* மிதியானியர்களுக்கெதிரான போருக்குத் தலைமையேற்க கடவுள் கிதியோனிடம் கேட்டுக்கொண்டார். ஆனால் அதற்கான ஆற்றல் தனக்கில்லை எனக்கூறி கிதியோன் நழுவிக்கொள்ள முயன்றார். "நான் உன்னோடு இருப்பதால் நீ தனி ஓர் ஆளாக மிதியானியரை வெல்வாய்" என்று கூறி ஆண்டவர் கிதியோனைப் வலுப்படுத்தினார். தம்மை அனுப்புவது ஆண்டவரே தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள கிதியோன் ஆண்டவரிடமிருந்து அடையாளம் வேண்டினார். அவர் தேவைப்பட்டபடியே ஆண்டவர் அவருக்கு அடையாளம் காட்டினார். போருக்கு ஆயத்தமாய் வந்த முப்பத்தி இரண்டாயிரம் இஸ்ரயேலர்களிடமிருந்து முந்நூறு நபர்களை மட்டுமே ஆண்டவரின் ஆலோசனைப்படி கிதியோன் தேர்ந்தெடுத்தார். கிதியோனின் தலைமையில் இஸ்ரயேலர்களுக்கு தங்கள் எதிரிகளிடமிருந்து ஆண்டவர் வெற்றியை அளித்தார்.

17. *ஆண்டவர் கிதியோனைப் எவ்வாறு வலுப்படுத்தினார்?* 'நான் உன்னோடு இருப்பதால் நீ தனி ஓர் ஆளாக மிதியானியரை வெல்வாய்" என்று கூறி ஆண்டவர் கிதியோனைப் எவ்வாறு வலுப்படுத்தினார்.

18. *தம்மை போருக்கு அனுப்புவது ஆண்டவரே தான் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள கிதியோன் ஆண்டவரிடமிருந்து எதை வேண்டி பெற்றுக் கொண்டார்?* அடையாளம்

19. *யோர்தானுக்கு அப்பால் கிலயாதில் வாழ்ந்திருந்த இஸ்ரயேல் மக்களை துன்புறுத்தியவர்கள் யாவர்?* அம்மோனியர்கள்

20. *அம்மோனியர்களை தோற்கடிக்கச் செய்ய இஸ்ரயேலர்களின் தலைவராக யார் நியமிக்கப்பட்டார்?* இப்தா

21. *ஆண்டவரின் உதவியுடன் அம்மோனியர்களை தோற்கடிக்கச் செய்தவர் யார்?* இப்தா

www.malankaralibrary.com

22. *எத்தனை ஆண்டுகள் இப்தா இஸ்ரயேலின் நீதித்தலைவராக நீதி நடத்தினார்?* ஆறு ஆண்டுகள்
23. *இஸ்ரயேலர்களை அச்சுறுத்தும் வகையில் மிகவும் வலுவான எதிரிகளாயிருந்தவர்கள் யாவர்?* பெலிஸ்தியர்கள்.
24. *தான் குலத்தினருக்கு உரிமையாகக் கிடைத்த பகுதிகளுக்கு அண்மையிலிருந்த நகரங்கள் எவை?* பெலிஸ்திய நகரங்கள்
25. *தான் குலத்தினரை அடிக்கடி தாக்கியவர்கள் யாவர்?* பெலிஸ்தியர்கள்
26. *சிம்சோனின் பெற்றோர் யாவர்?* மனோவாகு என்பவரின் மலடியான மனைவிக்கு ஆண்டவரின் திட்டத்தின்படி சிம்சோன் பிறந்தார்.
27. *இஸ்ரயேல் மக்களை பெலிஸ்தியரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்காக ஆண்டவர் தேர்ந்தெடுத்து தயார்படுத்திய ஒரு தனிநபர் யார்?* சிம்சோன்.
28. *தாயின் வயிற்றில் கருவாயிருந்த போதே யாரைப்பற்றிய இறைத்திட்டத்தை ஆண்டவரின் தூதர் வெளிப்படுத்தினார்?* சிம்சோன்
29. சிம்சோன் திராட்சை இரசமோ, மதுபானமோ அருந்தக்கூடாது என்றும் சவரக்கத்தி அவன் தலையில் படக்கூடாது என்றும் இறைதூதர் விலக்கியிருந்தார்.
30. ஏனெனில், அவன் (சிம்சோன்) பிறப்பிலிருந்தே கடவுளுக்கென "நாசீர்" ஆக தேர்ந்தெடுக்கப் பட்டவன்.
31. *"நாசீர் என்பதன் பொருள் என்ன?* கடவுளுக்கென அர்ப்பணமானவன்
32. *யாரோடு திருமண உறவு கொள்வது நாசீர் விரதம் உடையவர்களுக்கு விலக்கப்பட்டிருந்தது?* பிற இனப் பெண்களோடு
33. *ஆண்டவரின் விருப்பத்திற்கு எதிராக சிம்சோன் யாரை திருமணம் செய்தார்?* தெலீலா என்ற பெலிஸ்தியப்பெண்ணை
34. *தெலீலா சிம்சோனை வஞ்சிக்க காரணம் என்ன?* பெலிஸ்தியரின் வற்புறுத்தல்கள்
35. *சிம்சோனின் ஆற்றலின் இரகசியம் எங்கே அடங்கியிருக்கிறது?* அவரது தலைமுடியில்
36. *சிம்சோனின் ஆற்றலின் இரகசியம் அவரது தலைமுடியில் அடங்கியிருக்கிறது என்பதை தெலீலா எவ்வாறு அறிந்து கொண்டாள்?* சிம்சோனை வற்புறுத்திக் கேட்டு
37. *சிம்சோன் தூங்கும் போது சவரக்கத்தியால் அவரது தலைமுடியை மழித்து விட்டது யார்?* தெலீலா
38. *ஆற்றல் இழந்த சிம்சோனை பெலிஸ்தியர்கள் என்ன செய்தனர்?* ஆற்றல் இழந்த சிம்சோனை பெலிஸ்தியர்கள் சங்கிலியால் கட்டிக் கொண்டுபோயினர். அவரது கண்களைத் தோண்டி எடுத்து அவரைச் சிறையில் அடைத்தனர். மாபெரும் விழா ஒன்றில் வேடிக்கை காட்டுவதற்காக பெரிய கட்டிடத்திற்குள் சிம்சோன் கொண்டுவரப்பட்டார்.
39. *சிம்சோன் எத்தனை ஆண்டுகள் இஸ்ரயேலில் நீதித்தலைவராக விளங்கினார்?* இருபது ஆண்டுகள்
40. *இஸ்ரயேலின் கடைசி நீதித்தலைவராக விளங்கியவர் யார்?* சாமுவேல்
41. *சாமுவேலின் பெற்றோர் எந்த குலத்தை சார்ந்தவர்கள்?* எப்ராயிம்
42. *சாமுவேலின் பெற்றோர் பெயர் என்ன?* எல்கானா, அன்னா
43. *சாமுவேல் எந்த குருவின் மேற்பார்வையில் ஆண்டவருக்கு ஊழியம் செய்யவும் இறையருளில் வளரவும் செய்தான்?* ஏலி
44. *ஆண்டவர் சாமுவேலை "சாமுவேல், சாமுவேல்" என அழைத்த போது எங்கே படுத்திருந்தான்?* கடவுளின் பேழை வைக்கப்பட்டிருந்ததன் அருகில் சாமுவேல் படுத்திருந்தான்.
45. *சாமுவேல் ஆண்டவரின் அழைப்பை புரிந்து கொள்ள முடியாது யாரிடம் சென்று "இதோ! அடியேன்,*

www.malankaralibrary.com

*என்னை அழைத்தீர்களா?" என்று கேட்டான்?* ஏலியிடம்

46. *மூன்றாம் முறையும் ஆண்டவர் சாமுவேலை அழைத்த போது என்ன பதிலளிக்க வேண்டுமென ஏலி சாமுவேலிடம் கூறினார்?* 'ஆண்டவரே பேசும்', உம் அடியான் கேட்கிறேன்"

47. *ஆண்டவர் சாமுவேலோடு பேசியது என்ன?* ஏலியின் புதல்வர்களின் பாவச் செயல்களால் அந்த குடும்பத்தாருக்கு நீங்காத தண்டனைத் தீர்ப்பு வழங்கப்போவது பற்றி பேசினார்.

48. *திறமை வாய்ந்த நீதித்தலைவரும் இறைவாக்கினருமாக செயல்பட்டவர் யார்?* சாமுவேல்

49. *சாமுவேலின் காலத்திற்குப்பிறகு இஸ்ரயேலில் எந்த ஆட்சி தொடங்கியது? அரசர்களின் ஆட்சி*

50. *சாமுவேலை ஆண்டவர் அழைத்து இஸ்ரயேலின் நீதித் தலைவராக்கிய நிகழ்ச்சியை நினைவு கூரும் பாசுரமாலை பாடல் எங்குள்ளது?* வியாழன் இரவு மன்றாட்டின் மூன்றாம் கௌமா மன்றாட்டில்

51. *வியாழன் இரவு மன்றாட்டின் மூன்றாம் கௌமா மன்றாட்டில் சாமுவேலைப் பற்றி குறிப்பிடும் பாடல் எது?* இரவில் சாமுவேலை இறைவன் அழைத்தாரே, இஸ்ரயேலரை ஆட்சி நடத்த தலைவராய், உம் அடியாரின் உள்ளங்களில் என்றும் வாழ்வீரே.

52. "<u>கீழ்ப்படிதல்</u> பலிகளை விட சிறந்ததே என்று கற்பித்தார்." (1சா 15 : 22)

53. "<u>மனிதரின் மேம்பாடு</u> ஆண்டவரின் கையில் உள்ளது. <u>மறைநூல் அறிஞர்களை</u> அவர் பெருமைப்படுத்துவார்" (சீராக் 10 :5)

## பாடம் 4 இஸ்ரயேலில் அரசாட்சி

பயிற்சி வினாக்கள்

1. *சவுலின் வருகையைக் குறித்து இறைவாக்கினரான சாமுவேலுக்குக் கடவுள் எவ்வாறு வெளிப்படுத்தினார்?*

ஒருமுறை சவுல் காணாமல் போன தனது கழுதைகளை தேடி பணியாளர் ஒருவனோடு புறப்பட்டான். பல இடங்களில் தேடியும் கழுதைகள் அகப்படவில்லை. எனவே கடவுளின் அடியவரான சாமுவேலின் அறிவுரை கேட்பதற்கு சவுலிடம் பணியாளர் வற்புறுத்தினான். அதன்படி இருவரும் சாமுவேலிடம் சென்றனர்.

சாமுவேலிடம் சவுல் சென்றடைவதற்கு ஒரு நாள் முன்பாகவே அவனது வருகையைப்பற்றி ஆண்டவர் சாமுவேலிடம், "நாளை இந்நேரம் பென்யமின் நாட்டினன் ஒருவனை உன்னிடம் அனுப்புவேன். என் மக்களான இஸ்ரயேலின் தலைவனாக அவனை நீ திருப்பொழிவு செய். பெலிஸ்தியரின் கையினின்று அவன் என் மக்களை விடுவிப்பான்" (1 சாமுவேல் 9 : 16) என்று கூறினார்.

2. *சாமுவேல் சவுலை அரசராகத் திருப்பொழிவு செய்தது எவ்வாறு?*

சவுல் ஒரு நாள் சாமுவேலுடன் தங்கி உணவருந்தினான். அடுத்த நாள் விடியற்காலையில் சவுலை அனுப்புவதற்கு முன் சாமுவேல் ஒரு சிமிழ் ஒலிவ எண்ணெய் சவுலின் தலைமீது வார்த்து அவனைத் திருப்பொழிவு செய்தார். பின்பு சாமுவேல் அவனை முத்தமிட்டு, "ஆண்டவர் தம் உரிமைச் சொத்துக்குத் தலைவனாக இருக்கும்படி உன்னைத் திருப்பொழிவு செய்துள்ளார். நீ கடவுளின் மக்களை ஆட்சி செய்யவும் அனைத்து பகைவர்களினின்றும் அவர்களைப் பாதுகாக்கவும் வேண்டும்". (1சாமுவேல் 10 : 1) என்றார். பின்பு, "ஆண்டவர் உன்னோடு இருக்கிறார்" என்று ஆசி கூறி சாமுவேல் சவுலை அனுப்பி வைத்தார்.

3. *சவுலின் அரசராட்சி பற்றி விளக்குக?*

பெலிஸ்தியர்கள் இஸ்ரயேலரின் மிகக்கொடிய எதிரிகளாக இருந்தனர். அவர்கள் இஸ்ரயேலர் மீது ஆதிக்கம் செலுத்த முயன்ற நேரத்தில்தான் சவுல் அரசராகப் பதவியேற்றார். அரசரான பிறகு சவுல் முதல் முயற்சியாக ஒரு வலுவான படையை அமைத்துக் கொண்டார். பெலிஸ்தியர்களைத் தோற்கடிப்பதே அவரது குறிக்கோள். சவுலின் மகன் யோனத்தான் ஒரு கூட்டம் படைவீரர்களின் உதவியால் பெலிஸ்தியர்களுக்கு எதிராகப் போரிட்டான். யோனத்தானின் தீரச் செயலால் ஆண்டவர் இஸ்ரயேலருக்கு மிகப்பெரிய வெற்றியைக்

www.malankaralibrary.com

கொடுத்தார். யோனத்தான் கடவுளில் நம்பிக்கை வைக்கவும் அவரிடம் அடைக்கலம் தேடவும் செய்தான். அதனால் கடவுள் அவனுடன் இருந்தார். மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், பெலிஸ்தியர் ஆகிய சுற்றிலும் இருந்த எதிரிகள் அனைவருக்கும் எதிராக சவுல் போர் தொடுத்தார். அவர் திரும்பிய இடமெல்லாம் வெற்றியடைந்தார். சுற்றிலுமிருந்த பகைவரிடமிருந்து இஸ்ரயேல் மக்களைக் காப்பாற்ற சவுலுக்கு முடிந்தது.

4. *சவுல் ஆண்டவரால் ஏன், எவ்வாறு புறக்கணிக்கப்பட்டார்?*

சவுல் சாமுவேலிடமிருந்தும், கடவுளிடமிருந்தும் படிப்படியாக விலகிக்கொண்டிருந்தார். தனக்குத் தகுதியில்லாமலிருந்தும், சவுல் அகந்தையுடன் கடவுளுக்குப்பலி அர்ப்பணம் செய்தார். எனவே அரசராகத் தொடர்வதற்கான உரிமையை சவுல் இழந்து விட்டார். "நீர் ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்து விட்டதாலும், ஆண்டவர் இஸ்ரயேல் மீது அரசு செலுத்துவதினின்று உம்மை விலக்கி விட்டதாலும் நான் உம்மோடு திரும்ப வரமாட்டேன்." (1 சாமுவேல் 15:26) என்ற தண்டனைத் தீர்ப்பு சவுலின் அரசாட்சிக்கான முடிவாக அமைந்தது.

5. *தாவீதிடம் சவுலுக்கு பொறாமை ஏற்பட காரணம் யாது?*

ஆண்டவர் குறிப்பிட்டபடி சாமுவேல் பெத்லகேமைச் சார்ந்த ஈசாயின் மகன் தாவீதை அரசராகத் திருப்பொழிவு செய்தார். அன்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின்மேல் நிறைவாக இருந்தது. அதேவேளையில், ஆண்டவரின் ஆவி சவுலினின்று அகன்று போய் விட்டது. பெலிஸ்தியரை வெற்றி கொண்ட தாவீதிடம் சவுலுக்கு பெறாமை ஏற்பட்டது. தான் அரசபதவியில் நிலைத்திருப்பதற்கு தாவீதை தொலைத்துகட்ட வேண்டுமென சவுல் எண்ணினார். அக்காலத்தில் பெலிஸ்தியர் பெரும்படையுடன் இஸ்ரயேலுடன் போரிட்டனர். போரில் பெரும் காயமுற்று சவுல் இறந்தார்.

குறு வினாக்கள்

1. *இஸ்ரயேல் மக்கள் சாமுவேலிடம் வேண்டிக் கொண்டது என்ன?* தங்களுக்கு ஓர் அரசரை நியமித்து தரும்படி
2. *இஸ்ரயேலருக்கு ஒரு அரசரை திருப்பொழிவு செய்ய ஆண்டவர் யாருக்கு கட்டளையிட்டார்?* சாமுவேலுக்கு.
3. *சவுல் எந்த குலத்தைச் சார்ந்தவர்?* பென்யமின்
4. *சவுலின் தந்தை பெயர் என்ன?* கீசு
5. *சவுல் சாமுவேலை சந்திக்க சென்றதன் பின்னணி என்ன?* ஒருமுறை சவுல் காணாமல் போன தனது கழுதைகளைத்தேடி பணியாளர் ஒருவனோடு புறப்பட்டான். பல இடங்களில் தேடியும் கழுதைகள் அகப்படவில்லை. எனவே கடவுளின் அடியவரான சாமுவேலின் அறிவுரை கேட்பதற்கு சவுலிடம் அந்த பணியாளர் வற்புறுத்தினான். அதன்படி இருவரும் சாமுவேலிடம் சென்றனர்.
6. *சவுல் சாமுவேலை சந்திக்கச் சென்ற போது அவருடன் சென்றது யார்?* ஒரு பணியாளர்
7. *ஆண்டவர் சாமுவேலிடம் சவுல் வருகையைப்பற்றி எப்போது வெளிப்படுத்தினார்?* ஒரு நாள் முன்பாக
8. *பெலிஸ்தியரின் கையினின்று அவன் என் மக்களை விடுவிப்பான்" என்று ஆண்டவர் சாமுவேலிடம் யாரைக் குறித்து கூறினார்?* சவுல்
9. *சவுல் சாமுவேலுடன் எத்தனை நாட்கள் தங்கியிருந்தான்?* ஒரு நாள்
10. *எப்போது சாமுவேல் சவுலை திருப்பொழிவு செய்தார்?* விடியற்காலையில்
11. *எந்த எண்ணையால் சாமுவேல் சவுலை திருப்பொழிவு செய்தார்?* ஒலிவ எண்ணெய்
12. *எப்படி சாமுவேல் சவுலை திருப்பொழிவு செய்தார்?* ஒரு சிமிழ் ஒலிவ எண்ணெய் சவுலின் தலைமீது வார்த்து அவனைத் திருப்பொழிவு செய்தார்.
13. *சாமுவேல் சவுலை திருப்பொழிவு செய்த பின்பு சாமுவேல் அவனை முத்தமிட்டு கூறியது என்ன?* “ஆண்டவர் தம் உரிமைச் சொத்துக்குத் தலைவனாக இருக்கும்படி உன்னைத் திருப்பொழிவு செய்துள்ளார்.

www.malankaralibrary.com

நீ கடவுளின் மக்களை ஆட்சி செய்யவும் அனைத்து பகைவர்களினின்றும் அவர்களைப் பாதுகாக்கவும் வேண்டும்". (1சாமுவேல் 10 : 1)

14. *சாமுவேல் சவுலை வழியனுப்புவதற்கு முன்னர் கூறிய ஆசீர் என்ன?* "ஆண்டவர் உன்னோடு இருக்கிறார்"

15. *சாமுவேல் இஸ்ராயேல் மக்களை எங்கே ஒன்று கூட்டினார்?* மிஸ்பாவில்

16. *இஸ்ராயேலின் அரசர் யார் என்பதை அறிய என்ன செய்தனர்?* சீட்டு போட்டனர்.

17. *சீட்டு போட்ட போது இஸ்ராயேலின் அரசராக யாரை ஆண்டவர் தேர்ந்தெடுத்தார்?* சவுலை

18. *சீட்டு போட்ட பின்னர் மக்கள் பகிரங்கமாக அறிவித்தது என்ன ?* 'சவுலே அரசர்'

19. *அம்மோனியர் இஸ்ரயேலைத் தாக்கிய போது சவுலை பலமாக ஆட்கொண்டது என்ன?* கடவுளின் ஆவி

20. *சவுல் மக்களை ஒன்று திரட்டி முதன் முதலாக யாரைத் தோற்கடித்தார்?* அம்மோனியரை

21. *இஸ்ரயேலின் முதல் அரசராக பதவியேற்றவர் யார்?* சவுல்

22. *சவுல் அரசராக பதவியேற்ற காலத்தில் இஸ்ரயேலரின் மிகக்கொடிய எதிரிகளாக இருந்தவர்கள் யாவர்?* பெலிஸ்தியர்கள்

23. *சவுல் அரசராக பதவியேற்ற காலத்தில் இஸ்ரயேலர் மீது ஆதிக்கம் செலுத்த முயன்றவர்கள் யாவர்?* பெலிஸ்தியர்கள்

24. *சவுல் அரசராக பதவியேற்ற பிறகு முதல் முயற்சியும் அவரது குறிக்கோளும் என்ன?* வலுவான படையை அமைத்து பெலிஸ்தியர்களைத் தோற்கடிப்பது

25. *பெலிஸ்தியர்களுக்கு எதிராகப் போரிட உதவிய சவுலின் மகன் யார்?* யோனத்தான்

26. *பெலிஸ்தியர்களுக்கு எதிராகப் போரிட்ட போது ஆண்டவர் இஸ்ரயேலருக்கு யாருடைய தீரச் செயலால் மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்தார்?* யோனத்தானின்

27. *கடவுள் யோனத்தானோடு இருந்ததன் காரணம் என்ன?* யோனத்தான் கடவுளில் நம்பிக்கை வைக்கவும் அவரிடம் அடைக்கலம் தேடவும் செய்தான். அதனால் கடவுள் அவனுடன் இருந்தார்.

28. *சவுலுக்கு எதிராக போர் தொடுத்த முக்கிய எதிரிகள் யாவர்?* மோவாபியர், அம்மோனியர், ஏதோமியர், பெலிஸ்தியர்

29. *சவுல் சாமுவேலிடமிருந்தும், கடவுளிடமிருந்தும் படிப்படியாக விலகி செய்தது என்ன?* தனக்குத் தகுதியில்லாமலிருந்தும், சவுல் அகந்தையுடன் கடவுளுக்கு பலி அர்ப்பணம் செய்தார்.

30. *அரசராகத் தொடர்வதற்கான உரிமையை சவுல் இழந்து விட்டதன் காரணம் என்ன?* தனக்குத் தகுதியில்லாமலிருந்தும், சவுல் அகந்தையுடன் கடவுளுக்குப்பலி அர்ப்பணம் செய்தார்.

31. *சவுலின் அரசாட்சிக்கான முடிவாக அமைந்த தண்டனைத் தீர்ப்பு என்ன?* "நீர் ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்து விட்டதாலும், ஆண்டவர் இஸ்ரயேல் மீது அரசு செலுத்துவதினின்று உம்மை விலக்கி விட்டதாலும் நான் உம்மோடு திரும்ப வரமாட்டேன்." (1 சாமுவேல் 15:26)

32. *சவுலுக்குப் பதிலாக வேறொரு அரசனை திருப்பொழிவு செய்யும்படி ஆண்டவர் சாமுவேலுக்கு கட்டளையிட்டது ஏன்?* சவுலை புறக்கணிப்பதற்காக

33. *சவுலுக்குப் பின்னர் சாமுவேல் யாரை அரசராகத் திருப்பொழிவு செய்தார்?* தாவீது

34. *தாவீது எந்த இடத்தைச் சார்ந்தவர்?* பெத்லகேம்

35. *தாவீதின் தந்தை யார்?* ஈசாய்

36. *என்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின்மேல் நிறைவாக இருந்தது?* சாமுவேல் தாவீதை அரசராகத் திருப்பொழிவு செய்த நாள் முதல்

www.malankaralibrary.com

37. *என்று முதல் ஆண்டவரின் ஆவி சவுலிடமிருந்து அகன்றது?* சாமுவேல் தாவீதை அரசராகத் திருப்பொழிவு செய்த நாள் முதல்

38. தாவீதிடம் சவுலுக்கு பெறாமை ஏற்பட்டது ஏன்? பெலிஸ்தியரிடம் வெற்றி பெற்றதால்

39. *தாவீதை தொலைத்துகட்ட வேண்டுமென சவுல் எண்ணியது ஏன்?* அரசபதவியில் நிலைத்திருப்பதற்கு

40. *சவுல் எவ்வாறு இறந்தார்?* பெலிஸ்தியர் பெரும்படையுடன் இஸ்ரயேலுடன் போரிட்ட போது போரில் பெரும் காயமுற்று சவுல் இறந்தார்.

41. *சவுலின் அரசாட்சி எப்படி இருந்தது?* சவுல் இஸ்ரயேலின் முதல் அரசராக இருந்தார். அவர் சிறந்த ஆட்சியாளரும் படைத்தளபதியுமாக இருந்தார்.

42. *சவுலின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது என்ன?* ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமலிருந்ததே சவுலின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது.

43. *„சவுலின் ஆளுகை அதிகாரம் மண்ணுலகுக்குரியது. இந்த அதிகாரம் குருத்துவத்திற்குக் கட்டுப்பட்டதே“ என்ற பாசுரமாலையில் சனிக்கிழமை மூன்றாம் மணி மன்றாட்டின் பாடல் எது?*

அரசர் பதவி நிரந்தரமாம் - ஹாலேலூய்யா
அரசாட்சியும் குருத்துவமும் இருபதவிகளாம்
இவையினின்று புறப்படுமாம் சட்ட ஒழுங்குகள்
அரசரிடமிருந்து உருவாகும் இயற்கை கட்டளைகள்
குருத்துவத்திலிருந்து உருவாகும் அருளின் கட்டளைகள்
அரசர்க்கு அதிகாரம் புவியில்
குருக்களுக்கோ விண்மண்ணுலகுகளில்
குருத்துவத்தை உயர்வாக்கியவர் அவரே உன்னதரே

44. *சவுலின் வாழ்க்கை நமக்கு தரும் பாடம் என்ன?* சவுல் ஆண்டவரிடம் நம்பிக்கைக்குரியவராகச் செயல்படாததால் இறை பிரசன்னத்திலிருந்து அகற்றப்பட்டார். கீழ்ப்படியாமை மூலம் அரச பதவியிலிருந்தும் விலக்கப்பட்டார். "நாம் ஆண்டவரிடம் நம்பிக்கையும், கீழ்ப்படிதலும் உடையவர்களாக வாழ்வோம். இவ்விதமாக இறைவன் திருமுன்னிலையில் நாமும் ஏற்புடையவர்களாவோம்.

45. "உமது <u>அரசு</u> எல்லாக் காலங்களிலும் உள்ள <u>அரசு</u>. உமது <u>*ஆளுகை*</u> தலைமுறை தலைமுறையாக உள்ளது. (திருப்பாடல்கள் 145:13)

## பாடம் 5 அரசரான தாவீது

பயிற்சி வினாக்கள்

1. *இஸ்ரயேலின் அரசனாக தாவீதை ஆண்டவர் தேர்ந்தெடுத்தது எவ்வாறு?*

இஸ்ரயேல் மக்களை வழிநடத்துவதற்கு புதிய ஓர் அரசரைத் திருப்பொழிவு செய்யுமாறு கடவுள் சாமுவேலுக்கு கட்டளை இட்டார். ஆண்டவர் சாமுவேலை நோக்கி , "உன்னிடம் உள்ள கொம்பை எண்ணெயால் நிரப்பிக் கொண்டு போ. பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் உன்னை அனுப்புகிறேன். ஏனெனில் அவனது புதல்வருள் ஒருவனை அரசனாகத் தேர்ந்தெடுத்துள்ளேன்“. என்றார் . (1சாமுவேல் 16:1) ஆண்டவர் கட்டளையிட்டவாறு சாமுவேல் செயல்பட்டார். ஈசாயையும் அவர் புதல்வர்களையும் தம்முடன் பலியிட வருமாறு சாமுவேல் அழைத்தார். ஈசாயின் எட்டு புதல்வர்களில் முதல் ஏழு பேர் மட்டுமே அப்போது தந்தையுடன் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் அரசராகத் தகுதி உடையவரா என்பதை அறிய சாமுவேல் கடவுளின் விருப்பத்தை நாடினார். ஆனால் அந்த எழுவருள் எவரையும் ஆண்டவர் தேர்ந்தெடுக்கவில்லை. எட்டாவது மகனாகிய தாவீது ஆடுகளை மேய்க்கச் சென்றிருந்தான். சாமுவேலின்

www.malankaralibrary.com

ஆலோசனையின்படி ஈசாயி ஆளனுப்பி தாவீதை அழைத்தார். தாவீது வந்தபோது ஆண்டவர் சாமுவேலிடம் “தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்” (1சாமுவேல் 16:12) என்றார். உடனே சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர்கள் முன்னிலையில் தாவீதைத் திருப்பொழிவு செய்தார். அன்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது.

*2. தாவீது கோலியாத்தைத் தோற்கடித்த நிகழ்ச்சியை விளக்குக?*

சவுல் இஸ்ரயேலின் அரசராக இருந்த போது பெலிஸ்தியர் இஸ்ரயேலருக்கு எதிராகப் போரிட அணிவகுத்தனர். பெலிஸ்தியப்படையில் கோலியாத்து என்னும் பெயருடைய வீரன் ஒருவன் இருந்தான். ஒருவருக்கொருவர் போர் புரியும் முறையின்படி இஸ்ரயேலரின் ஒருவன் தன்னுடன் போரிடுவதற்கு கோலியாத்து சவால் விடுத்தான். இஸ்ரயேலரில் யாராவது ஒருவன் தன்னுடன் போரிட்டு தன்னைக் கொன்றால் பெலிஸ்தியர் இஸ்ரயேலருக்கு அடிமையாவார்கள் என்றும் மாறாக தான் இஸ்ரயேலர் ஒருவனைக் கொன்றால் இஸ்ரயேலர் பெலிஸ்தியருக்கு அடிமைகளாக வேண்டுமென்றும் கோலியாத்து நிபந்தனை விதித்தான். கோலியாத்தின் சவாலைக் கேட்டு சவுலும் இஸ்ரயேலர் அனைவரும் பெரிதும் அச்சமுற்றனர்.

சவுலின் படையுடன் போருக்குச்சென்ற தனது சகோதரர்களுக்கு உணவளிப்பதற்காக தாவீது இஸ்ரயேல் பாசறையை அடைந்தான். அப்போது கோலியாத்தின் சவால் விடுக்கும் சொற்களைத் தாவீதும் கேட்டார். தாவீது அரசனாகிய சவுலிடம் அனுமதி பெற்று கோலியாத்தை எதிர்க்கத் துணிந்தார். அவர் சவுலிடம், “என்னை சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர் இந்த பெலிஸ்தியனின் கைக்கும் தப்புவிப்பார்” (1சாமுவேல் 17 : 37) என்றார். தாவீது தம் கோலையும், கவணையும் நீரோடையிலிருந்து தேர்ந்தெடுத்த ஐந்து கற்களையும் கொண்டு கோலியாத்தை நோக்கிச் சென்றார். தாவீது தம் பையினின்று ஓர் கல் எடுத்து, கவணில் வைத்து கோலியாத்தின் நெற்றியைக்குறி பார்த்து சுழற்றி எறிந்தார். அந்தக்கல் அவனது நெற்றிக்குள் தாக்கிப் பதிந்தது. கோலியாத்து முகம் குப்புற விழுந்தான். உடனே தாவீது கோலியாத்தைக் கொன்றார்.

*3. நாத்தான் இறைவாக்கினர் தாவீதின் தவறுகளைச் சுட்டிக் காட்டியதை விளக்குக?*

தாவீதின் கடுமையான குற்றங்களை அறிந்து கொண்ட இறைவாக்கினர் நாத்தான் அவரிடம் வந்தார். அவர் தாவீதிடம் ஓர் உவமையைக் கூறினார். “ஒரு நகரில் இரு மனிதர் இருந்தனர். ஒருவன் செல்வன். மற்றவனோ ஏழை. செல்வனிடம் ஆடு மாடுகள் ஏராளம் இருந்தன. ஏழையிடம் அவன் விலைக்கு வாங்கிய ஓர் ஆட்டுக்குட்டி மட்டுமே இருந்தது. அவன் அதை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தான். ஒரு நாள் விருந்தாளி ஒருவன் செல்வனிடம் வந்தான். தனது ஆடுகளில் ஒன்றைக் கொன்று விருந்தாளிக்கு உணவு தயார் செய்ய செல்வனுக்கு மனம் இல்லை. அந்த ஏழையின் ஆட்டுக்குட்டியைப் பிடித்து விருந்தாளிக்கு உணவு தயார் செய்தான். இதைக் கேட்ட தாவீது கோபத்தால் சீற்றங்கொண்டு “ஆண்டவர் மேல் ஆணை இதைச் செய்தவன் கட்டாயம் சாக வேண்டும்” என்று நாத்தானிடம் கூறினார். தமக்குத் தானே தீர்ப்பு அளித்த தாவீதுக்கு நேராக நாத்தான் தனது கை விரலை சுட்டிக்கொண்டு, "நீயே அம்மனிதன்” என்று தாவீதைக் குற்றஞ்சாட்டினார். உரியாவின் மனைவி பத்சேபாவை வஞ்சனையால் சொந்தமாக்கிய தாவீதின் தவற்றின் கொடுமையைச் சுட்டிக்காட்டத்தான் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

குறு வினாக்கள்

1. *இஸ்ரயேலின் முதல் அரசராகிய சவுல் அரச பதவியிலிருந்து விலக்கப்பட்ட பின்னர் ஆண்டவர் சாமுவேலை நோக்கி கட்டளையிட்டது என்ன?* "உன்னிடம் உள்ள கொம்பை எண்ணெயால் நிரப்பிக் கொண்டு போ. பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் உன்னை அனுப்புகிறேன். ஏனெனில் அவனது புதல்வருள் ஒருவனை அரசனாகத் தேர்ந்தெடுத்துள்ளேன்“. (1சாமுவேல் 16:1)
2. *பலியிட வருமாறு சாமுவேல் எந்த குடும்பத்தினரை அழைத்தார்?* ஈசாயையும் அவர் புதல்வர்களையும்
3. *ஈசாயின் புதல்வர்கள் எத்தனை?* எட்டு
4. *தந்தையுடன் இருந்த ஈசாயின் ஏழு புதல்வர்களுள் அரசராகத் தகுதி உடையவர் யார் என்பதை அறிய சாமுவேல் யாருடைய விருப்பத்தை நாடினார்?* கடவுளின்.

www.malankaralibrary.com

5. *ஈசாயின் எட்டாவது மகன் யார்?* தாவீது
6. *சாமுவேல் ஈசாயின் வீட்டில் வந்த போது தாவீது எங்கே சென்றிருந்தான்?* ஆடுகளை மேய்க்கச் சென்றிருந்தான்.
7. *ஆடுகளை மேய்க்கச் சென்றிருந்த தாவீது தன் தந்தையால் அழைக்கப்பட்டு வந்தபோது ஆண்டவர் சாமுவேலிடம் கூறியது என்ன?* "தேர்ந்து கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்" (1சாமுவேல் 16:12)
8. *சாமுவேல் எவ்வாறு தாவீதைத் திருப்பொழிவு செய்தார்?* சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர்கள் முன்னிலையில் தாவீதைத் திருப்பொழிவு செய்தார்.
9. *எந்நாள் முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது?* தாவீது திருப்பொழிவு செய்யப்பட்ட நாள் முதல்
10. *சவுல் இஸ்ரயேலின் அரசராக இருந்த போது பெலிஸ்தியப்படையில் வீரம் மிக்கவனாக இருந்தவன் யார்?* கோலியாத்து
11. *கோலியாத்து இஸ்ரயேலரிடம் சண்டையிட அழைப்பு விடுத்த முறை என்ன?* ஒருவருக்கொருவர் போர் புரியும் முறை
12. *கோலியாத்து இஸ்ரயேலரிடம் நிபந்தனை விதித்தது என்ன?* ஒருவருக்கொருவர் போர் புரியும் முறையின்படி இஸ்ரயேலருள் ஒருவன் தன்னுடன் போரிடுவதற்கு கோலியாத்து சவால் விடுத்தான். இஸ்ரயேலரில் யாராவது ஒருவன் தன்னுடன் போரிட்டு தன்னைக் கொன்றால் பெலிஸ்தியர் இஸ்ரயேலருக்கு அடிமையாவார்கள் என்றும் மாறாக தான் இஸ்ரயேலர் ஒருவனைக் கொன்றால் இஸ்ரயேலர் பெலிஸ்தியருக்கு அடிமைகளாக வேண்டுமென்றும் கோலியாத்து நிபந்தனை விதித்தான்.
13. *தாவீது இஸ்ரயேல் பாசறைக்கு சென்றது ஏன்?* தாவீது, சவுலின் படையுடன் போருக்குச்சென்ற தனது சகோதரர்களுக்கு உணவளிப்பதற்காக இஸ்ரயேல் பாசறையை அடைந்தான்.
14. *தாவீது யாரிடம் அனுமதி பெற்று கோலியாத்தை எதிர்க்கத் துணிந்தார்?* அரசனாகிய சவுலிடம்
15. *தாவீது சவுலிடம் கோலியாத்தை எதிர்க்க அனுமதி பெற்று கூறியது என்ன?* "என்னை சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த ஆண்டவர் இந்த பெலிஸ்தியனின் கைக்கும் தப்புவிப்பார்" (1சாமுவேல் 17 : 37)
16. *தாவீது கோலியாத்தை எதிர்க்க கொண்டு சென்றவை என்ன?* கோலையும், கவணையும், ஐந்து கற்களையும்
17. *தாவீது கோலியாத்தை எதிர்க்க கொண்டு சென்ற கற்கள் எங்கிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை?* நீரோடையிலிருந்து
18. *தாவீதின் கல் கோலியாத்தை எங்கே தாக்கியது?* கோலியாத்தின் நெற்றிக்குள்
19. *தாவீது எவ்வாறு கோலியாத்தைக் கொன்றான்?* கோலியாத்து நெற்றிக்குள் கல் பதிந்து முகம் குப்புற விழுந்த போது தாவீது கோலியாத்தைக் கொன்றான்.
20. *சவுலுக்கு தாவீதின் திறமையில் மதிப்பு ஏற்பட தாவீதை எங்கே தங்க வைத்தார்?* தன்னுடன் அரசவையிலேயே
21. *சவுல் தாவீதைத் தமது படைத்தலைவராக நியமித்தது ஏன்?* சவுல் ஒப்படைத்த அனைத்து வேலைகளும் தாவீது திறமையாகவும் வெற்றிகரமாகவும் செய்து முடித்தார்.
22. *தாவீதை முற்றிலும் தொலைப்பதற்கான செயல்களில் சவுல் ஈடுபட்டதன் காரணம் என்ன?* இஸ்ரயேல் மக்கள் தன்னைவிட அதிகமாக தாவீதை விரும்புகின்றனர் என்ற சந்தேகம் சவுலுக்கு ஏற்பட்டது. தாவீதை முற்றிலும் தொலைப்பதற்கான செயல்களில் சவுல் ஈடுபட்டார். தாவீதும் சவுலின் கொலை முயற்சியிலிருந்து தப்பித்துக் கொள்ள அரண்மனையிலிருந்து வெளியேறினார்.

www.malankaralibrary.com

23. *சவுல் இறந்தபின்னர் தாவீது தமது எந்த வயதில் இஸ்ரயேலின் அரசர் ஆனார்?* முப்பதாம்

24. *தாவீதின் அரசர் பதவி எப்படி அமைந்தது?* தாவீதின் ஆட்சிக் காலம் இஸ்ரயேலின் பொற்காலமாக இருந்தது. இஸ்ரயேலின் வரலாற்றில் தாவீது மிகவும் வலிமை வாய்ந்த அரசராகத் திகழ்ந்தார். அவர் அரசர் மட்டுமல்லாமல் ஓர் இறைவாக்கினரும் ஆவார்.

25. *தாவீது கொண்டிருந்த இரு உயர் பதவிகள் யாவை?* அரசர், இறைவாக்கினர்

26. *தாவீது சொந்தமாக்கிய உரியா என்ற படை வீரனின் மனைவி யார்?* பத்சேபா

27. *யாருக்கு எதிரான போரில் தாவீதின் வஞ்சனையால் போர் முனையில் உரியா கொலைசெய்யப்பட்டான்?* அம்மோனியர்

28. *தாவீதின் கடுமையான குற்றங்களை எடுத்துக் கூற வந்த இறைவாக்கினர் யார்?* நாத்தான்

29. *நாத்தான் தாவீதிடம் கூறிய உவமை என்ன?* "ஒரு நகரில் இரு மனிதர் இருந்தனர். ஒருவன் செல்வன். மற்றவனோ ஏழை. செல்வனிடம் ஆடு மாடுகள் ஏராளம் இருந்தன. ஏழையிடம் அவன் விலைக்கு வாங்கிய ஓர் ஆட்டுக்குட்டி மட்டுமே இருந்தது. அவன் அதை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தான். ஒரு நாள் விருந்தாளி ஒருவன் செல்வனிடம் வந்தான். தனது ஆடுகளில் ஒன்றைக் கொன்று விருந்தாளிக்கு உணவு தயார் செய்ய செல்வனுக்கு மனம் இல்லை. அந்த ஏழையின் ஆட்டுக்குட்டியைப் பிடித்து விருந்தாளிக்கு உணவு தயார் செய்தான்.

30. *நாத்தான் கூறிய உவமை கேட்ட தாவீது கூறியது என்ன?* "ஆண்டவர் மேல் ஆணை இதைச் செய்தவன் கட்டாயம் சாக வேண்டும்"

31. *தமக்குத் தானே தீர்ப்பு அளித்த தாவீதுக்கு நேராக நாத்தான் தனது கை விரலை சுட்டிக்கொண்டு கூறியது என்ன?* "நீயே அம்மனிதன்"

32. *தாவீது தான் செய்த பாவங்களை உணர்ந்தது எப்படி?* தாவீது தான் செய்த பாவத்தின் கடுமையை உணர்ந்த போது ஆண்டவர் முன் அழுது புலம்பினார்.

33. *தாவீது அரசரின் மனமாற்றத்தை குறிக்கும் பாவ அறிக்கை என்ன?* "நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டேன்"

34. *தாவீதின் அரசாட்சியின் இறுதியில் இஸ்ரயேலில் கலகங்கள் ஏற்பட்டது ஏன்?* அதிகாரத்தைப் கைப்பற்ற

35. *யார் பராமரிப்பில் தாவீது தனக்கு எதிராக ஏற்பட்ட கலகங்களை அடக்கி சமாதானத்தை நிலைநாட்டினார்?* ஆண்டவரின்

36. *தாவீது முதியவரான போது யாரை அரசராக நியமித்தார்?* சாலமோனை

37. *சாலமோனைத் திருப்பொழிவு செய்தது யார்?* இறைவாக்கினர் நாத்தான் கூடாரத்திலிருந்து எண்ணெய்க்கொம்பை எடுத்து வந்து சாலமோனைத் திருப்பொழிவு செய்தார்.

38. *தாவீது அரசரைக் குறித்த வீடு ஆசீர்வதிக்கும் வேளையில் பாடப்படும் பாடல் எது?*

    *தாவீதின் வேண்டுதலாலே இறைவன் நெஞ்சுருகி*

    *பாவம் போக்கி இறைவாக்கு வரம் மீண்டும் தந்தாரே*

39. *தாவீது அரசரைக் குறித்த பாசுரமாலை, செவ்வாய் காலை மன்றாட்டில் பாடப்படும் பாடல் எது?*

    *தாவீது வைகறையில் ஆலயமுள் வந்து,*

    *வேண்டுதல் செய்தாரே ஆண்டவரைப் பார்த்து*

    *எந்தன் கூக்குரலை கேட்டருளும்*

    *இறைவா எந்தன் அழுகுரலை ஏற்றருளும் தேவா ஹா.... உ...ஹா*

    *பாவமதன் தலையில் காவாய் விழாமல்*

www.malankaralibrary.com

40. *51-ஆம் திருப்பாடலின் கருத்து என்ன?* தாவீது அரசர் பாவத்தில் வீழ்ந்த பின்பு ஆண்டவரின் திருமுன் சென்று பாவ விடுதலைக்காக மன்றாடுவதும், ஆண்டவர் அவருக்கு கருணை காட்டுவதும் 51-ஆம் திருப்பாடலில் விளக்கப்படுவதை நாம் உணர்கிறோம்..

41. *மலங்கரை கத்தோலிக்கத் திருச்சடங்குகளின் ஆரம்பத்தில் பயன்படுத்தப்படும் திருப்பாடல் எது?* 51-ஆம் திருப்பாடல்

42. *தாவீது அரசரின் வாழ்வு நமக்கு தரும் படிப்பினை என்ன?* தாவீது அரசர் ஆண்டவரிடம் மிகவும் நம்பிக்கைக்குரியவராக நடந்து கொண்டார். பாவத்தில் வீழ்ந்த போது அவர் பச்சாதாபத்தால் ஆண்டவரிடம் மன்னிப்புக்கு மன்றாடவும் ஆண்டவரிடம் திரும்பி வரவும் செய்தார். நாமும் ஆண்டவராகிய கடவுளுக்கு நம்பிக்கைக்குரியவராக இருப்போம். தவறு நேர்ந்தால் மனம் வருந்தி கடவுளிடம் திரும்பி வர முயற்சி செய்வோம்.

43. "நான் உயிரோடு உள்ளளவும் ஆண்டவரைப் போற்றிடுவேன். என் *வாழ்நாள்* எல்லாம் என் கடவுளைப் புகழ்ந்து பாடிடுவேன்" (திருப்பாடல்கள் 146:2)

## பாடம் 6 இஸ்ரயேல் - யூதா பிரிவு

பயிற்சி வினாக்கள்

1. *ஞானியாகிய சாலமோன் கடவுளிடம் அவநம்பிக்கை காட்டியது எவ்வாறு?*

சாலமோனின் ஆட்சி மிகவும் அமைதியாக இருந்தது. ஆனாலும் அவர் உள்ளம் முற்றிலும் ஆண்டவருக்குப் பணிந்திருக்கவில்லை. ஆண்டவரிடம் நம்பிக்கையுடையவராக நடந்து கொள்ளவில்லை. சாலமோன் வேற்றினத்துப் பெண்களை மணந்து கொள்ளவும், வேற்றினத்து தெய்வங்களை வழிபடவும் செய்தார். வேற்றுத் தெய்வங்களுக்குத் தொழுகை மேடுகளைக் கட்டினார். இவ்வாறு கடவுளாகிய ஆண்டவரிடமிருந்து அவர் இதயம் விலகிச் சென்றது. வேற்றினத்துப் பெண்களை மணக்க வேண்டாம் என ஆண்டவர் கட்டளையிட்டிருந்தும் அக்கட்டளைகளை அவர் மீறிவிட்டார்.

2. *சாலமோனின் அரசாட்சி பற்றி விளக்குக ?*

சாலமோன் இஸ்ராயேலை நாற்பது ஆண்டுகள் வழி நடத்தினார். அவரது ஆட்சியின் போது இஸ்ரயேல் நாட்டில் அமைதியும் செல்வச்செழிப்பும் காணப்பட்டது. காரணம் சுற்றிலுமிருந்த நாடுகளிலிருந்து பெரிய அளவில் போர் அச்சுறுத்தல்கள் சாலமோனுக்கு ஏற்படவில்லை. சாலமோனின் நிகரற்ற ஞானம் அவரது அனைத்து செயல்களிலும் வெளிப்பட்டது. மிக வலிமை வாய்ந்த சேனைகளும், அழகு வாய்ந்த அரண்மனைகளும், பக்திக்கு உறைவிடமான எருசலேம் தேவாலயமும் சாலமோனின் ஆட்சியின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

3. *இஸ்ரயேல் நாடு பிளவு படுவதற்கான காரணம் என்ன ?*

சாலமோனுக்குப்பின் அவரது மகன் ரெகபெயாம் அரசரானார். ரெகபெயாமின் முட்டாள் தனமான செயல்களும், வீண் பிடிவாத குணமும் நாட்டில் பெரிய கலகம் ஏற்படக் காரணமாயின. சாலமோன் அரசனின் காலத்தில் நாட்டின் தென்குலங்கள் கொடுத்ததை விட அதிகமான வரி வடகுலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது. ரெகபெயாம் ஆட்சிப்பொறுப்பேற்ற போது தங்களுக்கு வரி குறைக்கும்படி வடகுல மக்கள் வேண்டிக் கொண்டனர். ஆனால், விவேகம் இல்லாதவரான ரெகபெயாம் மக்களின் வேண்டுதலை பொருட்படுத்தவில்லை. மட்டுமன்றி வடகுலத்தாரின் வரிப்பளுவை அதிகப்படுத்தவும் செய்தார். எனவே ரெகபெயாமின் அதிகாரத்தின் கீழ்த்தொடர்ந்திருக்க வேண்டாமென்று வடகுலத்தார் தீர்மானித்தனர்.

இவ்வேளையில் சாலமோனின் ஆட்சியின் போது எகிப்துக்குத் தப்பி ஓடிய அவரது பணியாளர் எரொபவாம் என்பவன் இஸ்ரயேலுக்குத் திரும்பி வந்தான். செய்தி அறிந்த இஸ்ரயேலின் வட குலத்தார் ஒன்று சேர்ந்து எரொபவாமை இஸ்ரயேல் நாட்டுக்கு அரசராக்கினர். யூதா, பென்யமின் குலத்தவர் தவிர மீதி பத்து குலத்தவர்களும் எரொபவாமை அரசராக ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு இறைமக்களின் நாடாகிய இஸ்ரயேல் கி.மு. 931 -ல் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ரெகபெயாம் ஆட்சி செய்த நாடு யூதா என்றும் எரொபவாம் ஆட்சி செய்த நாடு இஸ்ரயேல் என்றும் அழைக்கப்பட்டன.

4. *கடவுளிடம் நம்பகத்தன்மை இழந்த இஸ்ரயேல் மக்களை தவற்றிலிருந்து விடுவிக்க கடவுள் கையாண்ட வழி என்ன?* கடவுளின் சொந்த மக்களாகிய இஸ்ரயேலர் கடவுளின் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் கடவுளை மறந்து, கட்டளைகளை கைவிட்டு, பிற தெய்வங்களை வழிபட்டார்கள். கடவுளோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறிய அவர்கள் இறைமக்கள் என்ற நிலையிலிருந்து அகன்று போயினர். அப்போது கூட அவர்களது தவற்றைத் திருத்தி மீண்டும் இறைவனிடம் கொண்டுவருவதற்காக கடவுள் இறைவாக்கினர்களை அனுப்பினார். இவ்வாறு இஸ்ரயேலில் அரசர்களின் ஆட்சி நடைபெற்ற அதே காலத்தில்தான் இறைவாக்கினர்களின் காலமும் தொடங்கியது.

5. *இஸ்ரயேல் மக்கள் மேன்மையின் உயர்விலிருந்து அடிமை வாழ்வுக்குத் தாழ்த்தப்பட்டது எவ்வாறு ?*

இஸ்ரயேலுக்கும் யூதாவுக்குமிடையே இடைவிடாமல் போர் நடைபெற்றன. இஸ்ரயேல் மக்களின் அரசர்களில் பெரும்பான்மையோர் ஆண்டவராகிய கடவுளிடம் பற்றுறுதி இல்லாமலும், நம்பிக்கை இல்லாமலும் வாழ்ந்தனர். ஆகவே இஸ்ரயேலில் தொடர்ந்து கலகங்கள் ஏற்பட்டன. இறைவாக்கினர்கள் எச்சரித்த பிறகும் அரசரும் மக்களும் பாவச்செயல்களை விட்டு விலகவில்லை. சிலை வழிபாடும் ஆண்டவர் மீது நம்பிக்கையின்மையும் தேசத்தை அழிவின் பாதைக்கு வழி நடத்தின. கி.மு. 931 - ல் நிறுவப்பட்ட வடபகுதியான இஸ்ரயேல் நாடு கி.மு. 722-ல் அசீரியா நாட்டுக்கு அடிமை ஆயிற்று. பெருமையின் உயர்விலிருந்த ஒரு நாடு வீழ்ச்சியின் பள்ளத்திற்குத் தள்ளப்படும் வரலாறு தான் இஸ்ரயேலுக்கும் ஏற்பட்டது. இஸ்ரயேலின் கடைசி அரசரான ஒசேயாவின் (கி.மு. 734 - 724) ஆட்சி காலத்தில் அசீரியர்கள் இஸ்ரயேலின் மீது படையெடுத்தனர். இஸ்ரயேலின் ஒவ்வொரு நகரங்களாக அவர்கள் பிடித்துக்கொண்டனர். இறுதியாக தலைநகரான சமாரியா நகரமும் வீழ்ச்சியுற்றது. அத்துடன் இஸ்ரயேல் மக்களில் பத்து குலங்களை உள்ளடக்கிய இஸ்ரயேல் நாடு வரலாற்றிலேயே இடம்பெறாமல் போய்விட்டது.

எருசலேம் தேவாலயம் யூதா நாட்டின் கவர்ச்சி மையமாக இருந்தது. யூதா நாட்டை ஆட்சி செய்திருந்த அரசர்களில் பலர் கடவுளின் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்துகொள்ளவில்லை. இஸ்ரயேலரிடையே நடைபெற்றது போன்று யூதா மக்களிடமும் சிலை வழிபாடு நடைபெற்றது. ஒரே கடவுளாகிய ஆண்டவரைப் புறக்கணித்ததால் யூதா மக்களும் பிற நாட்டு அரசர்களுக்கு அடிமைகளாயினர். இஸ்ரயேலின் வீழ்ச்சிக்குப்பின் சுமார் ஒன்றரை நூற்றாண்டுகாலம் யூதா ஒரே நாடாக இருந்தது. செதேக்கியா என்பவர் யூதாவின் கடைசி அரசராக இருந்தார். அவரது ஆட்சி காலத்தில் பாபிலோனிய மன்னன் நெபுகத்னேசர் யூதா நாட்டைத் தாக்கி பிடித்துக்கொண்டார். அவ்வாறு கி.மு. 587 - ல் யூதா நாடு பாபிலோனின் ஆட்சியின் கீழ் அடிமையாக்கப்பட்டது.

குறு வினாக்கள்

1. *சாலமோன் அரசரின் ஆட்சியின் போது இஸ்ரயேல் நாட்டில் அமைதியும் செல்வச்செழிப்பும் காணப்பட்டதன் காரணம் என்ன?* சுற்றிலுமிருந்த நாடுகளிலிருந்து பெரிய போர் அச்சுறுத்தல்கள் சாலமோனுக்கு ஏற்படவில்லை.
2. *சாலமோனின் அனைத்து செயல்களிலும் வெளிப்பட்டது என்ன?* சாலமோனின் நிகரற்ற ஞானம்
3. *சாலமோனின் மன்றாட்டுக்குப் பதிலாக ஆண்டவர் அவருக்கு அருளியது என்ன?* சாலமோனின் ஞானம்.
4. *தொலைதூர நாடுகளில் சாலமோன் எவ்வாறு அழைக்கப்பட்டார்?* “ஞானியாகிய அரசர்”
5. *சாலமோனின் ஆட்சிக் காலத்தின் மிகவும் அரிய சாதனையாகத் திகழ்வது எது?* எருசலேமில் ஆண்டவருக்காக அமைத்த தேவாலயம்
6. *சாலமோனின் காலம் முதல் இஸ்ரயேல் மக்களின் சமயவாழ்வு எதை மையமாகக் கொண்டிருந்தது?* எருசலேம் தேவாலயத்தை
7. *சாலமோனின் தவறான வாழ்க்கையின் போது ஆண்டவர் சாலமோனிடம் கூறியது என்ன?* "நான் உன்னோடு செய்த உடன்படிக்கையையும், நான் உனக்கு விதித்த நியமங்களையும் மீறி, நீ இவ்வாறு நடந்து கொண்டதால் உன் அரசை உன்னிடமிருந்து பறித்து அதை உன் பணியாளனுக்குக் கொடுக்கப் போவது உறுதி. ஆயினும் அரசு முழுவதையும் பறித்து விடாமல் என் அடியான் தாவீதின் பொருட்டும் நான் தேர்ந்து கொண்ட எருசலேமின் பொருட்டும் ஒரு குலத்தை உன் மகனிடம் விட்டு வைப்பேன்”

www.malankaralibrary.com

(1அரசர்கள் 11 : 11, 13)

8. *சாலமோன் இஸ்ராயேலை எத்தனை ஆண்டுகள் வழிநடத்தினார்?* நாற்பது

9. *சாலமோன் ஆட்சியின் மிகவும் சிறப்பான அம்சங்கள் யாவை?* மிக வலிமை வாய்ந்த சேனைகளும், அழகு வாய்ந்த அரண்மனைகளும், பக்திக்கு உறைவிடமான எருசலேம் தேவாலயமும் சாலமோனின் ஆட்சியின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

10. *இஸ்ரயேல் மக்களை பெருமையின் உன்னத நிலைக்கு அழைத்துச் சென்ற அரசர் யார்?* சாலமோன்

11. *சாலமோன் இறந்த ஆண்டு என்ன* கி.மு. 931 -ல்

12. *சாலமோனின் இறப்புக்குப் பின் இஸ்ரயேல் நாட்டுக்கும் மக்களுக்கும் நேர்ந்தது என்ன?* சாலமோனின் இறப்புக்குப் பின் இஸ்ரயேல் நாடும் மக்களும் சிதறத் தொடங்கின.

13. *சாலமோனுக்குப்பின் அரசரான அவரது மகன் யார்?* ரெகபெயாம்

14. *ரெகபெயாமின் ஆட்சிக்காலத்தில் இஸ்ராயேலில் பெரிய கலகம் ஏற்படக் காரணம் என்ன?* ரெகபெயாமின் முட்டாள் தனமான செயல்களும், வீண் பிடிவாத குணமும் நாட்டில் பெரிய கலகம் ஏற்படக் காரணமாயின.

15. *எந்த அரசனின் காலத்தில் இஸ்ரயேல் நாட்டின் தென்குலங்கள் கொடுத்ததை விட அதிகமான வரி வடகுலங்களுக்கு விதிக்கப்பட்டிருந்தது?* சாலமோன்

16. *ரெகபெயாம் வடகுலங்களுக்கு செய்த சதி என்ன?* ரெகபெயாம் ஆட்சிப்பொறுப்பேற்ற போது தங்களுக்கு வரி குறைக்கும்படி வடகுல மக்கள் வேண்டிக் கொண்டனர். ஆனால், விவேகம் இல்லாதவரான ரெகபெயாம் மக்களின் வேண்டுதலை பொருட்படுத்தவில்லை. மட்டுமன்றி வடகுலத்தாரின் வரிப்பளுவை அதிகப்படுத்தவும் செய்தார்.

17. *ரெகபெயாமின் அதிகாரத்தின் கீழ் தொடர்ந்திருக்க வேண்டாமென்று வடகுலத்தார் தீர்மானித்ததன் காரணம் என்ன?* வடகுலத்தாரின் வரிப்பளுவை அதிகப்படுத்தியதால்

18. *சாலமோனின் ஆட்சியின் போது எகிப்துக்குத் தப்பி ஓடிய அவரது பணியாளராய் இருந்தவர் யார்?* எரொபவாம்

19. *இஸ்ரயேலின் வட குலத்தார் ஒன்று சேர்ந்து யாரை இஸ்ரயேல் நாட்டுக்கு அரசராக்கினர்?* எரொபவாமை.

20. *எரொபவாமை அரசராக ஏற்றுக் கொண்ட குலங்கள் எத்தனை?* பத்து

21. *ரெகபெயாமை அரசராக ஏற்றுக் கொண்ட குலங்கள் யாவை?* யூதா, பென்யமின் குலத்தவர்கள்

22. *இறைமக்களின் நாடாகிய இஸ்ரயேல் இரண்டாகப் பிரிக்கப்பட்ட ஆண்டு எது?* கி.மு. 931 -ல்

23. *எரொபவாம் ஆட்சி செய்த நாடு எது?* இஸ்ரயேல்

24. *ரெகபெயாம் ஆட்சி செய்த நாடு எது?* யூதா

25. *இஸ்ரயேல் மற்றும் யூதா நாடுகளை அழிவின் பாதைக்கு வழி நடத்திய முக்கிய காரணிகள் யாவை?* சிலை வழிபாடும் ஆண்டவர் மீது நம்பிக்கையின்மையும் இஸ்ரயேல், யூதா நாடுகளை அழிவின் பாதைக்கு வழி நடத்தின.

26. *இஸ்ரயேல் நாடு எப்போது அசீரியா நாட்டுக்கு அடிமை ஆயிற்று* கி.மு. 722-ல்

27. *இஸ்ரயேலின் கடைசி அரசர் யார்?* ஒசேயா (கி.மு. 734 - 724)

28. *ஒசேயாவிடமிருந்து இஸ்ரயேலின் நகரங்களை கைப்பற்றியவர்கள் யாவர்?* அசீரியர்கள்

29. *இஸ்ரயேலர்கள் இறுதியாக இழந்த தலைநகரம் எது?* சமாரியா

30. *அசீரியர்கள் இஸ்ரயேலரை கைப்பற்றிய பின்னர் இஸ்ரயேல் நாட்டுக்கு நிகழ்ந்தது என்ன?* அசீரியர்கள் இஸ்ரயேலரை கைப்பற்றிய பின்னர் இஸ்ரயேல் மக்களில் பத்து குலங்களை உள்ளடக்கிய இஸ்ரயேல்

www.malankaralibrary.com

நாடு வரலாற்றிலேயே இடம்பெறாமல் போய்விட்டது.

31. *யூதா நாட்டின் கவர்ச்சி மையமாக இருந்தது எது?* எருசலேம் தேவாலயம்

32. *இஸ்ரயேலின் வீழ்ச்சிக்குப்பின் எத்தனை காலம் யூதா ஒரே நாடாக இருந்தது?* சுமார் ஒன்றரை நூற்றாண்டுகாலம்

33. *யூதா மக்களும் பிற நாட்டு அரசர்களுக்கு அடிமைகளாக காரணம் என்ன?* யூதா நாட்டை ஆட்சி செய்திருந்த அரசர்களில் பலர் கடவுளின் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்துகொள்ளவில்லை. இஸ்ரயேலரிடையே நடைபெற்றது போன்று யூதா மக்களிடமும் சிலை வழிபாடு நடைபெற்றது. ஒரே கடவுளாகிய ஆண்டவரைப் புறக்கணித்ததால் யூதா மக்களும் பிற நாட்டு அரசர்களுக்கு அடிமைகளாயினர்.

34. *யூதாவின் கடைசி அரசராக இருந்தவர் யார்?* செதேக்கியா

35. *யூதா நாட்டை தாக்கி பிடித்துக்கொண்ட பாபிலோனிய மன்னன் யார்?* நெபுகத்னேசர்.

36. *யூதா நாடு பாபிலோனியரால் அடிமையாக்கப்பட்டது எப்போது?* கி.மு.587-ல்

37. *இஸ்ரயேலர்கள் கடவுளுக்கு எதிராக செய்த குற்றங்கள் என்ன?* 1. கடவுளின் சொந்த மக்களாகிய இஸ்ரயேலர் கடவுளின் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்ளவில்லை. 2. அவர்கள் கடவுளை மறந்து, கட்டளைகளை கைவிட்டு, பிற தெய்வங்களை வழிபட்டார்கள். 3. கடவுளோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீறிய அவர்கள் இறைமக்கள் என்ற நிலையிலிருந்து அகன்று போயினர்.

38. *இஸ்ரயேலர்கள் கடவுளுக்கு எதிராக அரச ஆட்சி காலத்தில் குற்றங்கள் செய்தபோது மீண்டும் கடவுள் யாரை அனுப்பினார்?* இறைவாக்கினர்களை

39. *இஸ்ரயேலில் அரசாட்சி காலத்திலே துவங்கிய மற்ற ஆட்சி நிலை யாது?* இறைவாக்கினர்களின் காலம்

40. *கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் உள்ள ஆழ்ந்த உறவை ஞானியாகிய சாலமோன் அரசர் எந்த திருவிவிலிய நூல் வழியாக விளக்கியிருக்கிறார்?* 'இனிமை மிகு பாடல்'

41. *திருமணம் என்னும் திருவருட்சாதனக் கொண்டாட்டத்தின் போது சாலமோனை எவ்வாறு திருச்சபை நினைவு கூர்கிறது?*

உவமைகளால் / சாலமன் சொன்- னாரிதுவாம்

எழில் வதனீ - மிகையாய் நீ / மெச்சிடுமோர் நின் காதலனார்?

சச்சம் பல்லாயிரமதில் மேலானவர் / இசரேல் பூங்கா வா மவரின்

வெண்ணிறர் யாக்கோபின் கொடியின் / செந்நிறர் நாரதின் தைலத்தின்

"வன்மையர் லெபனோன் கேதுருவின் / காட்சிதனில் இறை நிகரார்

மாட்சி மிகும் இவரை நாம் புகழ்செய்-வோ-மே.

42. "ஆண்டவருக்கு <u>நன்றி</u> செலுத்துங்கள் ஏனெனில் அவர் <u>நல்லவர்</u>;! என்றென்றுமுள்ளது அவரது <u>பேரன்பு</u> (திருப்பாடல்கள் 106 : 1)

## பாடம் 7 எலியாவும் எலிசாவும்

பயிற்சி வினாக்கள்

1. *'இறைவாக்கினர்' என்பவர்கள் யார்?*

இஸ்ரயேலின் சமய வாழ்விலும், சமூக வாழ்விலும் இறைவாக்கினர்கள் மிக வலுவான இடம் பெற்றிருந்தனர். எபிரேய மொழியில் 'நபி' என்ற சொல்லே 'இறைவாக்கினர்' என்ற பொருளில் கையாளப்படுகிறது. எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை இறையருளால் முன்னதாகவே அறிவிப்பவர் தான் இறைவாக்கினர். கடவுள் நேரடியாக அழைத்து மக்களிடமிருந்து வேறுபடுத்தப்பட்டவர்களே இறைவாக்கினர்கள். 'இறைமனிதர்கள்' என்றே அவர்கள் அறியப்பட்டனர்.

www.malankaralibrary.com

*2. இறைவாக்கினர்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?* சில இறைவாக்கினர்களின் இறைவாக்குகளும் செயல்பாடுகளும் நூல் வடிவில் திருவிவிலியத்தில் இடம்பெற்றுள்ளன. பழைய ஏற்பாட்டில் தமது பெயரால் நூலின் பெயரைக் கொண்டுள்ள இறைவாக்கினர்களை "கானோனிக இறைவாக்கினர்" என்று அழைக்கிறோம். திருவிவிலியத்தில் தமது பெயரால் நூல் அமையப்படாத இறைவாக்கினர்களை 'அகானோனிக இறைவாக்கினர்கள்' எனலாம்.

*3. இறைவாக்கினர் செய்து வந்த பணிகள் யாவை?*

1.இஸ்ரயேலின் இறைவாக்கினர்கள் ஆண்டவர் சார்பாக மக்களிடம் பேசவும், ஆண்டவரின் விருப்பத்தை மக்களுக்கு வெளிப்படுத்திக் கொடுக்கவும் செய்தனர். 2.ஆண்டவர் சார்பாகப் பேசி வந்த இறைவாக்கினர்கள் அரசர்களையும் மக்களையும் நல்லொழுக்க பாதையில் வாழ்வதற்கும் ஆண்டவரிடம் நம்பகமான முறையில் நடந்துகொள்வதற்கும் ஊக்கமளித்தனர். 3.ஆண்டவர் இஸ்ராயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி வாழவும் இறைகட்டளைகளை அனுசரிக்கவும் இறைவாக்கினர்கள் மக்களை ஆயத்தப்படுத்தினர். 4.அவர்கள் சிலை வழிபாட்டுக்கெதிராக கண்டிப்பான நிலையைக் கைக்கொண்டனர். 5.இஸ்ரயேல் மக்களுடனான கடவுளின் அன்பும் இரக்கமும், பராமரிப்பும் இறைவாக்கினர்களின் தூதுரைகளில் நிறைந்திருந்தன.

*4. 'எலியா', 'எலிசா' ஆகிய சொற்களின் பொருள் குறிப்பிடுக?.* எலியா என்ற சொல்லின் பொருள் “எனது கடவுள் யாவே” என்பதாகும். எலிசா என்ற சொல்லின் பொருள் 'ஆண்டவர் மீட்டார்' என்பதாகும்.

*5. இஸ்ரயேலின் கடவுள் உண்மைக் கடவுள்' என எலியா எவ்வாறு நிரூபித்துக் காட்டினார்?*

உண்மைக்கடவுள் யார் என்பதை உணர்த்துவதற்காக இஸ்ரயேல் மக்களையும், பாகாலின் பொய்வாக்கினர்களையும் கர்மேல் மலையில் ஒன்றுகூட்ட எலியா ஆகாபுக்கு கூறினார். அதன்படி ஆகாபு அனைவரையும் கர்மேல் மலை மீது ஒன்று கூட்டினான். அங்கே உண்மை கடவுளை கண்டறிவதற்கான நிபந்தனையை எலியா கூறினார். பாகாலின் பொய் வாக்கினர்கள் பாகாலுக்கும் எலியா ஆண்டவராகிய கடவுளுக்கும் பலி அர்ப்பணம் செய்ய வேண்டும். நெருப்பு மூலம் பதிலளிக்கும் கடவுளே உண்மைக் கடவுள் என்பதே நிபந்தனை. 'நெருப்பை அனுப்பி பலியை ஏற்றுக் கொள்பவரே உண்மைக் கடவுள்' என்ற நிபந்தனைக்கு மக்கள் ஒப்புக்கொண்டனர்.

எலியா சொன்னபடியே பாகாலின் பொய்வாக்கினர்கள் காளையைக் கொண்டுவந்து பலிக்கான ஆயத்தம் செய்தனர். காலை முதல் மாலை வரை பாகாலின் பெயரைக் கூப்பிட்டு பலியை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். அவர்களின் வேண்டுதல்களுக்கு எந்தப்பதிலும் வரவில்லை. நெருப்பு இறங்கவுமில்லை. பலி ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை. அதைத்தொடர்ந்து எலியா பலிசெலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அவர் பலிபீடத்தின் அருகில் வந்து, “அபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் கடவுளாகிய ஆண்டவரே ! இஸ்ரயேலின் கடவுள் நீரே என்றும், இவற்றையெல்லாம் நான் உம் வாக்கின் படியே செய்தேன் என்றும் இன்று விளங்கச் செய்தருளும். ஆண்டவரே எனக்குப்பதில் தாரும்”. (1அரசர்கள் 18 : 36 - 37) என்று ஆண்டவரிடம் வேண்டினார். தாழ்மையும் நம்பிக்கையும் நிறைந்த எலியாவின் வேண்டுதல் கேட்கப்பட்டது. உடனே ஆண்டவரிடமிருந்து நெருப்பு கீழே இறங்கி அந்த எரிபலியைச் சுட்டெரித்தது. இதைக்கண்ட மக்களனைவரும் முகம் குப்புற விழுந்து, “ஆண்டவரே கடவுள் ! ஆண்டவரே கடவுள்” என்றனர். ஆண்டவராகிய கடவுளிடம் கொண்ட நம்பிக்கையை மக்கள் உறுதிப்படுத்திக் கூறியபோது மழை மீண்டும் பெய்யும்' என்று எலியா அறிவித்தார். அவர் கூறியது போல் பெருமழை பெய்தது. வறட்சி அகன்றது. நாடு செழிப்படைந்தது. (1 அரசர்கள் அதிகாரம் 18 - 45)

*6. எலியா விண்ணேற்பு அடைந்தது எவ்வாறு?*

ஆண்டவரின் தூதர் எலியாவை ஒரேபு என்ற கடவுளின் மலைக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஓர் அடக்கமான மெல்லிய ஒலியில் ஆண்டவரின் பிரசன்னத்தை எலியா உணர்ந்தார். அவ்வாறு எலியாவுக்கு இறைஅனுபவத்தின் உன்னத நிலையை அடைய முடிந்தது. எலியாவின் வாழ்க்கை ஆண்டவராகிய கடவுள் மீது பேரார்வம் கொண்டதாய் அமைந்தது. எலியா நீதியின் இறைவாக்கினராக இருந்தார். கடவுளுக்காக வாழ்ந்த எலியாவை ஆண்டவர் நெருப்புத்தேரில் விண்ணகத்திற்கு எடுத்துக்கொண்டார்.

www.malankaralibrary.com

*7. எலிசா நிகழ்த்திய அருஞ்செயல்கள் யாவை?*

எலிசா இறைவாக்கினர் தனது வாழ்நாளில் ஏழைகளும் நோயுற்றோரும் கொடுமைப்படுத்தப்பட்டோருமான ஏராளம் மனிதர்களுக்கு அருஞ்செயல்கள் மூலம் ஆறுதலளித்துள்ளார். ஏழைக்கைம்பெண் ஒருவருக்குத் தேவையான எண்ணெயை அருஞ்செயல் மூலமாகப் பெருகச்செய்து வாழ்நாள் முழுவதும் பிழைப்புக்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்தார். மலடியான சூனேமியப் பெண்ணுக்கு மகன் பிறப்பதாக எலிசா உரைத்த இறைவாக்கு அப்படியே நிறைவேறிற்று. பிறகு அந்த மகன் இறந்தபோது அவனை உயிர்பித்த எலிசா அக்குடும்பத்திற்கு மகிழ்ச்சியை அளித்தார். தொழுநோயாளியான சிரியா நாட்டுப்படைத்தலைவன் நாமானின் நோயைக் குணப்படுத்தினார். இவ்வாறு எலிசா எண்ணற்ற அருஞ்செயல்கள் மூலம் ஆண்டவராகிய கடவுளுக்கு மக்களிடமுள்ள இரக்கத்தையும் பராமரிப்பையும் வெளிப்படுத்தினார்.

குறு வினாக்கள்

1. *இஸ்ரயேலில் எப்போது முதல் இறைவாக்கினர்களின் காலமும் தொடங்கியது?* மன்னர் ஆட்சியின் தொடக்கம் முதலே.
2. *இஸ்ரயேலின் எந்தெந்த தலங்களில் இறைவாக்கினர்கள் மிக வலுவான இடம் பெற்றிருந்தனர்?* இஸ்ரயேலின் சமய வாழ்விலும், சமூக வாழ்விலும்
3. *இறைவாக்கினர்கள் எதற்காக தங்களது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்தனர்?* இறைவாக்கினர்கள் கடவுளின் சொந்த மக்களாகிய இஸ்ரயேலை ஒரே கடவுள் நம்பிக்கையில் உறுதிப்படுத்துவதற்காக தங்களது வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்தனர்.
4. *'இறைவாக்கினர்' என்பதன் எபிரேய மொழிச் சொல் எது?* 'நபி'
5. *இறைவாக்கினர்கள் எக்கால நிகழ்வுகளை அறிவிப்பவர்கள்?* எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை இறையருளால் முன்னதாகவே அறிவிப்பவர்கள் தான் இறைவாக்கினர்கள்.
6. *இறைவாக்கினர்கள் இஸ்ரயேல் மக்களுக்கும் கடவுளுக்கும் இடையே இருந்த நிலை என்ன?* இஸ்ரயேலின் இறைவாக்கினர்கள் ஆண்டவர் சார்பாக மக்களிடம் பேசவும், ஆண்டவரின் விருப்பத்தை மக்களுக்கு வெளிப்படுத்திக் கொடுக்கவும் செய்தனர்.
7. கடவுள் நேரடியாக <u>அழைத்து</u> மக்களிடமிருந்து <u>வேறுபடுத்தப்பட்டவர்களே</u> இறைவாக்கினர்கள்.
8. *இறைவாக்கினர்கள் எவ்வாறு அறியப்பட்டனர்?* 'இறைமனிதர்கள்'
9. *ஆண்டவர் சார்பாக பேசி வந்த இறைவாக்கினர்கள் எதற்கு ஊக்கமளித்தனர்?* ஆண்டவர் சார்பாக பேசி வந்த இறைவாக்கினர்கள் அரசர்களையும் மக்களையும் நல்லொழுக்கப் பாதையில் வாழ்வதற்கும் ஆண்டவரிடம் நம்பகமான முறையில் நடந்துகொள்வதற்கும் ஊக்கமளித்தனர்.
10. *இறைவாக்கினர்கள் எதற்காக மக்களை ஆயத்தப்படுத்தினர்?* ஆண்டவர் இஸ்ராயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி வாழவும் இறைகட்டளைகளை அனுசரிக்கவும் இறைவாக்கினர்கள் மக்களை ஆயத்தப்படுத்தினர்.
11. *இறைவாக்கினர்கள் எதற்கெதிராக கண்டிப்பான நிலையைக் கைக்கொண்டனர்?* சிலை வழிபாட்டுக்கெதிராக
12. *இறைவாக்கினர்களின் தூதுரைகளில் நிறைவாக குறிப்பிடப்பட்டவை என்ன?* இஸ்ரயேல் மக்களுடனான கடவுளின் அன்பும் இரக்கமும், பராமரிப்பும் இறைவாக்கினர்களின் தூதுரைகளில் நிறைந்திருந்தன.
13. *இறைவாக்கினர்களின் என்னென்ன நிகழ்வுகள் நூல் வடிவில் திருவிவிலியத்தில் இடம்பெற்றுள்ளன?* சில இறைவாக்கினர்களின் இறைவாக்குகளும் செயல்பாடுகளும்
14. பழைய ஏற்பாட்டில் தமது பெயரால் நூல் பெயரும் இடம்பெற்றுள்ள இறைவாக்கினர்களை <u>"கானோனிக இறைவாக்கினர்"</u> என்று அழைக்கிறோம்.
15. திருவிவிலியத்தில் தமது பெயரால் நூல் அமையப்படாத இறைவாக்கினர்களை <u>'அகானோனிக</u>

www.malankaralibrary.com

இறைவாக்கினர்கள்' எனலாம்.

16. *இஸ்ரயேலின் வரலாற்றில் மிகவும் சிறப்பிடம் பெற்ற இரண்டு அகானோனிய இறைவாக்கினர்கள் யாவர்?* எலியா, எலிசா

17. *எலியா எந்நாட்டு இறைவாக்கினராக இருந்தார்?* இஸ்ரயேலின் இறைவாக்கினரே.

18. *எலியா இறைதூதுரைக்கும் பணியாற்றிய காலம் எது?* கி.மு. 870-க்கும், 850-க்கும் இடைப்பட்ட காலம்

19. *இஸ்ரயேலின் வரலாற்றில் மிகப்பெரிய இறைவாக்கினராய் இருந்தவர் யார்?* எலியா

20. *அனைத்து இறைவாக்கினர்களின் அடையாளமாகவும் பிரதிநிதியாகவும் திகழ்ந்தவர் யார்?* எலியா

21. எலியா என்ற சொல்லின் பொருள் "எனது கடவுள் யாவே" என்பதாகும்.

22. *இஸ்ரயேலர்கள் ஆண்டவராகிய கடவுளை அழைத்த பெயர் என்ன?* "யாவே".

23. *எலியாவின் காலத்தில் இஸ்ரயேல் நாட்டை ஆட்சி செய்த அரசர் யார்?* ஆகாபு

24. *ஆகாபு தனது மனைவியின் தூண்டுதலால் செய்து என்ன?* ஆகாபு தனது மனைவி ஈசபேலின் தூண்டுதலால் பாகால் என்னும் பொய் தெய்வத்தை வணங்கவும், கோவிலும், பலிபீடமும் கட்டினான்

25. *எலியா ஆகாபு அரசனிடம் வறட்சியைப்பற்றி இறைவாக்குரைத்தது என்ன?* எலியா ஆகாபு அரசனிடம் "நான் பணியும் இஸ்ரயேலின் கடவுளான வாழும் ஆண்டவர் மேல் ஆணை! என் வாக்கினாலன்றி, வரும் ஆண்டுகளில் பனியோ மழையோ பெய்யாது" என்றார் (1அரசர்கள் 17 : 1).

26. *வறட்சியைப்பற்றி இறைவாக்குரைத்த பின் எலியா எவ்வாறு இறை பராமரிப்பில் வாழ்ந்து வந்தார்?* வறட்சியைப்பற்றி இறைவாக்குரைத்த பின் எலியா அரசரிடமிருந்து மறைந்து வாழ்ந்தார். அவரைக்கடவுள் மிகவும் சிறப்பாகப் பராமரித்துப் பாதுகாத்தார். அவர் உயிர்வாழ ஓடையிலிருந்து தண்ணீரும், காகங்கள் வழி உணவும் கடவுள் வழங்கினார்.

27. *எலியா கைம்பெண்ணின் வீட்டில் விருந்தினராகத் தங்கியபோது நிகழ்ந்தது என்ன?* எலியா சாரிபாத்தில் ஒரு கைம்பெண்ணின் வீட்டில் வறட்சி முடியும் வரை விருந்தினராகத் தங்கினார். அந்த கைம்பெண்ணின் மகன் இறந்த போது எலியா அவனுக்கு ஆச்சரியமான முறையில் உயிரளித்தார்.

28. *எலியா வறட்சி முடியும் வரை விருந்தினராகத் தங்கிய கைம்பெண்ணின் வீடு எங்கே உள்ளது?* சாரிபாத்து

29. *எலியா காலத்தில் இஸ்ரயேல் நாட்டில் எத்தனை ஆண்டுகள் மழை பெய்யவில்லை?* மூன்றாண்டுகள்

30. *வறட்சியின் மூன்றாண்டுகளுக்கு பின் எலியா ஆகாபை காணச்சென்ற போது நிகழ்ந்தது என்ன?* மூன்றாண்டுகளுக்கு பின் ஆண்டவரின் கட்டளையின்படி எலியா ஆகாபை காணப் புறப்பட்டார். அந்நேரத்தில் ஆகாபும் எலியாவைத் தேடிக் கொண்டிருந்தான். எலியா வருவதாக அறிந்த ஆகாபு ஓடிச்சென்று அவரைக் கண்டான். ஆண்டவரின் கட்டளைகளைப் புறக்கணித்து விட்டு பொய்த்தேவனாகிய பாகாலை வணங்கிய ஆகாபு தான் இஸ்ரயேலின் துன்பங்களுக்கும் வறட்சிக்கும் காரணம் என்று எலியா குற்றஞ்சாட்டினார்.

31. *இஸ்ரயேலின் துன்பங்களுக்கும் வறட்சிக்கும் காரணமாக எலியா குற்றஞ்சாட்டியது என்ன?* ஆண்டவரின் கட்டளைகளைப் புறக்கணித்து விட்டு பொய்த்தேவனாகிய பாகாலை வணங்கிய ஆகாபு தான் இஸ்ரயேலின் துன்பங்களுக்கும் வறட்சிக்கும் காரணம் என்று எலியா குற்றஞ்சாட்டினார்.

32. *எதற்காக ஆகாபு கர்மேல் மலையில் இஸ்ரயேல் மக்களையும், பாகாலின் பொய்வாக்கினர்களையும் ஒன்று திரட்டினார்?* உண்மைக்கடவுள் யார் என்பதை உணர்த்துவதற்காக இஸ்ரயேல் மக்களையும், பாகாலின் பொய்வாக்கினர்களையும் கர்மேல் மலையில் ஒன்று திரட்டும் படி எலியா ஆகாபுக்கு கூறினார். அதன்படி ஆகாபு அனைவரையும் கர்மேல் மலை மீது ஒன்று திரட்டினான்.

33. *எலியா கூறிய உண்மைக் கடவுளை கண்டறிவதற்கான நிபந்தனை யாது?* பாகாலின் பொய்வாக்கினர்கள் பாகாலுக்கும், எலியா ஆண்டவராகிய கடவுளுக்கும் பலி அர்ப்பணம் செய்ய வேண்டும். நெருப்பு மூலம் பதிலளிக்கும் கடவுளே உண்மைக் கடவுள் என்பதே நிபந்தனை.

www.malankaralibrary.com

34. *எலியாவின் நிபந்தனைப்படியே பாகாலின் பொய்வாக்கினர்கள் செய்தவை என்ன?* பாகாலின் பொய்வாக்கினர்கள் காளையைக் கொண்டுவந்து பலிக்கான ஆயத்தம் செய்தனர். காலை முதல் மாலை வரை பாகாலின் பெயரைக் கூப்பிட்டு பலியை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். அவர்களின் வேண்டுதல்களுக்கு எந்த பதிலும் வரவில்லை. நெருப்பு இறங்கவுமில்லை. பலி ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை.

35. *எலியா பலி செலுத்திய முறையைக் கூறுக?* எலியா பலிசெலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அவர் பலிபீடத்தின் அருகில் வந்து, "அபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் கடவுளாகிய ஆண்டவரே! இஸ்ரயேலின் கடவுள் நீரே என்றும், இவற்றையெல்லாம் நான் உம் வாக்கின் படியே செய்தேன் என்றும் இன்று விளங்கச் செய்தருளும். ஆண்டவரே எனக்குப்பதில் தாரும்". (1அரசர்கள் 18 : 36 - 37) என்று ஆண்டவரிடம் வேண்டினார். தாழ்மையும் நம்பிக்கையும் நிறைந்த எலியாவின் வேண்டுதல் கேட்கப்பட்டது. உடனே ஆண்டவரிடமிருந்து நெருப்பு கீழே இறங்கி அந்த எரிபலியைச் சுட்டெரித்தது.

36. *எலியாவின் பலிப்பொருள் சுட்டெரிக்கப்பட்டபோது மக்களனைவரும் முகம் குப்புற விழுந்து கூறியது என்ன?* "ஆண்டவரே கடவுள்! ஆண்டவரே கடவுள்"

37. *எலியா மழை பொழியச்செய்த நிகழ்வைக் கூறுக?* எலியாவின் பலிப்பொருள் சுட்டெரிக்கப்பட்டபோது மக்களனைவரும் முகம் குப்புற விழுந்து, "ஆண்டவரே கடவுள்! ஆண்டவரே கடவுள்" என்றனர். ஆண்டவராகிய கடவுளிடம் கொண்ட நம்பிக்கையை மக்கள் உறுதிப்படுத்திக் கூறியபோது மழை மீண்டும் பெய்யும்' என்று எலியா அறிவித்தார். அவர் கூறியது போல் பெருமழை பெய்தது. வறட்சி அகன்றது. நாடு செழிப்படைந்தது. (1 அரசர்கள் அதிகாரம் 18 - 45)

38. எலியாவை ஒரேபு என்ற கடவுளின் மலைக்கு அழைத்துச் சென்றவர் யார்? ஆண்டவரின் தூதர்

39. ஆண்டவராகிய கடவுள் மீது <u>பேரார்வம்</u> கொண்டதாய் அமைந்தது <u>எலியாவின்</u> வாழ்க்கை.

40. *எலியா எந்த இறைவாக்கினராக இருந்தார்?* நீதியின் இறைவாக்கினராக

41. *கடவுளுக்காக வாழ்ந்த எலியாவை ஆண்டவர் (எவ்வாறு) எத்தேரில் விண்ணகத்திற்கு எடுத்துக்கொண்டார்?* நெருப்புத்தேரில்.

42. *எலியா தனது பணியைத் தொடர யாரை இறைவாக்கினராக அருட்பொழிவு செய்தார்?* எலிசா

43. *எலிசாவின் தந்தை யார்?* சாபாற்று

44. எலிசா என்ற சொல்லின் பொருள் '<u>ஆண்டவர் மீட்டார்</u>' என்பதாகும்.

45. *எலியா எலிசாவை தனது சீடராக்கிய முறையைக் கூறுக?* எலியா அவரிடம் சென்று, தம் மேலாடையை அவரிடம் தூக்கிப் போட்டார். தமது சீடராவதற்கான இறைவாக்கினரின் அடையாளமே இதுவாகும். எலிசா எலியாவைப் பின்பற்றினார்.

46. *எலிசா எத்தனை ஆண்டுகள் இஸ்ரயேலின் இறைவாக்கினராக ஆண்டவரின் அளவற்ற இரக்கத்தை எடுத்துரைத்தார்?* சுமார் ஐம்பது ஆண்டுகள்

47. *எலிசா இறைவாக்கினர் யாருக்குத் தேவையான எண்ணெயை அருஞ்செயல் மூலமாகப் பெருகச்செய்து வாழ்நாள் முழுவதும் பிழைப்புக்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்?* ஏழைக்கைம்பெண்

48. *யாருக்கு மகன் பிறப்பதாக எலிசா உரைத்த இறைவாக்கு நிறைவேறிற்று?* மலடியான சூனேமியப் பெண்ணுக்கு

49. *யாருடைய மகன் இறந்தபோது எலிசா அவனை உயிருடன் எழுப்பி அக்குடும்பத்திற்கு மகிழ்ச்சியை அளித்தார்?* மலடியான சூனேமியப் பெண்ணின்

50. *எலிசா குணப்படுத்திய தொழுநோயாளியான சிரியா நாட்டு படைத்தலைவன் யார்?* நாமான்

51. *எலிசா தனது எண்ணற்ற அருஞ்செயல்கள் மூலம் எதனை வெளிப்படுத்தினார்?* எலிசா எண்ணற்ற அருஞ்செயல்கள் மூலம் ஆண்டவராகிய கடவுளுக்கு மக்களிடமுள்ள இரக்கத்தையும் பராமரிப்பையும் வெளிப்படுத்தினார்.

www.malankaralibrary.com

52. *இறைவாக்கினர்கள் கடவுளின் நண்பர்களாகவும் இறைதூதுவர்களாகவும் செயலாற்றினர் என்ற கருத்தை திங்கட்கிழமை காலை மன்றாட்டில் திருச்சபை எவ்வாறு நினைவு கூருகின்றது?.*

“ஆண்டவரே உம் அன்பர்களாம் நிபியர் வேண்டுதலால்

நற்செய்தி பறைசாற்றியொராம் சீடர் - தன் வேண்டுதலால்

உலகின் நாற்றிசையில் அமைதி

நிலவிடவே அருள் செய்திடுவீர்.”

53. *மலங்கரை வழிபாட்டு முறையில் இறைவாக்கினர்களுக்கு பயன்படுத்தப்படும் வார்த்தை என்ன?* 'நிபி'

54. *எலியாவின் பலியின் போது நெருப்பு இறங்கி வந்து தூய்மைப்படுத்திய நிகழ்ச்சியை திருப்பலியின்போது எப்போது நினைவு கூர்கிறோம்?* திருப்பலியின்போது தூய ஆவி எழுந்தருளல் மன்றாட்டுக்கு பின் “ஆண்டவரே எனக்கு ......” என்ற வேண்டுதல் குருவானவர் சொல்லும் போது

55. *எலியாவும் எலிசாவும் வழியாக நாம் பெற வேண்டிய வாழ்க்கைச் சான்று என்ன?* எலியாவும் எலிசாவும் தெய்வீக அலுவல்களில் பேரார்வம் கொண்டிருந்தனர். நாமும் அனுதின வாழ்க்கையில் தெய்வீக அலுவல்களுக்கு கவனம் செலுத்தி பேரார்வம் கொள்வோம். நம்மையே அதற்காகச் சமர்ப்பிப்போம்..

56. ”ஆண்டவரின் <u>பேரன்பைப்பற்றி</u> நான் என்றும் பாடுவேன். நீர் உண்மையுள்ளவர் எனத் தலைமுறை தோறும் என் <u>நாவால்</u> அறிவிப்பேன்” (திருப்பாடல்கள் 89 : 1)

## பாடம் 8 பெரிய இறைவாக்கினர்கள்

பயிற்சி வினாக்கள்

*1.நூற்கள் எழுதிய இறைவாக்கினர்கள் எவ்வாறு பகுக்கப்பட்டிருக்கிறார்கள்? எடுத்துக்காட்டுடன் தெளிவுபடுத்துக?* இறைவாக்கினரின் பெயரில் அமைந்துள்ள நூற்களின் அளவைக் கொண்டு இறைவாக்கினர்களை பெரிய இறைவாக்கினர்கள், சிறிய இறைவாக்கினர்கள் என இருவகைப்படுத்தலாம்.

1.எசாயா, 2.எரேமியா, 3.எசெக்கியேல், 4.தானியேல் ஆகியோர் பெரிய இறைவாக்கினர்கள் ஆவார்.

1.ஒசேயா, 2.ஆமோஸ், 3.யோனாஸ், 4.மீக்கா போன்றோர் சிறிய இறைவாக்கினர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

*2. எசாயா இறைவாக்கினர் கண்ட திருக்காட்சியை விவரி?*

எசாயா ஒரு முறை திருக்காட்சி ஒன்றைக் கண்டார். மிகவும் உயரமானதோர் அரியணையில் ஆண்டவர் அமர்ந்திருப்பதை ஏசாயா கண்டார். ஆண்டவரைச் சுற்றிலும் செராபீன்கள் சூழ்ந்து நின்றனர். அவர்கள் “படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர்" என்று உரத்த குரலில் கூறிக்கொண்டிருந்தனர். அப்பொழுது செராபீன்களில் ஒருவர் பலிபீடத்திலிருந்து நெருப்புப்பொறி ஒன்றை எடுத்துக்கொண்டு ஏசாயாவை நோக்கிப் பறந்து வந்தார். அதைக்கொண்டு எசாயாவின் வாயைத் தொட்டு, "இதோ, இந்நெருப்புப்பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது” என்றார். மேலும் ஆண்டவர், “யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவது?" என வினவும் குரலையும் எசாயா கேட்டார். அதற்கு எசாயா “இதோ நான் இருக்கிறேன். அடியேனை அனுப்பும்." என்று பதில் கூறினார். அப்போழுது ஆண்டவராகிய கடவுள் இறைவாக்குரைக்கும் தூதுப்பணியை எசாயாவிடம் ஒப்படைத்தார் (எசாயா 6:1 - 9). அன்று முதல் எசாயா கடவுளின் இறைவாக்கினராகத் தொண்டாற்றினார்.

*3.குறிப்பெழுதுக:- 1. எரேமியா 2. எசேக்கியேல் 3. தானியேல்*

1. எரேமியா: எருசலேம் நகருக்கு அருகே உள்ள ஒரு கிராமத்தில் இலக்கியா என்ற குருவின் மகனாக எரேமியா பிறந்தார். எரேமியா என்ற சொல்லின் பொருள் 'ஆண்டவரே உயர்த்தட்டும்' என்பதாகும். யூதாவில் ஆண்டவரின் கட்டளைகளைப் பின்பற்றி சமய சீர்திருத்தம் செய்தவரான யோசியா அரசரின் ஆட்சி காலத்தில் தான் எரேமியா இறைவாக்குரைப்பதற்கான ஆண்டவரின் அழைப்பைப் பெற்றார். ஆண்டவரின் அருள்

www.malankaralibrary.com

வாக்குகள் மக்களுக்கு அறிவித்ததன் பேரில் அளவற்ற துன்பங்கள் எரேமியா அனுபவித்தார். யூதா நாட்டின் வீழ்ச்சி வரை சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் எரேமியா ஆண்டவரின் தூதுரைக்கும் பணியைச் செய்தார். இஸ்ராயேல் மக்கள் கடவுளைப் புறக்கணித்ததனால் எரேமியா பின்வருமாறு பறைசாற்றினார். "என் மக்கள் இரண்டு தீச்செயல்கள் செய்தார்கள். பொங்கி வழிந்தோடும் நீரூற்றாகிய என்னைப் புறக்கணித்தார்கள். தண்ணீர் தேங்காத உடைந்த குட்டைகளைத் தங்களுக்கென்று குடைந்து கொண்டார்கள்" (எரேமியா 2 : 13).

சிலைவழிபாடு, அநீதி, தீங்கு விளைவிக்கும் குற்றங்கள் போன்றவற்றால் ஆண்டவருக்கு வருத்தம் விளைவித்த மக்களை அவர் தண்டிப்பார் என எரேமியா அவர்களுக்குக் கூறினார். ஆனால் தங்கள் பாவச் செயல்களுக்காக மனம் வருந்தி ஆண்டவரிடம் திரும்பினால் அவர்கள் மீட்புப்பெறுவர் என்ற வாக்குறுதியும் எரேமியா அளித்தார். தவறு செய்த குருக்களையும், அதிகாரிகளையும் எரேமியா கண்டித்ததால் அவர்கள் அவரை கடுமையாக எதிர்த்தனர். எரேமியாவின் காலத்தில் (கி.மு. 587 - ல்) எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டது. பாபிலோனிய மன்னன் நெபுகத்னேசர் யூதா குடிமக்களை அடிமைகளாக்கி பாபிலோனுக்குக் கொண்டு சென்றான். அப்போது எரேமியா யூதேயாவில் மிஞ்சியிருந்த மக்களோடிருந்து, அவர்களுக்கு ஆண்டவர் காட்டும் நல்வழிகளைக் கற்பித்தார்; திடப்படுத்தினார். பாபிலோன் நாட்டை ஆண்டவரது கைகளின் கருவியாக மட்டும் கருதினால் போதுமென்றும்; அனைத்திற்கும் இறுதியில் கடவுள் தமது மக்களுக்கு இரக்கம் காட்டுவார் என்றும் எரேமியா இறைவாக்கு உரைத்தார். அதன் பின் எரேமியாவை எகிப்துக்கு நாடு கடத்தினர். எகிப்தில் சென்ற பிறகும் எரேமியா இஸ்ரயேல் மக்களிடம் ஆண்டவரின் வார்த்தைகளை அறிவித்துக் கொண்டே இருந்தார். தங்களுக்கு விருப்பமில்லாத செய்திகளை அறிவித்த எரேமியாவை மக்கள் கல்லெறிந்து கொன்றதாக பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

2. எசேக்கியேல்: கி.மு. 593 முதல் 573 வரை இஸ்ரயேலர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட நேரத்தில் இறைதூதுரைக்கும் கடமையைச் செய்தவர் தான் எசேக்கியேல். அவர் ஒரு குருவாக இருந்தவர். ஆண்டவர் எசேக்கியேலுக்கு இறைவாக்குரைப்பதற்கான பணியை இறைக்காட்சிகள் மூலமாகவே ஒப்படைத்தார். இருபது ஆண்டுகள் தொடர்ந்த அவரது தூதுரைகளில் தண்டனை, மீட்பு ஆகிய கருத்துக்கள் முக்கிய இடம் பெற்றன. யூதா, எருசலேம் மக்களின் நம்பகத்தன்மை இழந்த செயல்களை எசேக்கியேல் தெளிவாக எடுத்துரைத்தார். அவற்றிற்கு கடுமையான தண்டனை வந்து சேரும் எனவும், தண்டனையிலிருந்து எவராலும் தப்பமுடியாது எனவும் எசேக்கியேல் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். கடவுளால் தண்டிக்கப்பட்ட மக்களுக்கு கடவுளிடமிருந்து இரக்கமும் கிடைக்குமென்ற உறுதியான நம்பிக்கையை அளிக்கும் இறைவாக்கினராகவே எசேக்கியேல் மக்களிடம் பிரசன்னமானார். அவர் மக்களுடன் சேர்ந்து அழுது வருந்தினார். மக்களுக்கு ஆறுதல் கூறினார். ஆண்டவர் தமது மக்களை நேரடியாக வழிநடத்துவார் என்றும், இஸ்ராயேலுக்கு பாதுகாப்பும் செழுமையும் வழங்குவார். என்றும் எசேக்கியேல் மக்களுக்கு உறுதியளித்தார். நாடும் மன்னராட்சியும், கோவிலும் வழிபாடும் இழந்த போதிலும் நம்பிக்கையை கைவிடாமல் ஆண்டவரின் வல்லமையில் பற்றுறுதி கொண்டு முன்னேறுவதற்கு இஸ்ராயேல் மக்களை எசேக்கியேல் அறிவுறுத்தினார்.

3. தானியேல்: பாபிலோனின் அரசரான நெபுகத்னேசரின் அரண்மனையில் பணியாற்றுவதற்கு தானியேலும் நண்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வேற்றினத்து பழக்க வழக்கங்களும் உணவு பழக்கங்களும் பயிற்சிகளும் கட்டாயமாக்கப்பட்டிருந்தன. ஆனாலும் தானியேல் யூத பழக்க வழக்கங்களிலும் கடவுள் நம்பிக்கையிலும் தளர்வு ஏற்படாத வகையில் அரண்மனையில் வாழ்ந்து வந்தார். அரசனின் கனவுக்கு விளக்கமளித்ததால் தானியேலை அனைவரும் புகழ்ந்தனர். ஆனால் தானியேலின் உயர்வில் பொறாமை கொண்ட சிலர் நெபுகத்னேசரின் வாரிசான தாரியு என்ற அரசனை அணுகினார். அவர்கள் "அரசராகிய தங்களை மட்டுமல்லாமல் வேறு எந்த தெய்வத்தையும் வணங்குபவர்களை சிங்கக்குகையில் தள்ள வேண்டும்" என்ற சட்டத்தை இயற்றும் படி அரசரிடம் வேண்டினர். தாரியு அரசனும் அவ்வாறே சட்டம் இயற்றினார். ஆனால் தானியேலோ இஸ்ரயேலரின் உண்மைக் கடவுளை மட்டுமே வழிபட்டார்; அவரிடம் மட்டுமே மன்றாடினார். எனவே மேற்பாற்வையாளர்கள் தானியேலைச் சிங்கக்குகையில் தள்ளுவதற்கு தாரியு அரசரிடம் வேண்டினர். அவ்வாறே தானியேல் சிங்கக்குகையில் தள்ளப்பட்டார். ஆனால் ஆண்டவராகிய கடவுள் சிங்கங்களின் வாயினின்று தானியேலைக் காப்பாற்றினார். தானியேல் ஆண்டவரிடம், "கடவுளே, நீர் என்னை நினைவு கூர்ந்தீர். உம் மேல் அன்பு கூர்பவர்களை நீர் கைவிடுவதில்லை." (தானியேல் இணைப்பு நூல் 3: 38) என்று உருக்கமாக மன்றாடினார்.

www.malankaralibrary.com

தானியேல் நிறைவான கடவுள் நம்பிக்கை உடையவர். ஆண்டவராகிய கடவுளிடம் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத பற்றுறுதியின் காரணமாகத் தனது உயிரை அர்ப்பணம் செய்யவும் தயாரானார். தானியேலும் அவரது மூன்று நண்பர்களும் கொண்டிருந்த உறுதியான இறைநம்பிக்கையும், பக்தியும், யூத கலாச்சாரம், வழிபாட்டு முறை ஆகியவற்றிலுள்ள உறுதியும் புறவினத்தாருக்கு முன்மாதிரியாக அமைந்தன.

குறுவினாக்கள்

1. *இஸ்ராயேலில் மன்னராட்சி ஆரம்பித்தது முதல் மக்களை ஆண்டவரிடம் ஒன்றிணைக்க முக்கிய பங்காற்றியவர்கள் யாவர்?* இறைவாக்கினர்கள்
2. *வேற்றுநாட்டவரின் கீழில் நாடு கடத்தப்பட்ட இஸ்ராயேல் மக்களை ஒரே கடவுள் நம்பிக்கையில் நிலைத்து நிற்க உற்சாகமூட்டி வழிநடத்தியவர்கள் யாவர்?* இறைவாக்கினர்கள்
3. *இறைவாக்கினர்கள் கடவுளுக்காக தங்களது வாழ்வை எவ்வாறு முழுமையாக சமர்ப்பித்தனர்?* சமூகத்தில் நடைபெற்ற அநீதிகளுக்கும் தீமைகளுக்கும் எதிராக குரல் கொடுத்த இறைவாக்கினர்கள் கடவுளுக்காக தங்களது வாழ்வை முழுமையாக சமர்ப்பித்தவர்கள் ஆவார்கள்.
4. *இறைவாக்கினர்களின் இறைவாக்குகளையும் செயல்களையும் எவ்வாறு நாம் அறியலாம்?* திருவிவிலியத்திலிருந்து
5. *இறைவாக்கினர்களை விட இறைச்செய்தி எவ்வாறு சிறப்பிடம் பெற்றுள்ளது?* இறைவாக்கினர்கள் கடவுளிடம் செய்திகளைப் பெற்று மக்களுக்கு அறிவித்தனர். இறைவனின் திட்டத்தில் இறைவாக்கினர்களை விட இறைச்செய்திக்கே சிறப்பிடம் தரப்பட்டுள்ளது. காணப்படாத கடவுளுக்கு மனிதரோடுள்ள அன்பு, கரிசனை ஆகியவற்றின் நிலையான தோற்றத்தை இறைவாக்கினர்கள் வெளிப்படுத்தினர்.
6. *எசாயா இறைத்தூது பணியாற்றிய காலம் எது?* கி.மு. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி
7. *எசாயா' என்ற சொல்லின் பொருள் என்ன?* 'யாவே மீட்பு'
8. *ஏழைக்குடும்பத்தில் பிறந்த இறைவாக்கினர் எனப்படுபவர் யார்?* எசாயா
9. *எசாயா கண்ட திருக்காட்சியில் ஆண்டவரைச் சுற்றி நின்ற செராபீன்கள் உரத்த குரலில் கூறியது என்ன?* "படைகளின் ஆண்டவர் தூயவர், தூயவர், தூயவர்"
10. *எசாயா கண்ட திருக்காட்சியில்* பலிபீடத்திலிருந்து *நெருப்புப்பொறி ஒன்றை எடுத்துக்கொண்டு ஏசாயாவை நோக்கிப் பறந்து வந்தவர் யார்?* செராபீன்களில் ஒருவர்
11. *பலிபீடத்திலிருந்து எடுத்து வரப்பட்ட நெருப்புப்பொறியால் எசாயாவின் வாயைத் தொட்டு செராபீன் வானதூதர் கூறியது என்ன?* "இதோ, இந்நெருப்புப்பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது"
12. *நெருப்புப்பொறி தன் உதடுகளைத் தொட்டபோது எசாயா கேட்ட ஆண்டவரின் குரல் யாது?* "யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவது?"
13. *நெருப்புப்பொறி உதடுகளைத் தொட்டபோது ஆண்டவரின் வினாவுக்கு எசாயாவின் பதில் என்ன?* "இதோ நான் இருக்கிறேன். அடியேனை அனுப்பும்."
14. *ஆண்டவராகிய கடவுள், "இதோ நான் இருக்கிறேன். அடியேனை அனுப்பும்" என்ற பதிலை கேட்டவுடன் எசாயாவிடம் ஒப்படைத்தது என்ன?* ஆண்டவராகிய கடவுள் இறைவாக்குரைக்கும் தூதுப்பணியை எசாயாவிடம் ஒப்படைத்தார் (எசாயா 6:1 - 9). அன்று முதல் எசாயா கடவுளின் இறைவாக்கினராகத் தொண்டாற்றினார்.
15. *இஸ்ராயேல் மக்கள் மீது கடவுள் கொண்டிருந்த அளவற்ற அன்பும் இரக்கமும் குறித்து எசாயா மக்களிடம் எடுத்துக் கூறியது என்ன?* "பால் குடிக்கும் தன் மக்களை தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாமலிருப்பாளோ? அவள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன்.

www.malankaralibrary.com

இதோ, என் உள்ளங்கையில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்" (எசாயா 49 : 15 - 16).

16. *மீட்பராகிய இயேசுவைக் குறித்து மிக அதிகமான இறைவாக்குகள் காணப்படுகின்ற திருவிவிலியத்தின் இறைவாக்கு நூல் எது?* எசாயா (ஆகமம்)

17. *எரேமியா பிறந்த இடம் எது?* எருசலேம் நகருக்கு அருகே உள்ள ஒரு கிராமத்தில்

18. *எரேமியாவின் தந்தை யார்?* இலக்கியா என்ற குருவின் மகனாக எரேமியா பிறந்தார்.

19. *எரேமியா என்ற சொல்லின் பொருள் என்ன?* 'ஆண்டவரே உயர்த்தட்டும்'

20. *எரேமியாவின் காலத்தில் ஆண்டவரின் கட்டளைகளைப் பின்பற்றி சமய சீர்திருத்தம் செய்த யூதாவின் அரசர் யார்?* யோசியா அரசர்

21. *யாருடைய ஆட்சிக் காலத்தில் எரேமியா இறைவாக்குரைப்பதற்கான ஆண்டவரின் அழைப்பைப் பெற்றார்?* யோசியா அரசர்

22. *எது வரை எரேமியா ஆண்டவரின் தூதுரைக்கும் பணி செய்தார்?* யூதா நாட்டின் வீழ்ச்சி வரை

23. *எரேமியா ஆண்டவரின் தூதுரைக்கும் பணி செய்த மொத்த காலம் எது?* சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேல்.

24. *இஸ்ராயேல் மக்கள் கடவுளைப் புறக்கணித்தபோது எரேமியா பறைசாற்றியது என்ன?* "என் மக்கள் இரண்டு தீச்செயல்கள் செய்தார்கள். பொங்கி வழிந்தோடும் நீரூற்றாகிய என்னைப் புறக்கணித்தார்கள். தண்ணீர் தேங்காத உடைந்த குட்டைகளைத் தங்களுக்கென்று குடைந்து கொண்டார்கள்" (எரேமியா 2 : 13).

25. *எரேமியா வாழ்ந்த காலத்தில் எவ்வாறு மக்கள் ஆண்டவருக்கு வருத்தம் விளைவித்தனர்?* சிலைவழிபாடு, அநீதி, தீங்கு விளைவிக்கும் குற்றங்கள் போன்றவற்றால் மக்கள் ஆண்டவருக்கு வருத்தம் விளைவித்தனர்.

26. *எரேமியா, மக்களுக்கு கூறிய வாக்குறுதி என்ன?* தங்கள் பாவச் செயல்களுக்காக மனம் வருந்தி ஆண்டவரிடம் திரும்பினால் அவர்கள் மீட்புப்பெறுவர் என்ற வாக்குறுதியை எரேமியா அளித்தார்.

27. *எரேமியாவை எதிர்த்தவர்கள் யாவர்? ஏன்?* தவறு செய்த குருக்களையும், அதிகாரிகளையும் எரேமியா கண்டித்ததால் அவர்கள் அவரை கடுமையாக எதிர்த்தனர்.

28. *எரேமியாவின் காலத்தில் எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டது எப்போது?* கி.மு. 587 -ல்

29. *யூதா குடிமக்களை அடிமைகளாக்கி பாபிலோனுக்குக் கொண்டு சென்ற பாபிலோனிய மன்னன் யார்?* நெபுகத்னேசர்

30. *யூதேயாவில் மிஞ்சியிருந்த மக்களோடிருந்து, அவர்களுக்கு ஆண்டவர் காட்டும் நல்வழிகளைக் கற்பித்து திடப்படுத்தியவர் யார்?* எரேமியா

31. *எரேமியாவை எங்கே நாடு கடத்தினர்?* எகிப்துக்கு

32. *எரேமியா எவ்வாறு இறந்தார்?* எகிப்தில் சென்ற பிறகும் எரேமியா இஸ்ரயேல் மக்களிடம் ஆண்டவரின் வார்த்தைகளை அறிவித்துக் கொண்டே இருந்தார். தங்களுக்கு விருப்பமில்லாத செய்திகளை அறிவித்த எரேமியாவை மக்கள் கல்லெறிந்து கொன்றதாக பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

33. *கி.மு. 593 முதல் 573 வரை இஸ்ரயேலர் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டபோது இறைதூதுரைக்கும் பணி செய்தவர் யார்?* எசேக்கியேல்.

34. *குருவாக இருந்த எசேக்கியேலுக்கு ஆண்டவர் இறைவாக்குரைப்பதற்கான பணிகளை எவ்வாறு ஒப்படைத்தார்?* இறைக்காட்சிகள் மூலமாக

35. *எசேக்கியேலின் இறைவாக்குரை பணிகள் எத்தனை ஆண்டுகள்?* இருபது ஆண்டுகள்

36. *எசேக்கியேலின் தூதுரைகளில் முக்கிய கருத்துக்கள் யாவை?* தண்டனை, மீட்பு

37. *எசேக்கியேல் மக்களுக்கு விடுத்த எச்சரிக்கை என்ன?* யூதா, எருசலேம் மக்களின் நம்பகத்தன்மை இழந்த

www.malankaralibrary.com

செயல்களை எசேக்கியேல் தெளிவாக எடுத்துரைத்தார். அவற்றிற்கு கடுமையான தண்டனை வந்து சேரும் எனவும், தண்டனையிலிருந்து எவராலும் தப்பமுடியாது எனவும் எசேக்கியேல் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

**38.** *மக்களுக்கு எசேக்கியேல் ஆறுதல் கூறியது என்ன?* கடவுளால் தண்டிக்கப்பட்ட மக்களுக்கு கடவுளிடமிருந்து இரக்கம் கிடைக்குமென்ற உறுதியான நம்பிக்கையை அளிக்கும் இறைவாக்கினராகவே எசேக்கியேல் மக்களிடம் பிரசன்னமானார். அவர் மக்களுடன் சேர்ந்து அழுது வருந்தினார். மக்களுக்கு ஆறுதல் கூறினார். ஆண்டவர் தமது மக்களை நேரடியாக வழிநடத்துவார் என்றும், இஸ்ராயேலுக்கு பாதுகாப்பும் செழுமையும் வழங்குவார் என்றும் எசேக்கியேல் மக்களுக்கு உறுதியளித்தார்.

**39.** *எசேக்கியேல் மக்களுக்கு கூறிய அறிவுரை என்ன?* நாடும் மன்னராட்சியும், கோவிலும் வழிபாடும் இழந்த போதிலும் நம்பிக்கையை கைவிடாமல் ஆண்டவரின் வல்லமையில் பற்றுறுதி கொண்டு முன்னேறுவதற்கு இஸ்ராயேல் மக்களை எசேக்கியேல் அறிவுறுத்தினார்.

**40.** *தானியேலும் நண்பர்களும் எங்கே பணியாற்றுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்?* பாபிலோனின் அரசரான நெபுகத்னேசரின் அரண்மனையில்

**41.** *தானியேல் நெபுகத்னேசரின் அரண்மனையில் வாழ்ந்த வாழ்வு முறையினை கூறுக?* வேற்றினத்து பழக்க வழக்கங்களும் உணவு பழக்கங்களும் நெபுகத்னேசரின் அரண்மனையில் பயிற்சிகளும் கட்டாயமாக்கப்பட்டிருந்தன. ஆனாலும் தானியேல் யூத பழக்கவழக்கங்களிலும் கடவுள் நம்பிக்கையிலும் தளர்வு ஏற்படாத வகையில் அரண்மனையில் வாழ்ந்து வந்தார்.

**42.** *தானியேலை அரண்மனையில் அனைவரும் புகழ்ந்தது ஏன்?* அரசனின் கனவுக்கு விளக்கமளித்ததால்

**43.** *தானியேலின் உயர்வில் பொறாமை கொண்டவர்கள் அணுகிய நெபுகத்னேசரின் வாரிசான அரசர் யார்?* தாரியு

**44.** தாரியு *அரசர் இயற்றிய சட்டம் எது?* “அரசராகிய தம்மை மட்டுமல்லாமல் வேறு எந்த தெய்வத்தையும் வணங்குபவர்களை சிங்கக்குகையில் தள்ள வேண்டும்”

**45.** *மேற்பாற்வையாளர்கள் தானியேலைச் சிங்கக்குகையில் தள்ள தாரியு அரசரிடம் வேண்டியது ஏன்?* தானியேல் இஸ்ரயேலரின் உண்மைக் கடவுளை மட்டுமே வழிபட்டார்; அவரிடம் மட்டுமே மன்றாடினார். எனவே மேற்பாற்வையாளர்கள் தானியேலைச் சிங்கக்குகையில் தள்ள தாரியு அரசரிடம் வேண்டினர். அவ்வாறே தானியேல் சிங்கக்குகையில் தள்ளப்பட்டார்.

**46.** *ஆண்டவராகிய கடவுள் சிங்கங்களின் வாயினின்று தானியேலைக் காப்பாற்றியபோது தானியேல் ஆண்டவரிடம் மன்றாடியது என்ன?* "கடவுளே, நீர் என்னை நினைவு கூர்ந்தீர். உம் மேல் அன்பு கூர்பவர்களை நீர் கைவிடுவதில்லை ." (தானியேல் இணைப்பு நூல் 3: 38)

**47.** *தானியேலும் அவரது மூன்று நண்பர்களும் கொண்டிருந்த உறுதியான இறை நம்பிக்கை பற்றி கூறுக?* தானியேல் நிறைவான கடவுள் நம்பிக்கை உடையவர். ஆண்டவராகிய கடவுளிடம் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத பற்றுறுதியின் காரணமாகத் தனது உயிரை அர்பணம் செய்யவும் தயாரானார். தானியேலும் அவரது மூன்று நண்பர்களும் கொண்டிருந்த உறுதியான இறை நம்பிக்கையும் பக்தியும் யூத கலாச்சாரம், வழிபாட்டு முறை ஆகியவற்றிலுள்ள உறுதியும் புறவினத்தாருக்கு முன்மாதிரியாக அமைந்தன.

**48.** *திருப்பலி வேளையில் எசாயா கண்ட காட்சியைக் குறித்து நாம் பாடும் பாடல் எது?*

“கண்டார் எசாயா செருபுகளை - ஹா - உ - ஹா தூயக முள்ளில் திருமுன்னில் - குறி...........

சிறகுகளா றாறுடையவராம் - ஹ - ஹா எரிமயரான்மாக்கள் அவர்கள் - குறி... -

உம் இறைமை நோக்காதிருக்க - ஹா - உ - ஹா முக மிரு சிறகுகளால் மூடிடுவர் - குறி...

உம் சுடரில் எரியாதிருக்க - ஹா - உ- ஹா இரு சிறகால் கால்களை மறைப்பர் - குறி.......

**49.** *இறைவாக்கினர்கள் நமக்குத்தரும் வாழ்க்கைச் சான்று என்ன?* ஆண்டவரின் விருப்பத்திற்கு ஏற்ப

www.malankaralibrary.com

தங்களது வாழ்க்கையை முழுமையாக சமர்ப்பித்தவர்களே இறைவாக்கினர்கள். கடவுளின் விருப்பம் அன்றாட வாழ்க்கையில் செயல் வடிவம் பெறவும் அதன்படி வாழ்ந்து காட்டவும் நாம் முயற்சிப்போம்.

**50.** "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன். மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன்" (எரேமியா 1:5)

## பாடம் 9 சிறிய இறைவாக்கினர்கள்

பயிற்சி வினாக்கள்

*1.ஒசேயாவின் பார்வையில் ஆண்டவருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையேயான உறவு எவ்வாறு இருந்தது?*

ஆண்டவராகிய கடவுளிடம் மக்கள் நம்பகமாக நடந்து கொள்ளவில்லையென்று ஓசேயா கடிந்து கொண்டார். கடவுளுக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையேயான உறவை கணவன் மனைவியரிடையேயான உறவாக ஓசேயா ஒப்பிட்டுக் கூறினார்.

*2.ஒசேயாவின் முக்கியமான இறைவாக்குரைப் பணி என்ன?*

இஸ்ராயேல் மக்களை அரவணைக்கும் இறைவனின் பேரன்பை ஒசேயா மக்களிடம் பறைசாற்றினார். இஸ்ரயேலின் நம்பிக்கை துரோகத்திற்கும், பாதகச் செயல்களுக்கும் எதிராக ஓசேயா தீர்ப்பு வழங்கினார். எனினும் அவற்றையெல்லாம் மறந்து மக்களைத் தன்னிடம் திரும்பக் கொண்டுவரும் கடவுளின் அளவற்ற பேரன்பும், பராமரிப்பும் அவர்களுக்கு எடுத்துக் கூறுவதே ஓசேயாவின் முக்கியமான இறைவாக்கு பணியாகும்.

*3."நினிவே நகரம் மீது கடவுள் தண்டனை அனுப்பவில்லை காரணம் யாது?*

யோனாவின் எச்சரிக்கையைக் கேட்ட மக்கள் நோன்பிருந்து, மனம் திரும்பி, தம் தீய வழிகளையும் கொடும் செயல்களையும் விட்டொழித்தனர். அவர்கள் தீய வழிகளின்று விலகியதைக் கடவுள் கண்டார். தாம் அவர்கள் மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்தத் தண்டனையைக் கடவுள் அனுப்பவில்லை.

*4."சமூக நீதி, கடவுள் நீதி ஆகியவற்றின் இறைவாக்கினராய் இருந்தார் ஆமோஸ்" என்பதை விளக்குக?*

இஸ்ரயேலில் நடமாடிய சமூகத் தீமைகளுக்கு எதிராகக் குரலை எழுப்பினார். வறுமையுற்றவரை சுரண்டி நசுக்குவதற்கு எதிராகவும் தீய செயல்களுக்கெதிராகவும் ஆமோஸ் வன்மையான கண்டனம் தெரிவித்தார். அநீதி காட்டுவோரின் பலிகள் கடவுளுக்கு அருவருப்பானதென்று ஆமோஸ் விளக்கிக் கூறினார். வறுமையுற்றோருக்கும் ஆதரவற்றோருக்கும் நீதி கிடைப்பதற்காக செயல்படுவதே மிகச் சிறந்த வழிபாடு என்று ஆமோஸ் கற்பித்தார். சமூக நீதி, தெய்வீக நீதி ஆகியவற்றின் இறைவாக்கினரே ஆமோஸ்.

*5."மனிதனில் அமைந்த நன்மை" என்பது பற்றி மீக்காவின் கருத்து யாது?*

மீக்காவின் பார்வையில் "மனிதனில் அமைந்த நன்மை" என்பது நீதியானவற்றையே செய்வதும், இரக்கம் காட்டுவதும் ஆண்டவர் முன் பணிவுடன் நடந்து கொள்வதுமே ஆகும்.

*6.குறிப்பெழுதுக :- (1) ஆமோஸ் (2) யோனா (3) மீக்கா*

*(1)* ஆமோஸ் இறைவாக்கினர்: விவிலியத்தில் இடம் பெறும் இறைவாக்குகளுள் ஆமோஸ் உரைத்த தூதுரையே முதலில் எழுத்து வடிவம் பெற்றது எனலாம். வட நாடான இஸ்ரயேலின் இறைவாக்கினரான ஆமோஸ் ஆடு மேய்க்கும் தொழில் செய்து வந்தார். சுற்றியிருந்த வேற்றினத்தாரை ஆண்டவர் கடுமையாகத் தண்டிக்கப் போகிறார் என அறிக்கையிட்டவாறே ஆமோஸ் தனது தூதுரைக்கும் பணியைத் தொடங்கினார். அநீதி காட்டுவோரின் பலிகள் கடவுளுக்கு அருவருப்பானதென்று ஆமோஸ் விளக்கிக் கூறினார். வறுமையுற்றோருக்கும் ஆதரவற்றோருக்கும் நீதி கிடைப்பதற்காக செயல்படுவதே மிகச் சிறந்த வழிபாடு என்று ஆமோஸ் கற்பித்தார். சமூக நீதி, தெய்வீக நீதி ஆகியவற்றின் இறைவாக்கினரே ஆமோஸ்.

*(2)* யோனா இறைவாக்கினர்: புறவினத்து நகரான நினிவேயில் இறைவாக்குரைக்க கடவுள் தேர்ந்தெடுத்த நபர்தான் யோனா. ஆனால் யோனாவோ ஆண்டவரின் திருமுன்னிலிருந்து தப்பியோட முயன்றார். தர்சீசுக்குப் புறப்படவிருந்த ஒரு கப்பலில் ஏறி பயணமானார் ஆனால் ஆண்டவர் கடலில்

www.malankaralibrary.com

பெருங்காற்று வீசச் செய்தார். கடலில் பெரும் கொந்தளிப்பு உண்டாயிற்று. கப்பல் உடைந்து போகும் நிலை ஏற்பட்டது. இந்தப் பெருந்தீங்கு யாரால் வந்தது என்று கண்டறிய பயணிகள் சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தது. "தாம் ஆண்டவரிடமிருந்து தப்பியோடி வந்ததால் தான் இந்த கடும்புயல் உண்டாயிற்று". என யோனா பயணிகளிடம் ஒப்புக் கொண்டார். பிறகு யோனாவை தூக்கி கடலில் எறிந்தார்கள். உடனேயே கடல் கொந்தளிப்பும் தணிந்தது. ஆண்டவர் ஏற்பாடு செய்திருந்த படியே ஒரு பெரிய மீன் யோனாவை விழுங்கியது. யோனா மூன்று நாள் இரவும் பகலும் அந்த மீன் வயிற்றில் இருந்தார். ஆண்டவர் அந்த மீனுக்கு கட்டளையிட, அது யோனாவைக் கரையிலே கக்கியது. இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அவ்வாறே யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவே நகருக்குச் சென்றார். நினிவே மக்களின் தீமைகள் காரணமாக இன்னும் நாற்பது நாளில் நகரம் அழிக்கப்படும் என்று முன்னறிவித்தார். யோனாவின் எச்சரிக்கையைக் கேட்ட மக்கள் நோன்பிருந்து, மனம்மாறி, தம் தீய வழிகளையும் கொடும் செயல்களையும் விட்டொழித்தனர். அவர்கள் தீய வழிகளின்று விலகியதைக் கடவுள் கண்டார். தாம் அவர்கள் மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்தத் தண்டனையைக் கடவுள் அனுப்பவில்லை.

*(3)* மீக்கா இறைவாக்கினர்: மீக்கா, எருசலேமின் தென்மேற்குப் பகுதியை சார்ந்த இறைவாக்கினர் ஆவார். மீக்கா என்னும் சொல்லின் பொருள் "யாவேயைப் போல் யாருண்டு" என்பதுவே ஆகும். அவர் ஆழ்ந்த சமய நுண்ணறிவு உடையவர். மக்களின் பாவங்களுக்கும், தலைவர்களின் பொறுப்பற்ற செயல்களுக்கும் தண்டனை வந்தே தீரும் என அவர் தெளிவாக எச்சரித்தார். புறவினத்து வழிபாட்டு முறைகளுக்கு எதிராக வன்மையான கண்டனம் தெரிவித்தார். மக்களின் கொடுஞ்செயல்களுக்குத் தண்டனை அளிக்க ஆண்டவர் நேரடியாக இறங்கி வருவார் என மீக்கா இறைவாக்குரைத்தார். மேலும் யூதாவின் பெத்லகேமில் தாவீதின் குலத்தில் வரவிருக்கும் மீட்பர் பிறப்பார் (மீக்கா : 5 : 2) என்ற நம்பிக்கை நிறைந்த இறைவாக்கும் மீக்கா முன்னறிவித்துள்ளார். மீக்காவின் பார்வையில் "மனிதனில் அமைந்த நன்மை" என்பது நீதியானவற்றையே செய்வதும், இரக்கம் காட்டுவதும் ஆண்டவர் முன் பணிவுடன் நடந்து கொள்வதுமே ஆகும்.

குறுவினாக்கள்

1. *சிறிய இறைவாக்கினர்கள் மொத்தம் எத்தனை?* பன்னிருவர்
2. *சிறிய இறைவாக்கினர்களுள் சிறந்தவர்களென கருதப்படும் நான்கு இறைவாக்கினர்கள் யாவர்?* ஒசேயா, ஆமோஸ், யோனா, மீக்கா
3. *"ஓசேயா" என்ற பெயரின் பொருள் என்ன?* 'ஆண்டவர் மீட்கிறார்'
4. *ஓசேயா எப்போது தனது இறைவாக்குரைக்கும் பணியைத் தொடங்கினார்?* கி.மு.8 - ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்
5. *குருக்கள் கூட்டத்தை ஓசேயா ஏன் கடுமையாக கண்டித்தார்?* தங்களது கடமைகளை மறந்து சிலைவழிபாடு, கீழ்படியாமை, நம்பிக்கைத் துரோகம் ஆகியவற்றில் மூழ்கிக் கிடந்த குருக்கள் கூட்டத்தை ஓசேயா கடுமையாக கண்டித்தார்.
6. *கடவுளுக்கும் இஸ்ராயேல் மக்களுக்கும் இடையேயான உறவை ஓசேயா எவ்வாறு ஒப்பிட்டுக் கூறினார்?* கணவன் மனைவியரிடையேயான உறவாக
7. *விவிலியத்தில் இடம் பெறும் இறைவாக்குகளுள் முதலில் எழுத்து வடிவம் பெற்றது எது?* ஆமோஸ் உரைத்த தூதுரை
8. *ஆமோஸ் எந்நாட்டு இறைவாக்கினராக இருந்தார்?* வட நாடான இஸ்ரயேலின்
9. *ஆமோஸ் என்ன தொழில் செய்து வந்தார்?* ஆடு மேய்க்கும்
10. *ஆமோஸ் தனது தூதுரைக்கும் பணியைத் எவ்வாறு தொடங்கினார்?* சுற்றியிருந்த வேற்றினத்தாரை ஆண்டவர் கடுமையாகத் தண்டிக்கப் போகிறார் என அறிக்கையிட்டவாறே ஆமோஸ் தனது தூதுரைக்கும் பணியைத் தொடங்கினார்.
11. *ஆமோஸ் யாருக்கெதிராக வன்மையான கண்டனம் தெரிவித்தார்?* வறுமையுற்றவரை சுரண்டி

நசுக்குவதற்கு எதிராகவும் தீய செயல்களுக்கெதிராகவும் ஆமோஸ் வன்மையான கண்டனம் தெரிவித்தார்.

12. அநீதி காட்டுவோரின் பலிகள் கடவுளுக்கு அருவருப்பானதென்று ஆமோஸ் விளக்கி கூறினார்.

13. *மிக சிறந்த வழிபாடு என்று ஆமோஸ் கற்பித்தது என்ன?* வறுமையுற்றோருக்கும் ஆதரவற்றோருக்கும் நீதி கிடைப்பதற்காக செயல்படுவதே மிகச் சிறந்த வழிபாடு என்று ஆமோஸ் கற்பித்தார்.

14. *சமூக நீதி, தெய்வீக நீதி ஆகியவற்றின் இறைவாக்கினர் யார்?* ஆமோஸ்.

15. *புறவினத்து நகரான நினிவேயில் இறைவாக்குரைக்க கடவுள் யாரைத் தேர்ந்தெடுத்தார்?* யோனா.

16. *யோனா ஆண்டவரின் திருமுன்னிலிருந்து தப்பியோட எந்நாட்டு கப்பலில் பயணமானார்?* தர்சீசுக்கு செல்லும் கப்பலில்

17. *யோனா தர்சீசுக்கு செல்லும் கப்பலில் பயணமானபோது நேர்ந்தது என்ன?* ஆண்டவர் கடலில் பெருங்காற்று வீச்ச் செய்தார். கடலில் பெரும் கொந்தளிப்பு உண்டாயிற்று. கப்பல் உடைந்து போகும் நிலை ஏற்பட்டது. இந்தப் பெருந்தீங்கு யாரால் வந்தது என்று கண்டறிய பயணிகள் சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். சீட்டு யோனாவின் பெயருக்கு விழுந்தது. "தாம் ஆண்டவரிடமிருந்து தப்பியோடி வந்ததால் தான் இந்த கடும்புயல் உண்டாயிற்று" என யோனா பயணிகளிடம் ஒப்புக் கொண்டார். பிறகு யோனாவை தூக்கி கடலில் எறிந்தார்கள். உடனேயே கடல் கொந்தளிப்பும் தணிந்தது.

18. ஆண்டவர் ஏற்பாடு செய்திருந்த படியே ஒரு பெரிய மீன் யோனாவை விழுங்கியது.

19. *யோனா எத்தனை நாள் மீனின் வயிற்றில் இருந்தார்?* மூன்று நாள் இரவும் பகலும்

20. *யோனாவைக் கரையிலே வாந்தியெடுக்க மீனுக்கு கட்டளையிட்டவர் யார்?* ஆண்டவர்

21. *இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டவுடன் யோனா எந்நகருக்குச் சென்றார்?* நினிவே.

22. *நினிவே மக்களின் தீமைகள் காரணமாக எத்தனை நாட்களில் நகரம் அழிக்கப்படும் என்று முன்னறிவிக்கப்பட்டிருந்தது?* நாற்பது நாட்களில்

23. *நினிவே மக்களின் வாழ்க்கையிலிருந்து அறிந்து கொள்ள வேண்டியது என்ன?* பாவச் செயல்களில் மூழ்கியிருந்த நினிவே மக்கள் பச்சாதாபத்தால் மனமாற்றமடைந்து ஆண்டவரிடம் திரும்பிச் சென்றனர். ஆண்டவர் மகிழ்ச்சியுடன் அவர்களை மன்னித்தார். கடவுளின் இரக்கத்திற்கு எல்லைகளில்லை என்பதும் அனைவரும் மீட்கப்பட வேண்டுமென்றே அவர் விரும்புகிறார் என்பதும் நினிவே மக்களின் வாழ்க்கையிலிருந்து தெளிவாகிறது.

24. *மீக்கா இறைவாக்கினர் எப்பகுதியைச் சார்ந்தவர்?* எருசலேமின் தென் மேற்குப் பகுதியை சார்ந்தவர்.

25. *மீக்கா என்னும் சொல்லின் பொருள் என்ன?* "யாவேயைப் போல் யாருண்டு"

26. *மீக்கா இறைவாக்கினர் எச்சரிக்கை விடுத்தது என்ன?* மக்களின் பாவங்களுக்கும், தலைவர்களின் பொறுப்பற்ற செயல்களுக்கும் தண்டனை வந்தே தீரும் என அவர் தெளிவாக எச்சரித்தார். புறவினத்து வழிபாட்டு முறைகளுக்கு எதிராக வன்மையான கண்டனம் தெரிவித்தார்.

27. *ஆண்டவர் எதற்காக நேரடியாக இறங்கி வருவார் என மீக்கா இறைவாக்குரைத்தார்?* மக்களின் கொடுஞ்செயல்களுக்குத் தண்டனை அளிக்க

28. *மீக்கா முன்னறிவித்த நம்பிக்கை நிறைந்த இறைவாக்கு என்ன?* யூதாவின் பெத்லகேமில் தாவீதின் குலத்தில் வரவிருக்கும் மீட்பர் பிறப்பார் (மீக்கா : 5 : 2)

29. *மற்று சிறிய இறைவாக்கினர்கள் யாவர்?* 1.யோவேல், 2.ஒபதியா, 3.நாகூம், 4.அபக்கூக்கு, 5.செப்பானியா, 6.ஆகாய், 7.செக்கரியா, 8.மலாக்கி

30. *இறைவாக்கினர்கள் மக்களை இறை உறவில் நிலைத்திருக்க செய்த பணிகள் யாவை?* 1.இஸ்ரயேலுக்கு உரிய தண்டனைத் தீர்ப்பு, கடவுளுக்கு தமது மக்கள் மீதுள்ள இரக்கம் அன்பு அது வழியான மீட்பு ஆகியவற்றைப் பறை சாற்றியவர்களே இறைவாக்கினர்கள். 2.அவர்கள் "கடவுளின் குரல்" ஆக

www.malankaralibrary.com

செயல்பட்டனர். பல நேரங்களிலும் மக்கள் இறைவாக்கினர்களை மறுதலித்தனர். எனினும் கடவுள் தங்களிடம் ஒப்படைத்த தூதுரைப்பணியிலேயே அவர்கள் நிலைத்து நின்றனர். 3.பெருமையின் உன்னத நிலையிலிருந்து அடிமையின் வாழ்வுக்குத் தள்ளப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்கும் புத்துயிரூட்டியது இறைவாக்கினர்களே ஆவார். 4.வரவிருக்கும் மீட்பரைப் பற்றிய இறைவாக்குரைத்தலின் மூலம் மக்களை எதிர்நோக்கில் நிலைத்து நிற்கச் செய்வதற்கு இறைவாக்கினர்களால் முடிந்தது.

31. *ஞாயிறு காலை மன்றாட்டில் யோனா இறைவாக்கினரின் வாழ்க்கையில் கடவுள் ஈடுபட்டதைப் பற்றி பாடப்படும் பாடல் எது?*

“மூன்றாம் நாளன்று

இறந்தோரில் நின்று உயிர்த்தெழுந்தா-ரே

சாவிலிருந்தும் பாவமதன்

குழியிலிருந்தும் மீட்டிடுவீர்.

யோனாவைப் போன்று

மூவிரவும் பகலும்

பாதாளத்தில் உலவிய இயேசு

மூன்றாம் நாள் உயிர் பெற்றவராய் எழுந்தாரே. - பாறெக்மோர்”

32. *இறைவாக்கினர்கள் நமக்குத் தரும் வாழ்க்கைப்பாடம் என்ன?* இறைவாக்கினர்கள் ஆண்டவருக்கு நம்பகமான முறையில் வாழ்ந்து அவரது பேரன்பையும் அளவற்ற இரக்கத்தையும் பெற்று இஸ்ரயேல் மக்களுக்கு அளித்தனர். அதுபோன்று நாமும் ஆண்டவருக்கு நம்பிக்கைக்குரியவராக வாழ்ந்து ஆண்டவரின் பேரன்பும் அளவற்ற இரக்கமும் பிறருக்கு பெற்றுத்தர முயற்சி செய்வோம்.

33. "என் கடவுளாகிய ஆண்டவரே; உம்மிடம் அடைக்கலம் புகுந்தேன்; என்னைத் துரத்துவோர் அனைவரிடமிருந்தும் என்னை காப்பாற்றித் தப்புவியும்” (திருப்பாடல்கள் 7:1).

## பாடம் 10 அடிமை வாழ்வும் மீட்பரின் வருகையும்

பயிற்சி வினாக்கள்

*1.இஸ்ராயேலரின் பாபிலோன் சிறையிருப்புக்கான காரணம் யாது?*

யூதாவிலும் எருசலேமிலுமுள்ள இஸ்ரயேல் மக்கள் தங்கள் நாடும் நகரமும் இழந்து பாபிலோனில் அடிமைகளாக வாழ்ந்தனர். இதற்கு 'பாபிலோனியன் சிறையிருப்பு' என்று பெயர். இறைமக்கள் ஆண்டவரின் நம்பிக்கைக்குரியவர்களாக வாழாததன் தண்டனையாகவே வேற்று நாட்டு வாழ்வுக்குத் தள்ளப்பட்டனர்.

*2.யூதர்களின் வாழ்க்கையில் கிரேக்கர்கள் ஆதிக்கம் செலுத்தியது எவ்வாறு?*

கி.மு. 332 -ல் பேரரசர் அலக்சாண்டரின் தலைமையில் கிரேக்கர்கள் இஸ்ரயேல் மீது ஆதிக்கம் செலுத்தினர். அக்காலத்தில் இஸ்ரயேல் மக்கள் வாழ்ந்திருந்த தேசம் பாலஸ்தீனம் என்ற பெயரால் அறியப்பட்டது. அலக்சாண்டர் இறந்த பின் கி. மு. 301 -ல் எகிப்தின் கிரேக்க ஆட்சியாளரான முதலாம் தலாமி பாலஸ்தீனத்தைக் கைப்பற்றினார். அப்போது கிரேக்கரின் மொழி, பண்பாடு, வாழ்க்கை முறை, இறையியல், வழிபாட்டுமுறை ஆகியவற்றில் யூதர்கள் அளவற்ற நாட்டங்கொண்டனர். கிரேக்க சமயச் சடங்குகளால் ஈர்க்கப்பட்டு யூத மறையைக் கைவிடத் தொடங்கினர். பெரும் மகிழ்ச்சியும் பேரின்பமும் தரக்கூடிய வாழ்க்கையை யூதர்கள் விரும்பினர். எனவே அவர்களுள் பலர் பாலஸ்தீனத்துக்கு வெளியே குடியேறி வாழத்தொடங்கினர். கி.மு. 198 -ல் சிரியா நாட்டின் கிரேக்க ஆட்சியாளர் மூன்றாம் அந்தியோக்கு என்பவன் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றினான். தொடர்ந்து அவரது மகன் அந்தியோக்கு எப்பிப்பான் யூதர்களை ஆட்சி புரிந்தான். அவன் கிரேக்க மொழி, பண்பாடு, வழிபாட்டு முறை, சிலை வழிபாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து வாழுமாறு யூதர்களை வற்புறுத்தினான். யூதமக்களுள் பலர் திருச்சட்டத்தையும் யூத கலாச்சாரத்தையும் வழிபாட்டு முறைகளையும் புறக்கணித்து அரசனின் கட்டளைக்குப் பணிந்தனர்.

www.malankaralibrary.com

*3.வேற்று நாடுகளில் சிறை பிடிக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் எதிர்நோக்கிற்கான உற்சாகம் பெற்றது எவ்வாறு?*

அடிமை வாழ்வின் போது மக்களுக்கு ஆறுதலளிக்கவும் நம்பிக்கையூட்டவும் இறைவாக்கினர்கள் எசாயாவும் எசேக்கியேலும் பாபிலோனில் மக்களுடனேயே தங்கினர். ஆண்டவரிடமிருந்து அகன்று போன இஸ்ராயேலர்கள் ஒரே கடவுள் நம்பிக்கைக்குத் திரும்ப பாபிலோனியன் அடிமை வாழ்வின் அனுபவங்கள் உதவின. அடிமை வாழ்வினின்று ஆண்டவர் விடுதலையாக்கி எருசலேமுக்கு வழி நடத்துவார் என்ற எதிர்பார்ப்பும் இறைவாக்கினர்கள் மக்களுக்கு அளித்தனர்.

*4.இஸ்ரயேல் மக்கள் பாபிலோனியன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றது எவ்வாறு?*

கிரேக்கர்களின் கொடுமைகளைத் தடுப்பதற்கு யூதர்கள் சிலர் ஆயத்தமாயினர். அவர்களுக்குத் தலைமையேற்றவர் யூதாமக்கபே என்பவராவர். அவரது ஆதரவாளர்கள் 'மக்கபேயர்' எனப்பட்டனர். மக்கபேயரின் தலைமையில் யூதர்கள் வெற்றி பெற்றனர்.

*5.கிரேக்க ஆட்சியின் கீழே இஸ்ரயேல் மக்கள் அடைந்த துன்பங்கள் யாவை?*

கிரேக்க மொழி, பண்பாடு, வழிபாட்டு முறை, சிலை வழிபாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து வாழுமாறு யூதர்கள் வற்புறுத்தப்பட்டனர். இறை மக்களுள் பலர் திருச்சட்டத்தையும் யூத கலாச்சாரத்தையும் வழிபாட்டு முறைகளையும் புறக்கணித்து அரசனின் கட்டளைக்குப் பணிந்தனர். கிரேக்கர்களின் ஆட்சியின் போது சமய கலாபனை தீவிரமானது. ஆயிரக்கணக்கான யூதர்கள் பெருந்துன்பத்திற்குள்ளாகி தங்கள் உயிரையும் அர்ப்பணம் செய்தனர். மேலும், சிலை வழிபாடு நடத்தவும், விலக்கப்பட்ட பன்றி இறைச்சியை உண்ணவும் யூதர்களைக் கட்டாயப்படுத்தினர்.

*6.இஸ்ரயேல் மக்களைப் பாதுகாப்பதற்கு ஒரு மீட்பரின் தேவை ஏற்பட்டது ஏன்?* இஸ்ரயேலர் அன்னிய ஆதிக்கத்தில் இருந்த போது மீட்பரை பற்றிய சிந்தனை அவர்களிடம் வலிமை அடைந்தது. இறைவாக்கினர்கள் மூலமாக ஆண்டவர் அருளிய செய்திகள் மீட்பரின் வருகையை எதிர்பார்த்திருப்பதற்கான ஆவலை மக்களுக்கு தூண்டின.

*7.இறைவாக்கினர்கள் இஸ்ரயேல் மக்களை ஒருங்கிணைத்தது எவ்வாறு?*

இஸ்ரயேலர் அன்னிய ஆதிக்கத்தில் இருந்த போது மீட்பரைப் பற்றிய சிந்தனை அவர்களிடம் வலிமை அடைந்தது. மீட்பரின் வருகையைப் பற்றிய நிறைவுற்ற நம்பிக்கை அளிக்கும் இறைவாக்குகளைக் கூறி இறைமக்களை ஒன்றிணைத்து நிற்கச் செய்தனர் இறைவாக்கினர்கள்.

*குறு வினாக்கள்*

1. *யூதாவிலும் எருசலேமிலுமுள்ள இஸ்ரயேல் மக்கள் தங்கள் நாடும் நகரமும் இழந்து எங்கே அடிமைகளாக வாழ்ந்தனர்?* பாபிலோனில்
2. *இறைமக்கள் வேற்று நாட்டு வாழ்வுக்குத் தள்ளப்பட்டதன் காரணம் என்ன?* இறைமக்கள் ஆண்டவரின் நம்பிக்கைக்குரியவர்களாக வாழாததன் தண்டனையாகவே வேற்று நாட்டு வாழ்வுக்குத் தள்ளப்பட்டனர்.
3. *மக்களின் நம்பிக்கை துரோகத்திற்கு ஆண்டவர் அவர்களைத் தண்டிப்பார் என எச்சரித்தவர்கள் யாவர்?* இறைவாக்கினர்கள்
4. *பாபிலோன் சிறையிருப்பின் போது மக்களுக்கு ஆறுதலளிக்கவும் நம்பிக்கையூட்டவும் பாபிலோனில் மக்களுடனேயே தங்கிய இறைவாக்கினர்கள் யாவர்?* எசாயா, எசேக்கியேல்
5. *ஆண்டவரிடமிருந்து அகன்று போன இஸ்ராயேலர்கள் ஒரே கடவுள் நம்பிக்கைக்குத் திரும்ப அவர்களது எந்த அனுபவங்கள் உதவின?* பாபிலோனியன் அடிமை வாழ்வின் அனுபவங்கள்
6. *அடிமை வாழ்வினின்று ஆண்டவர் விடுதலையாக்கி எருசலேமுக்கு வழி நடத்துவார் என்ற எதிர்பார்ப்பை மக்களுக்கு அளித்தவர்கள் யாவர்?* இறைவாக்கினர்கள்
7. *இறைமக்கள் பாபிலோனில் அடிமைகளாக வாழ்ந்த காலம் எது?* கி.மு. - 587 முதல் 538 வரை
8. *பாரசீக மன்னர் சைரசு எப்போது பாபிலோனைக் கைப்பற்றினார்?* கி.மு. 538 - ல்

www.malankaralibrary.com

9. *கி.மு. 538 - ல் இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலை அளித்து எருசலேமுக்குத் திரும்பிச் செல்ல அனுமதி அளித்தவர் யார்?* பாரசீக மன்னர் சைரசு
10. *எருசலேமில் திரும்பிச் சென்ற இஸ்ரயேல் மக்கள் 'எப்பெயரால் அழைக்கப்பட்டனர் ?* 'யூதர்கள்
11. *எருசலேமுக்குத் திரும்பிச் சென்ற மக்கள் செய்தது என்ன?* பாபிலோனிய மன்னனால் அழிக்கப்பட்ட எருசலேம் தேவாலயத்தையும் நகரத்தையும் மீண்டும் கட்டியெழுப்பினர்.
12. *எருசலேமுக்கு திரும்பிச் சென்ற மக்கள் எருசலேம் கோவிலை மீண்டும் புனிதப்படுத்தியது எப்போது?* கி.மு. 515 -ல்
13. *எஸ்ரா, நெகேமியா ஆகியோரின் பணிகள் வாயிலாக கடவுளிடம் இஸ்ராயேலர் திரும்பி வந்தது எவ்வாறு?* மக்களை மறைவாழ்வில் உறுதிப்படுத்தவும் அவர்களது சமூக வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும் எஸ்ரா, நெகேமியா ஆகியோர் தலைமையேற்று சீர்திருத்தங்கள் பல செய்தனர். உடன்படிக்கையை மீறியதால் ஆண்டவரிடமிருந்து அகன்று போன இஸ்ராயேல் மக்கள் மீண்டும் ஆண்டவரோடு உடன்படிக்கையைப் புதுப்பித்தனர். அவ்விதம் ஆண்டவராகிய கடவுளிடம் இஸ்ராயேலர் திரும்பி வந்தனர்.
14. *இஸ்ராயேல் மக்கள் பாரசிக ஆதிக்கத்தில் வாழ்ந்த காலம் எத்தனை?* இரண்டு நூற்றாண்டுகாலம்
15. *எப்போது முதல் பேரரசர் அலக்சாண்டரின் தலைமையில் கிரேக்கர்கள் இஸ்ரயேல் மீது ஆதிக்கம் செலுத்தினர்?* கி.மு. 332ல்
16. *கிரேக்கர்கள் இஸ்ரயேல் மீது ஆதிக்கம் செலுத்திய காலத்தில் இஸ்ரயேல் தேசம் அழைக்கப்பட்ட வேறொரு பெயர் என்ன?* பாலஸ்தீனம்
17. *அலக்சாண்டருக்குப் பின்னர் கி.மு. 301-ல் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிய எகிப்தின் கிரேக்க ஆட்சியாளர் யார்?* முதலாம் தலாமி
18. *யூதர்கள் பாலஸ்தீனத்துக்கு வெளியே குடியேறி வாழத்தொடங்கியது ஏன்?* யூதர்கள் முதலாம் தலாமியின் ஆட்சிக்காலத்தில் கிரேக்கரின் மொழி, பண்பாடு, வாழ்க்கை முறை, இறையியல், வழிபாட்டுமுறை ஆகியவற்றில் அளவற்ற நாட்டங்கொண்டனர். கிரேக்க சமய சடங்குகளால் ஈர்க்கப்பட்டு யூத மறையைக் கைவிடத் தொடங்கினர். பெரும் மகிழ்ச்சியும் பேரின்பமும் தரக்கூடிய வாழ்க்கையை யூதர்கள் விரும்பினர். எனவே அவர்களுள் பலர் பாலஸ்தீனத்துக்கு வெளியே குடியேறி வாழத்தொடங்கினர்.
19. *கி.மு. 198 -ல் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றிய சிரியா நாட்டின் கிரேக்க ஆட்சியாளர் யார்?* மூன்றாம் அந்தியோக்கு
20. *மூன்றாம் அந்தியோக்கைத் தொடர்ந்து யூதர்களை ஆட்சி புரிந்த அவரது மகன் யார்?* அந்தியோக்கு எப்பிப்பான்
21. *அந்தியோக்கு எப்பிப்பான் யூதர்களுக்கு எதிராக செயல்பட்டது எவ்வாறு?* அந்தியோக்கு எப்பிப்பான் கிரேக்க மொழி, பண்பாடு, வழிபாட்டுமுறை, சிலைவழிபாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து வாழுமாறு யூதர்களை வற்புறுத்தினான். இறை மக்களுள் பலர் திருச்சட்டத்தையும் யூத கலாச்சாரத்தையும் வழிபாட்டுமுறைகளையும் புறக்கணித்து அரசனின் கட்டளைக்குப் பணிந்தனர்.
22. *கிரேக்கர்களின் இப்படிப்பட்ட கொடுமைகளைத் தடுப்பதற்கு ஆயத்தமான யூதர்களுக்குத் தலைமையேற்றவர் யார்?* யூதாமக்கபே
23. *யூதாமக்கபே ஆதரவாளர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?* 'மக்கபேயர்'
24. *மக்கபேயரின் தலைமையில் யூதர்கள் வெற்றி பெற்ற பின்னர் எருசலேம் தேவாலயத்தைத் தூய்மைப்படுத்தி ஆண்டவருக்கு அர்ப்பணித்தது எப்போது* கி.மு. 165 -ல்
25. *உரோமானியப் படைத்தலைவரான போம்பே என்பவர் பாலஸ்தீனாவைக் கைப்பற்றியது எப்போது?* கி.மு. 63 -ல்
26. *இயேசு கிறிஸ்து பிறக்கும்போது பாலஸ்தீனம் எந்த ஆட்சியின் கீழ் இருந்தது?* உரோமானியப் பேரரசரின்

www.malankaralibrary.com

27. *பாலஸ்தீனாவில் ஏரோது எப்போது அரசரானார்?* கி.மு. 37- ல்

28. *இறைவாக்கினர்கள் மூலமாக ஆண்டவர் அருளிய செய்திகள் எதை எதிர்பார்த்திருப்பதற்கான ஆவலை மக்களுக்குத் தூண்டின?* மீட்பரின் வருகையை

29. *மக்கபேயரின் காலத்து ஸ்மூனியும் ஏழு புதல்வர்களும் வியாழன் காலை மன்றாட்டில் எவ்வாறு நினைவு கூர்கிறோம்?*

"காலையில் வேண்டுதல் செய்தாளே

ஸ்மூனி ஆண்டவரிடமிதுவாய்

இறைவா கொடுங்கோ னந்தியோக்கியஸ்

கையில் நின்றெமைக் காத்தருளும்

அரி போலரிந்தா னென் சுதரை

எனையும் குதறிடப் பாய்கின்றான்"

30. "ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர்க்குத் தீங்கு எதுவும் நேராது. அவர்களை அவர் சோதனையினின்று மீண்டும் மீண்டும் விடுவிப்பார்" (சீராக் 33:1)

## பாடம் 11 மெசியாவை பற்றிய இறைவாக்குகள்

பயிற்சி வினாக்கள்

*1. மெசியா என்னும் சொல்லின் பொருள் யாது?* "மெசியா" என்ற எபிரேயச் சொல்லின் பொருள் 'அருள் பொழிவு பெற்றவர்' என்பதேயாகும்.

*2.மெசியாவின் முக்கிய கடமைகளாக இஸ்ரயேலர் எண்ணியிருந்தவை யாவை?* இஸ்ரயேலை பாதுகாப்பதும் எருசலேமைப் பகைவரிடமிருந்து கைப்பற்றுவதுமே தாவீதின் குலத்தில் தோன்றும் மெசியாவின் முக்கிய கடமைகள் என அவர்கள் எண்ணியிருந்தனர்.

*3. "இம்மானுவேல் இறைவாக்கு" - என்பதைத் தெளிவுபடுத்துக?* மெசியாவைக் குறித்த ஓர் இறைவாக்கு எசாயாவினுடையதாகும். "இம்மானுவேல் இறைவாக்கு" என்று அறியப்படும் இந்த திருவாக்கு யூதா நாட்டு அரசன் ஆகாசுக்கு எசாயா இறைவாக்கினரால் அருளப்பட்ட வாக்குறுதி ஆகும். அது கீழ் வருமாறு, "இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு அவள் இம்மானுவேல் என்று பெயரிடுவாள்" (ஏசாயா 7 : 14) என்பதாகும். எசாயா இறைவாக்கினர் இறைவாக்குரைத்தது வரவிருக்கும் மெசியாவைக் குறித்து தான்.

*4. மீக்கா உரைத்த இறைவாக்கின் முக்கிய கருத்துகள் யாவை?* எசாயாவின் சமகாலத்தவரான மீக்கா இறைவாக்கினரும் மெசியாவைப் பற்றிய இறைவாக்குகள் தெளிவாகத் தந்திருக்கின்றார். அவர் மெசியாவின் பிறப்பு பற்றி, "நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய். ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்." (மீக்கா 5:2) என முன்னறிவித்துள்ளார். இஸ்ரயேலை வழிநடத்துவதற்கு தாவீதின் குலத்தில் பிறக்கப் போகும் மெசியாவின் வருகை பெத்லகேமிலிருந்து தான் என்பதே மீக்காவின் இறைவாக்கு. மெசியா ஊழி- ஊழி காலங்களுக்கு முன்பே உள்ளவர்; அவர் வருகையால் இஸ்ரயேல் மக்கள் ஒன்று கூட்டப்படுவார்கள். கடவுளாகிய ஆண்டவரின் மாட்சியோடு மெசியா தம் மந்தையை மேய்ப்பார் எனவும் மீக்கா இறைவாக்குரைத்தார்.

*5. மெசியாவைக் குறித்த எரேமியாவின் இறைவாக்குகள் யாவை?* எரேமியா இறைவாக்கினர் மெசியாவைக் குறித்து, "இதோ நாட்கள் வருகின்றன. அப்போது நான் தாவீதுக்கு ஒரு நீதியுள்ள 'தளிர்' தோன்றச் செய்வேன். அவர் ஞானமுடன் அரசராய் ஆட்சி செலுத்துவார். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையையும் நிலை நாட்டுவார்." (எரேமியா 23 : 5) என முன்னறிவித்தார். தாவீதின் குலத்தில் மெசியா பிறப்பார் என்னும்

www.malankaralibrary.com

வாக்குறுதி தான் எரேமியா முன் மொழிகின்ற 'நீதியுள்ள தளிர்' என்ற அருள் வாக்கு.

*6. மெசியாவின் வருகையைக்குறித்து செக்கரியாவின் இறைவாக்கு யாது?* செக்கரியா தனது இறைவாக்குரையில் மெசியாவின் வருகை அண்மையிலுள்ளது என்று குறிப்பிடுகின்றார். மெசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டு கால மக்களின் எதிர்பார்ப்புகளின் இறுதியாக செக்கரியா முன்னறிவித்துள்ளார். "மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ ! உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர். வெற்றி வேந்தர். எளிமையுள்ளவர். கழுதையின் மேல், கழுதைக் குட்டியாகிய மறியின் மேல் ஏறி வருகிறார்" (செக்கரியா 9 : 9 ) என்பதுவே அந்த இறைவாக்கு.

*7. மெசியாவைப் பற்றிய யாக்கோபின் குறிப்புரை யாது?*

மூதாதையரான யாக்கோபு தனது புதல்வர்களுக்கு ஆசிவழங்கும் வேளையில் யூதாவை "அரசுரிமை உடையவர் வரும் வரையில் மக்களினங்கள் அவருக்கு பணிந்திடும் வரையில், யூதாவை விட்டுச் செங்கோல் நீங்காது; அவன் மரபை விட்டுக் கொற்றம் மறையாது." (தொடக்க நூல் 49 : 10) என ஆசீர்வதித்தார். இந்த குறிப்புரை மெசியாவின் வருகையை யாக்கோபு முன்னதாக உணர்ந்து கூறியதுவே ஆகும்.

குறுவினாக்கள்

1. *இறைமக்களாகிய இஸ்ரயேலுக்கு எதைப்பற்றிய எதிர்நோக்கு, மிகுந்த நம்பிக்கையையும், ஆறுதலையும் கொடுத்தது?* மெசியாவின் வருகை
2. "மெசியா" என்ற எபிரேயச் சொல்லின் பொருள் 'அருட்பொழிவு பெற்றவர்' என்பதேயாகும்.
3. *எந்த வார்த்தையின் கிரேக்கச் சொல்லிலிருந்து 'கிறிஸ்து' என்ற பெயர் பிறந்தது?* "மெசியா"
4. *"தங்களை மீட்பதற்கு மெசியா வருவார்" என்ற எதிர்பார்ப்பு இஸ்ராயேல் மக்களிடம் எப்போது உருவாகியது?* "தங்களை மீட்பதற்கு மெசியா வருவார்" என்ற எதிர்பார்ப்பு இஸ்ரயேல் மக்களிடம் மிகுதியாக உருப்பெற்ற காலம், அவர்கள் பாபிலோனில் சிறைப்படுத்தப்பட்ட போதும் அதற்கு பின்னருமேயாகும்.
5. *'மெசியா' என்ற சொல்லுக்கு பழைய ஏற்பாடு கொண்டிருந்த கருத்து என்ன?* 'கால நிறைவில் ஆண்டவரால் அனுப்பப்படும் அரசர்'
6. *மெசியா பற்றி யூதர்களின் கருத்து என்ன?* அரசராகத் தங்களுக்கு விடுதலைப் பெற்றுத் தருவதற்கான மனித சக்தி படைத்த ஒருவர் தான் மெசியா என்று யூதர்கள் எண்ணியிருந்தனர்.
7. *மெசியா தம் வருகைக்காக எக்குலத்தை தேர்ந்தெடுத்தார்?* தாவீது
8. *"இம்மானுவேல் இறைவாக்கு" என்ற திருவாக்கு எசாயா இறைவாக்கினரால் யாருக்கு அருளப்பட்ட வாக்குறுதி ஆகும்?* யூதா நாட்டு அரசன் ஆகாசுக்கு
9. "இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு அவள் இம்மானுவேல் என்று பெயரிடுவாள்" (ஏசாயா 7 : 14)
10. "நீயோ, எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களுள் மிகச் சிறியதாய் இருக்கின்றாய். ஆயினும், இஸ்ரயேலை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னிடமிருந்தே தோன்றுவார்." (மீக்கா 5:2)
11. *'நீதியுள்ள தளிர்' என்ற அருள் வாக்கு யாருடையது?* எரேமியா
12. *மெசியாவின் வருகை பற்றி எசேக்கியேல் எவ்வாறு இறைவாக்குரைத்துள்ளார்?* வரவிருப்பவர் மக்களின் ஆயனாய் இருப்பார் (எசேக்கியேல் 34 :23 - 24) என்று எசேக்கியேல் இறைவாக்குரைத்துள்ளார். மக்களை மேய்க்கவும், பாதுகாக்கவும் செய்கின்ற ஆயனும், ஊழியனும் ஆனவரே மெசியா. தாவீதின் குலம் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று எசேக்கியேல் உறுதியாக அறிவித்துள்ளார்.
13. "மகளே எருசலேம்! ஆர்ப்பரி. இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர். வெற்றி வேந்தர். எளிமையுள்ளவர். கழுதையின் மேல், கழுதைக் குட்டியாகிய மறியின் மேல் ஏறி வருகிறார்" (செக்கரியா 9 : 9 )

www.malankaralibrary.com

14. *தாவீதின் வழிமரபு மூலமாகத்தான் மெசியா வருவார் என்னும் திருப்பாடல்கள் யாவை?* 89 -ம் திருப்பாடல் 20 முதல் 38 வரை வசனங்கள்

15. *இஸ்ரயேல் மக்கள் எதிர்பார்த்த மெசியா கிறிஸ்துவே என்பதைக் குறிப்பிடுக?* மெசியாவைப் பற்றிய இஸ்ரயேல் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படுவது இயேசுவின் வருகையாலேயே. மெசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் இறைவாக்குகள் முழுமை பெறுவதும் இயேசுவில் தான். அவ்வாறு இயேசுவின் பிறப்புடன் மெசியாவைப் பற்றிய இஸ்ரயேல் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறியது. இயேசு இஸ்ராயேலுக்கு மட்டுமல்லாது உலகம் முழுமைக்கும் மெசியாவும், மீட்பரும் ஆவார்.

16. *இயேசுவின் பிறப்பு பற்றிய எசாயாவின் இறைவாக்கு, ஞாயிறு காலை மன்றாட்டில் நாம் எவ்வாறு பாடுகிறோம்?*

“அம்மானுவேல்" என்னும் திருக்குழந்தை

கன்னியின் கருவினிலே

விந்தையுடன் கருவாகிடுமே

எனமுன்னுரைத்தார் ஏசாயா

அவரிறை வார்த்தை நிறைவேற

மரியில் மழவாய் உதித்தவரே,

நின்னருளின் அழகிசை பாடுகிறோம்”

பகுதி இரண்டு வழிபாட்டு முறை

## பாடம் 12 திருப்பலி முன்னுரை

பயிற்சி வினாக்கள்

*1.பழைய ஏற்பாட்டில் காணப்படும் முக்கிய பலிகள் யாவை?* பழைய ஏற்பாட்டில் பல வகையான பலிகளை நாம் காண முடிகின்றது. ஆபேலின் பலி (தொ.நூல் 4:4) நோவாவின் பலி (தெ.நூல். 8:20-23) ஆபிரகாமின் பலி (தெ.நூல். 22:1-13) போன்ற பல பலிகளை பற்றி நாம் அறிய முடியும். மோசேயின் காலத்தில் பலி செலுத்துதல் இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் ஒரு பகுதியாக மாறியது.

எரிபலி, நல்லுறவு பலி, பாவக்கழுவாய் பலி போன்ற பலிகள் இஸ்ரயேலில் நடத்தப்பட்டன. பழுதற்ற காளையையோ, ஆட்டுக் குட்டியையோ, புறாவையோ பலியாக அர்ப்பணித்தனர். பலிபொருளைக் கொன்று அதன் இரத்தத்தை பலிபீடத்தில் தெளிக்கவும், தோலுரித்த மாமிசத்தை எரிக்கவும் செய்திருந்தனர். பல்வேறு பலிகளுடன் சேர்த்து பலி பீடத்தில் அப்பமும் திராட்சை இரசமும் சமர்ப்பித்தலும், தூபம் அர்ப்பித்தலும் நடைபெற்றுவந்தன.

பழைய ஏற்பாட்டின் அனைத்து பலிகளும் கிறிஸ்துவின் சிலுவை பலியின் முன் அடையாளமாக அமைந்தன.

*2.இஸ்ரயேல் மக்கள் பாஸ்கா கொண்டாடியது எவ்வாறு?* எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆண்டவர் இஸ்ரயேல் மக்களை விடுதலையாக்கியதன் நினைவே பாஸ்கா. 'கடந்து செல்லல்' என்பதே பாஸ்கா என்ற சொல்லின் பொருள். இஸ்ரயேலர் ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை வீடுகளின் இருகதவு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் பூசினர். அந்த அடையாளத்தால் அழிக்கும் தூதர்' இஸ்ரயேல் மக்களின் தலையீற்று மகன்களைச் சாகடிக்கவில்லை. கடவுள் எகிப்தின் தலையீற்று மகன்களைக் கொன்று, இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலை அளித்த இந்நிகழ்ச்சியை அவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். இதுவே பாஸ்கா திருவிழா. நெருப்பில் சுட்ட ஆட்டின் இறைச்சியை, புளிப்பற்ற அப்பத்தோடும் கசப்புக்கீரையோடும் உண்ணவும் திராட்சை இரசம் பருகவும் திருப்பாடல்கள் பாடவும் செய்தனர்.

*3.இயேசு திருத்தூதர்களுடன் சேர்ந்து பாஸ்கா கொண்டாடியது எவ்வாறு?* யூதர்களின் பாஸ்கா திருநாளில் இயேசு பன்னிரண்டு திருத்தூதர்களுடன் சேர்ந்து பாஸ்கா கொண்டாடினார். அன்று இரவு இயேசு அப்பத்தை எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு சீடர்களுக்குக் கொடுத்து, "இது உங்களுக்காகக்

www.malankaralibrary.com

கொடுக்கப்படும் எனது உடல், எனது நினைவாக வாங்கி உண்ணுங்கள்" என்றார். பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து, "கடவுளுக்கு நன்றி செலுத்தி, இது பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் எனது உடன்படிக்கையின் இரத்தம், இதை வாங்கிப் பருகுங்கள்" என்றார் (மத்தேயு 26:26 - 28) "இதை எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்று கூறி இயேசு நற்கருணையை நிறுவினார்.

*4.இயேசு அப்பம் பிட்டு வழங்கியதும், திராட்சை இரசம் பகிர்ந்து அளித்ததும் எதைக் குறிப்பிடுகிறது?* இயேசு தம்மையே சிலுவையில் கையளித்ததன் அடையாளமாக அப்பத்தை எடுத்து பிட்டு தனது உடலாகவும் இரசத்தை எடுத்து தனது இரத்தமாகவும் வழங்கினார்.

இயேசு தமது உடலை மனித குலத்தின் மீட்புக்காக கையளித்ததன் அடையாளமாக அப்பத்தை பிட்டு வழங்கினார். இரத்தம் சிந்தியதன் அடையாளமாக இரசத்தை பகிர்ந்தளித்தார். நற்கருணைப் பலியில் திரு உடலும், திரு இரத்தமும் இயேசுவின் முழுமையான தற்கையளிப்பைக் குறிக்கின்றது. அனைத்து பலிகளிலும் இரத்தம் சிந்துதல் இன்றியமையாதது ஆகும். பலியின் போது மாமிசமும் இரத்தமும் தனித்தனியாக வேறுபடுத்தப்படுகின்றன. இயேசுவின் சிலுவை மரணம் வழியாக அவர் பலியானார். அவரது மாமிசமும் இரத்தமும் தனித்தனியாக வேறுபடுத்தப்பட்டது. இயேசு இறுதி பாஸ்கா கொண்டாடிய போது தமது சிலுவை மரணத்தைக் குறிப்பிடவும் செய்தார்.

*5.நற்கருணைப்பலி அன்பின் பலி விளக்குக?* அப்பத்தைத் தமது திருஉடலாகவும் திராட்சை இரசத்தைத் தமது திரு இரத்தமாகவும் கொடுத்தது வழியாக தேவ நற்கருணை ஒரு பலி தான் என்று அவர் கற்பித்தார். இயேசு தந்தைக் கடவுளுக்கு சமர்ப்பித்த நன்றியின் வெளிப்பாடுதான் நற்கருணை என்ற திருப்பலி. இப்பலியில் இயேசு தாமே பலிப்பொருளாகவும் பலியை நிறைவேற்றும் குருவாகவும் செயலாற்றுகிறார். இயேசு மானிடர் மேல் கொண்ட அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடுதான் திருப்பலி.

*6."எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்ற இயேசுவின் கட்டளையைத் திருச்சபை எந்த பொருளில் புரிந்து கொள்கிறது?* "எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" (லூக். 22 : 19) என்ற இயேசுவின் கட்டளைக்கேற்ப குரு அப்பமும் இரசமும் எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி தூய்மைப்படுத்தும் போது இயேசுவின் திரு உடலாகவும், திரு இரத்தமாகவும் மாற்றம் அடைகிறது. திருப்பலியின் போது இயேசுவின் திரு உடலும் திரு இரத்தமும் உண்பது வழியாக நமக்கு நிலைவாழ்வு கிடைக்கிறது. மனித இனம் முழுவதன் மீட்புக்காகவும் நிலை வாழ்விற்காகவும் நிறுவப்பட்ட திருவருட்சாதனம் தான் தேவ நற்கருணை. இத்திருப்பலி உலகம் முடிவு வரைத் தொடர்வதற்கான அதிகாரம் இயேசு திருச்சபைக்கு அளித்துள்ளார். இவ்வாறு திருச்சபையில் பலி செலுத்துதல் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அகிலத்தின் படைப்பு, ஆபிரகாமை அழைத்தது முதல் தொடங்கப்பட்ட இஸ்ரயேலின் வரலாறு, இயேசுவின் பிறப்பு, திருமுழுக்கு, திருப்பணி வாழ்க்கை, இறுதி இரவுணவு, சிலுவை இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம், இரண்டாம் வருகை ஆகிய மீட்பின் நிகழ்வுகள் அனைத்தும் திருப்பலியில் நாம் நினைவு கூரவும் கொண்டாடவும் செய்கிறோம்.

*7.'கிறிஸ்தவ வாழ்வின் மையமாகவும் மகுடமாகவும் அமைவது திருப்பலியே' எவ்வாறு?*

கிறிஸ்தவ வாழ்வின் மையமாகவும், மகுடமாகவும் அமைவது திருப்பலியேயாகும். ஏனெனில், அது அகிலத்தின் படைப்பு முதல் இயேசுவின் இரண்டாம் வருகை வரையிலான மீட்பின் இரகசியங்களின் மீள் நிகழ்வாக்கம் ஆகும். திருப்பலியை அருள் அடையாளங்களின் அருள் அடையாளம் என்றே திருச்சபை கருதுகிறது. மற்று அனைத்து திருவருட்சாதனங்களுக்கும் பாதை அல்லது வழியாக அமைவது திருப்பலியேயாகும். இந்த தெய்வீகப் பலியில் பங்கு சேர்ந்து நாம் கிறிஸ்துவுடன் நம்மையே பலியாக்குகிறோம். ஆகவே இப்பலி திருச்சபையின் பலியேயாகும். கடவுள் இயேசு வழியாக நமக்குச் செய்த வியப்புக்குரிய செயல்களை ஒவ்வொரு திருப்பலியிலும் நாம் நினைவு கூர்கிறோம். ஒரே அப்பம் உண்ணவும், ஒரே கிண்ணத்திலிருந்து பருகவும் செய்கின்ற நாம் இயேசுவில் ஒருடலாகின்றோம். நற்கருணையின் அனுபவம் ஒன்றிப்பு, சமூக உறவு இவற்றின் அனுபவமே. சமூகத்தை அன்பிலும் ஒற்றுமையிலும் ஒன்றிணைக்கும் தெய்வீக விருந்து தான் திருப்பலி.

www.malankaralibrary.com

குறுவினா விடைகள்

1. *கிறிஸ்தவ திருச்சபை எங்கே துவங்கியது?* எருசலேமில்
2. *கிறிஸ்தவ திருச்சபை எந்த மதத்திலிருந்து சடங்குமுறைகளையும், வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக்கொண்டது?* யூத மதத்திலிருந்து
3. *எந்த மதத்தின் பின்னணியில் துவக்க கிறிஸ்தவ திருச்சபை வளர்ந்து வந்தது?* யூத
4. *துவக்க கிறிஸ்தவ வழிபாட்டில் மிகுதியாகக் காணப்பட்டவை எவை?* பழைய ஏற்பாட்டு கால பலிகளும் திருவிழாக்களும்
5. *அனைத்து சமய வழிபாடுகளிலும்* (யூத சமய வழிபாட்டிலும்) *முக்கிய இடம் பெறுவது எது?* பலி செலுத்துதல்
6. *இஸ்ரயேல் மக்களுள் பலி செலுத்தியிருந்தவர்கள் யாவர்?* தனி நபர்களும் குடும்பத்தலைவர்களும்.
7. *தொடக்க நூலில் காணப்படும் முக்கிய பலிகள் யாவை?* ஆபேலின் பலி (தொ.நூல் 4:4) நோவாவின் பலி (தொ.நூல். 8:20-23) ஆபிரகாமின் பலி (தெ.நூல். 22:1-13)
8. *யாருடைய காலத்தில் பலி செலுத்துதல் இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் ஒரு பகுதியாக மாறியது?* மோசேயின்
9. *பலி செலுத்தும் முறைகளும் சட்ட ஒழுங்குகளும் திருவிவிலியத்தில் எங்கே விளக்கப்பட்டுள்ளன?* லேவியர் ஆகமம் 1 முதல் 7 வரையுள்ள அதிகாரங்களில்
10. *பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட பலிப் பொருட்கள் யாவை?* பழுதற்ற காளை, ஆட்டுக் குட்டி, புறா
11. *பலி ஒப்புக்கொடுக்கும் போது பலிப்பொருளை என்ன செய்தனர்?* பலிபொருளைக் கொன்று அதன் இரத்தத்தை பலிபீடத்தில் தெளிக்கவும், தோலுரித்த மாமிசத்தை எரிக்கவும் செய்தனர்.
12. *இஸ்ரயேலில் நடத்தப்பட்ட பலிகள் யாவை?* எரிபலி, நல்லுறவு பலி, பாவக்கழுவாய் பலி
13. *பலிபீடத்தில் பலி செலுத்தப்படும் போது நடைபெறுபவை என்ன?* அப்பமும் திராட்சை இரசமும் சமர்ப்பித்தலும், தூபம் அர்ப்பித்தலும்
14. *பலி செலுத்துதலின் நோக்கம் என்ன?* ஆண்டவரிடம் மனிதனின் உறவை ஏற்புடையதாக்கி அந்த உறவு மேலும் வலுப்படுத்துவதே பலி செலுத்துதலின் நோக்கமாக இருந்தது.
15. *யூதர்கள் எந்த மனநிலையோடு பலி செலுத்தினர்?* கடவுளின் மாட்சியை ஒப்புக்கொண்டு அவரோடு நெருங்கிய உறவில் வளர்ந்து, அவரிடமிருந்து பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ள யூதர்கள் பலி செலுத்தினர்.
16. *ஆண்டவருக்கு ஏற்புடைய உண்மையான பலி எது?* கிறிஸ்துவின் கல்வாரி பலி
17. *கிறிஸ்துவின் கல்வாரி பலி வழியாக மக்கள் பெற்றுக்கொண்டது என்ன?* கிறிஸ்துவின் கல்வாரி பலி வழியாக கிறிஸ்து அனைவருக்கும் பாவக் கழுவாயும் அதன் வழி மீட்பும் அளித்தார்.
18. *கிறிஸ்துவின் சிலுவை பலியின் முன் அடையாளமாக அமைந்தவை என்ன?* பழைய ஏற்பாட்டின் அனைத்து பலிகள்
19. *பாஸ்கா என்ற சொல்லின் பொருள் என்ன?* 'கடந்து செல்லல்'
20. *பாஸ்கா என்றால் என்ன?* எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆண்டவர் இஸ்ரயேல் மக்களை விடுதலையாக்கியதன் நினைவே பாஸ்கா.
21. *இஸ்ரயேலர் ஆட்டுக்குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை எங்கே பூசினர்?* வீடுகளின் இருகதவு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் பூசினர்.
22. *வீடுகளின் இருகதவு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் பூசப்பட்ட இரத்தத்தின் அடையாளத்தால் இஸ்ரயேலருக்கு என்ன நிகழவில்லை?* அழிக்கும் தூதர்' இஸ்ரயேல் மக்களின் தலையீற்று மகன்களைச் சாகடிக்கவில்லை.

www.malankaralibrary.com

23. *பாஸ்கா திருவிழாவின் போது எந்த நிகழ்ச்சியை மகிழ்வுடன் கொண்டாடினர்?* கடவுள் எகிப்தின் தலையீற்று மகன்களைக் கொன்று, இஸ்ரயேல் மக்களுக்கு விடுதலை அளித்த நிகழ்ச்சியை அவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

24. *நெருப்பில் சுட்ட ஆட்டின் இறைச்சியை எவ்வாறு உண்டனர்?* நெருப்பில் சுட்ட ஆட்டின் இறைச்சியை, புளிப்பற்ற அப்பத்தோடும் கசப்புக் கீரையோடும் உண்ணவும் திராட்சை இரசம் பருகவும் திருப்பாடல்கள் பாடவும் செய்தனர்.

25. *யூதர்களின் பாஸ்காத் திருநாளில் இயேசு யாருடன் பாஸ்கா கொண்டாடினார்?* தனது பன்னிரண்டு திருத்தூதர்களுடன்

26. *இயேசு அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு சீடர்களுக்குக் கொடுத்து, கூறியது என்ன?* "இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல், எனது நினைவாக வாங்கி உண்ணுங்கள்"

27. *இயேசு கிண்ணத்தை எடுத்துக் கூறியது என்ன?* "கடவுளுக்கு நன்றி செலுத்தி, இது பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் எனது உடன் படிக்கையின் இரத்தம், இதை வாங்கிப் பருகுங்கள்" என்றார் (மத்தேயு 26:26 - 28)

28. *இயேசு நற்கருணையை நிறுவிய பின்னர் கூறிய வார்த்தை என்ன?* “இதை எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்"

29. *இயேசு தம்மையே சிலுவையில் கையளித்ததன் அடையாளமாக செய்தது என்ன?* அப்பத்தை எடுத்து, பிட்டு தனது உடலாகவும் இரசத்தை எடுத்து தனது இரத்தமாகவும் வழங்கினார்.

30. *இயேசு தமது உடலை மனித குலத்தின் மீட்புக்காக கையளித்ததன் அடையாளமாக செய்தது என்ன?* அப்பத்தை பிட்டு வழங்கினார்

31. *இயேசு இரத்தம் சிந்தியதன் அடையாளமாக செய்தது என்ன?* இரசத்தை பகிர்ந்தளித்தார்.

32. நற்கருணைப்பலியில் <u>திரு உடலும்</u>, <u>திரு இரத்தமும்</u> இயேசுவின் <u>முழுமையான</u> தற்கையளிப்பைக் குறிக்கிறது.

33. *அனைத்து பலிகளிலும் இன்றியமையாதது எனக் கருதப்படுவது யாது?* இரத்தம் சிந்துதல்

34. *பலியின் போது தனித்தனியாக வேறுபடுத்தப்படுபவை என்ன?* மாமிசமும் இரத்தமும்

35. *இயேசுவின் சிலுவை மரணம் என்னும் பலியின் போது எவ்வாறு வேறுபடுத்தப்பட்டார்?* இயேசுவின் திரு உடலும் திரு இரத்தமும் தனித்தனியாக

36. *இயேசு இறுதி பாஸ்கா கொண்டாடிய போது குறிப்பிட்டது என்ன?* இயேசுவின் சிலுவை மரணத்தைப் பற்றி

37. *தேவ நற்கருணை ஒரு பலி என்பதை இயேசு எவ்வாறு கற்பித்தார்?* அப்பத்தைத் தமது திருஉடலாகவும் திராட்சை இரசத்தைத் தமது திரு இரத்தமாகவும் கொடுத்தது வழியாக தேவ நற்கருணை ஒரு பலி தான் என்று இயேசு கற்பித்தார்.

38. இயேசு <u>தந்தைக் கடவுளுக்கு</u> சமர்ப்பித்த நன்றி வெளிப்பாடுதான் <u>நற்கருணை</u> என்ற <u>திருப்பலி</u>.

39. *திருப்பலியில் இயேசு எந்தெந்த நிலையில் செயலாற்றுகிறார்?* இயேசு தாமே பலிப் பொருளாகவும் பலியை நிறைவேற்றும் குருவானவராகவும்

40. *இயேசு மானிடர் மேல் கொண்ட அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடு என்பது என்ன?* திருப்பலி

41. *“எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்” (லூக். 22 : 19) என்ற இயேசுவின் கட்டளைக்கேற்ப குரு அப்பமும் இரசமும் எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி தூய்மைப்படுத்தும் போது அவை எவ்வாறு மாற்றமடைகின்றன?* இயேசுவின் திரு உடலாகவும், திரு இரத்தமாகவும் மாற்றம் அடைகின்றன.

42. *திருப்பலியின் போது இயேசுவின் திரு உடலும் திரு இரத்தமும் உண்பது வழியாக நமக்கு கிடைப்பது என்ன?* நிலைவாழ்வு

43. *தேவ நற்கருணை யாருக்காக எதற்காக நிறுவப்பட்டது?* மனித இனம் முழுவதன் மீட்புக்காகவும் நிலை வாழ்விற்காகவும் நிறுவப்பட்ட திருவருட்சாதனம் தான் தேவ நற்கருணை.
44. *திருச்சபையில் பலி செலுத்துதல் இப்போதும் தொடர்ந்திட காரணம் என்ன?* திருப்பலியை உலகம் முடிவு வரையும் தொடர்வதற்கான அதிகாரத்தை இயேசு திருச்சபைக்கு அளித்துள்ளார். எனவே திருச்சபையில் பலி செலுத்துதல் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
45. *திருப்பலியில் நாம் நினைவு கூரும் மீட்பின் நிகழ்வுகள் யாவை?* அகிலத்தின் படைப்பு, ஆபிரகாமை அழைத்தது முதல் தொடங்கப்பட்ட இஸ்ரயேலின் வரலாறு, இயேசுவின் பிறப்பு, திருமுழுக்கு, திருப்பணி வாழ்க்கை, இறுதி இரவுணவு, சிலுவை இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம், இரண்டாம் வருகை ஆகிய மீட்பின் நிகழ்வுகள் அனைத்தும் திருப்பலியில் நாம் நினைவு கூரவும் கொண்டாடவும் செய்கிறோம்.
46. கிறிஸ்தவ வாழ்வின் <u>மையமாகவும்</u>, <u>மகுடமாகவும்</u> அமைவது திருப்பலியேயாகும்.
47. *அகிலத்தின் படைப்பு முதல் இயேசுவின் இரண்டாம் வருகை வரையிலான மீட்பின் இரகசியங்களின் மீள் நிகழ்வாக்கம் எனப்படுவது யாது?* திருப்பலி
48. *அருள் அடையாளங்களின் அருள் அடையாளம் என திருச்சபை எதனைக் கருதுகிறது?* திருப்பலியை
49. *அனைத்து திருவருட்சாதனங்களுக்கும் வழியாக அமைவது எது?* திருப்பலி
50. *திருப்பலி திருச்சபையின் பலியாவது ஏன்?* திருப்பலி என்னும் தெய்வீகப் பலியில் பங்கு சேர்ந்து நாம் கிறிஸ்துவுடன் நம்மையே பலியாக்குகிறோம். ஆகவே திருப்பலி திருச்சபையின் பலியேயாகும்.
51. *ஒவ்வொரு திருப்பலியிலும் நாம் நினைவு கூர்வது என்ன?* கடவுள் இயேசு வழியாக நமக்குச் செய்த வியப்புக்குரிய செயல்களை.
52. *திருப்பலி ஒரு சமூக பலியாவது எப்படி?* ஒரே அப்பத்தை உண்ணவும், ஒரே கிண்ணத்திலிருந்து பருகவும் செய்கின்ற நாம் இயேசுவில் ஒருடலாகின்றோம். நற்கருணையின் அனுபவம் என்பது ஒன்றிப்பு மற்றும் சமூக உறவு இவற்றின் அனுபவமே ஆகும். இவ்வாறு ஒரு சமூகத்தை அன்பிலும் ஒற்றுமையிலும் ஒன்றிணைக்கும் தெய்வீக விருந்து தான் திருப்பலி.
53. *திருப்பலியின் போது நாம் செய்ய வேண்டியது என்ன?* திருப்பலியில் பக்தியோடு பங்கு பெற்று ஆண்டவரிடம் நமது அன்பையும், நன்றியையும் வெளிப்படுத்த வேண்டும்.
54. "கடவுளுக்கு <u>நன்றிப் பலி</u> செலுத்துங்கள். உன்னதர்க்கு உங்கள் <u>நேர்ச்சைகளை</u> நிறைவேற்றுங்கள்" (திருப்பாடல்கள் 50:14)

## பாடம் 13 திருப்பலியின் அமைப்பு

பயிற்சி வினாக்கள்

1. *ஆயத்தத் திருச்சடங்கு - குறிப்பெழுதுக?* தூயகத்தினுள் சென்ற குருவானவர் அப்பமும் இரசமும் த்றோணோசில் ஆயத்தம் செய்து வைக்கின்ற திருச்சடங்கே ஆயத்தத் திருச்சடங்கு ஆகும். இந்த ஆயத்தத் திருச்சடங்கு மெல்கிசதேக்கின் முறை, ஆரோனின் முறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1.1. மெல்கிசதேக்கின் முறை : அப்பமும், இரசமும் த்றோணோசில் ஆயத்தம் செய்து வைக்கின்ற திருச்சடங்கே மெல்கிசதேக்கின் முறை. உன்னத கடவுளின் குருவாயிருந்த மெல்கிசதேக் அப்பமும் இரசமும் கொண்டு வந்து ஆபிரகாமை எதிர்கொண்டழைத்ததையே குறிக்கின்றது. (தொ.நூ. 14 : 18). மெல்கிசதேக் இயேசுவின் குருத்துவத்தின் முன்னடையாளம்.

1.2. ஆரோனின் முறை: ஆரோனின் குருத்துவ திருப்பணியையும் தூப் மன்றாட்டையும் நினைவில் கொண்டு திருப்பலியின் போது குருவானவர் திருவுடைகள் அணியவும் பலிப்பொருள்களின் மீது தூபம் காட்டவும் செய்கின்றார். ஆரோன் முதல் இயேசு வரையிலான வரலாற்று நிகழ்ச்சிகள் இங்கு நினைவுபடுத்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் உள்ள முதன்மை குருவான ஆரோன் இயேசுவின் முன்னொரு அடையாளமே.

www.malankaralibrary.com

*2.ஆரம்பத்திருச்சடங்கில் நினைவுகூர்வது என்ன?* ஆரம்பத்திருச்சடங்கு என்பது திருமுழுக்கு வேண்டுவோருக்கான திருச்சடங்கு ஆகும். *ஆரம்பத்திருச்சடங்கில்* இயேசுவின், பிறப்பு மற்றும் திருமுழுக்கு நிகழ்ச்சிகளைக் முழக்கமிட்டுக் கொண்டு குருவானவர் தூப அர்ப்பணம் நடத்தி பலிபீடத்தை வலம் வருகிறார். இடையர்களும், ஞானிகளும் பெத்லகேமில் வைத்து குழந்தை இயேசுவை ஆராதித்ததை உணர்த்துவதற்காகவே இவ்வாறு தூபக்கலசம் வீசப்படுகிறது. தொடர்ந்து 'இறைவா நீர் தூயவராகின்றீர்' என்ற செபத்தைச் சொல்லி இயேசுவின் இறைத்தன்மையையும், சிலுவை மரணத்தையும் புகழ்கிறோம்.

*3. சமாதானம் ஏன் வழங்கப்படுகின்றது?*

பலி செலுத்துவதற்கு முன் கடவுளோடும், சகோதரர்களோடும் நல்லுறவு கொண்டிருங்கள் என்ற முதன்மையான கட்டளைக்கேற்ப (மத். 5 : 23, 6 : 12) சமாதானம் வழங்கப்படுகிறது.

*4. அனாபொறா என்ற கிரேக்க வார்த்தையின் பொருள் யாது? இதை விசுவாசிகளின் மன்றாட்டு என அழைக்கக் காரணம் என்ன?* அனாபொறா என்ற கிரேக்க வார்த்தைக்கு 'பலி செலுத்துதல்' என்பது பொருள். திருப்பலியின் முக்கியமான பகுதியே இது. திருமுழுக்கு பெற்றுக் கொண்ட விசுவாசிகள் மட்டும் பங்குகொள்வதால் இது விசுவாசிகளின் திருச்சடங்கு என்றும் அழைக்கப்படுகிறது.

*5. தேவ நற்கருணை நிறுவுதலில் நினைவு கூரப்படுவது யாது?* திருப்பலியில் நற்கருணை நிறுவுதலின் போது பாஸ்கா நாளில் இயேசு அப்பத்தையும், இரசத்தையும் தமது உடலாகவும் இரத்தமாகவும் மாற்றி சீடர்களுக்கு அளித்ததை நினைவு கூர்கின்றோம். இயேசுவின் இறுதி இராவுணவை நினைவில் கொண்டு குருவானவர் அப்பத்தையும் இரசத்தையும் சிலுவை வடிவில் வாழ்த்தவும் புனிதப்படுத்தவும் செய்கின்றார்.

*6. அப்பம் பிட்குதல் திருச்சடங்கில் நாம் நினைவு கூருவது என்ன?* திரை இட்டபின் குருவானவர் திருவுடலைப் பிட்டு திருவுடலையும் திரு இரத்தத்தையும் ஒன்று சேர்க்கவும் செய்வதே அப்பம் பிட்குதல் திருச்சடங்கு ஆகும். இயேசுவின் பாடுகள், மரணம், ஆகியவை இங்கே நினைவு கூரப்படுகின்றன. கல்வாரி மலையில் இயேசுவின் உடல் பிட்கப்பட்டதையே அப்பம் பிட்குதல் குறிக்கின்றது. இயேசுவின் மரணம் தனிப்பட்ட முறையில் நினைவு கூரப்படுகிறது. திரை விலக்கி இயேசுவின் உயிர்ப்பை நினைவு கூர்கின்றோம்.

*7. திருப்பலியின் அமைப்பை விவரி.*

மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் வழிபாட்டு முறை திருப்பலியில் இரண்டு பகுதிகள் உள்ளன. முதற்பகுதி ஆயத்தத் திருச்சடங்கும், இரண்டாவது பகுதி பகிரங்கத் திருச்சடங்கும் ஆகும்.

ஆயத்தத் திருச்சடங்கை சுறியானியில் தூயோபோ என்று அழைக்கிறோம். இந்த ஆயத்தத் திருச்சடங்கு மெல்கிசதேக்கின் முறை, ஆரோனின் முறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பகிரங்கத் திருச்சடங்கு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் ஆரம்பத்திருச்சடங்கு பகுதி திருமுழுக்கு வேண்டுவோருக்கான திருச்சடங்கு எனப்படுகிறது. ஆரம்பத்திருச்சடங்கு இயேசுவின், பிறப்பு மற்றும் திருமுழுக்கு நிகழ்ச்சிகளைக் முழக்கமிட்டுக் கொண்டு ஆரம்பமாகிறது. இறைவார்த்தை வழிபாடு, பாவபரிகார மன்றாட்டுகள், தூபகலசம் ஆசீர்வதித்தல், போன்றவற்றைத் தொடர்ந்து விசுவாசப் பிரமாணம் சொல்லப்படுகிறது.

பகிரங்கத் திருச்சடங்கின் இரண்டாம் பகுதி அனாபொறா அல்லது நற்கருணை மன்றாட்டு ஆகும். திருமுழுக்கு பெற்றுக்கொண்ட விசுவாசிகள் மட்டும் பங்குகொள்வதால் இது விசுவாசிகளின் திருச்சடங்கு என்றும் அழைக்கப்படுகிறது. 1. சமாதான மன்றாட்டு, 2. வானதூதர்களின் புகழ்ச்சி, 3. நற்கருணை நிறுவுதல், 4. நினைவு கூறுதல், 5. தூய ஆவியாரை (றூஹாயை) அழைத்தல், 6. பரிந்துரை மன்றாட்டுக்கள், 7. அப்பம் பிட்குதல் திருச்சடங்கு, 8. இயேசு கற்றுதந்த ஜெபம், 9. திருவுடல் திருஇரத்தங்களின் கொண்டாட்டம், 10. தேவ நற்கருணை பெற்றுக் கொள்ளுதலும், நன்றியறிதலும், 11. இறுதி ஆசீர்வாதம் போன்றவை நற்கருணை மன்றாட்டு பகுதிக்குள் அடங்கும்.

குறு வினாக்கள்

1. *மலங்கரைக் கத்தோலிக்கத் திருச்சபையின் வழிபாட்டு முறை திருப்பலியில் எத்தனை பகுதிகள் உள்ளன அட்டவணைப்படுத்துக?*

www.malankaralibrary.com

| 1. ஆயத்தத் திருச்சடங்கு | |
|---|---|
| 1.1.மெல்கிசதேக்கின் முறை | 1.2. ஆரோனின் முறை |

| 2. பகிரங்கத் திருச்சடங்கு | |
|---|---|
| 2.1. ஆரம்பத்திருச்சடங்கு | 2.2. நற்கருணை மன்றாட்டு |
| *2.1.1. இறைவார்த்தை வழிபாடு*<br>*2.1.2. பாவபரிகார மன்றாட்டுகள்*<br>*2.1.3. தூபகலசம் ஆசீர்வதித்தல்* | *2.2.1 சமாதான மன்றாட்டு*<br>*2.2.2. வானதூதர்களின் புகழ்ச்சி*<br>*2.2.3. நற்கருணை நிறுவுதல்*<br>*2.2.4. நினைவு கூறுதல்*<br>*2.2.5. தூய ஆவியாரை அழைத்தல்*<br>*2.2.6. பரிந்துரை மன்றாட்டுக்கள்*<br>*2.2.7. அப்பம் பிட்குதல் திருச்சடங்கு*<br>*2.2.8. இயேசு கற்றுதந்த ஜெபம்*<br>*2.2.9. திருவுடல் திருஇரத்த கொண்டாட்டம்*<br>*2.2.10. தேவ நற்கருணை பெற்றுக் கொள்ளுதலும், நன்றியறிதலும்*<br>*2.2.11. இறுதி ஆசீர்வாதம்* |

2. *ஆயத்த திருச்சடங்கை சுறியானியில் எவ்வாறு அழைக்கிறோம்?* தூயோபோ
3. *பகிரங்கத் திருச்சடங்கின் இரண்டு பகுதிகள் யாவை?* 1.ஆரம்பத்திருச்சடங்கு 2. நற்கருணை மன்றாட்டு
4. *ஆரம்பத் திருச்சடங்கிற்கு மறு பெயர் என்ன?* திருமுழுக்கு வேண்டுவோருக்கான திருச்சடங்கு
5. *நற்கருணை மன்றாட்டிற்கு இன்னொரு பெயர்?* விசுவாசிகளின் திருச்சடங்கு
6. *விசுவாசிகளின் திருச்சடங்கிற்கு சுறியானி பெயர் என்ன?* அனாபொறா
7. *திருப்பலியில் நாம் நினைவு கூரும் மீட்புச் செயல்கள் யாவை?* அகிலத்தின் படைப்பு முதல் இயேசுவின் இரண்டாவது வருகை வரையிலான கடவுளின் அனைத்து மீட்புச் செயல்களையும் திருப்பலியில் நாம் நினைவு கூர்கின்றோம்.
8. *காலை செபத்தின் ஆரம்பத்தில் தூயகத்தில் மெழுகுவர்த்தி எரியச் செய்து திரைவிலக்குதல் எதைக் குறிக்கின்றது?* இறைவெளிப்பாட்டின் தொடக்கமான அகிலத்தின் படைப்பை
9. *காலைசெபம் முடிந்த பின்னர் திரை மூடுவது எதைக் குறிக்கின்றது?* மனிதப்படைப்பையும், மனிதனின் முதல் பாவத்தையும் குறிக்கின்றது. கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரிவை இது சுட்டிக்காட்டுகின்றது.
10. *ஆயத்த திருச்சடங்கின் போது பழைய ஏற்பாட்டிலிருந்து எத்தனை வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன?* மூன்று
11. *தூயகத்தினுள் சென்ற குருவானவர் அப்பமும் இரசமும் த்றோணோசில் ஆயத்தம் செய்து வைக்கின்ற திருச்சடங்கிற்கு என்ன பெயர்?* ஆயத்தத் திருச்சடங்கு
12. *திருப்பலியில் ஆயத்தத் திருச்சடங்கின் முறைகள் யாவை?* மெல்கிசதேக்கின் முறை, ஆரோனின் முறை
13. *மெல்கிசதேக்கின் முறை என்ன?* அப்பமும், இரசமும் த்றோணோசில் ஆயத்தம் செய்யும் திருச்சடங்கு
14. *மெல்கிசதேக்கின் முறை எதைக் குறிக்கின்றது?* உன்னத கடவுளின் குருவாயிருந்த மெல்கிசதேக் அப்பமும் இரசமும் கொண்டு வந்து ஆபிரகாமை எதிர்கொண்டழைத்ததையே குறிக்கின்றது. (தொ.நூ. 14: 18).

www.malankaralibrary.com

15. *இயேசுவின் குருத்துவத்திற்கு முன்னடையாளம் யார்* மெல்கிசதேக்

16. *பழைய ஏற்பாட்டில் உள்ள முதன்மைக் குருவான இயேசுவின் முன்னொரு அடையாளம் யார்?* ஆரோன்

17. *ஆரோன் திருப்பலியில் எவ்வாறு நினைவு கூரப்படுகிறார்?* ஆரோனின் குருத்துவ திருப்பணியையும் தூப மன்றாட்டையும் நினைவில் கொண்டு திருப்பலியின் போது குருவானவர் திருவுடைகள் அணியவும் பலிப்பொருள்களின் மீது தூபம் காட்டவும் செய்கின்றார். ஆரோன் முதல் இயேசு வரையிலான வரலாற்று நிகழ்ச்சிகள் இங்கு நினைவுபடுத்தப்படுகிறது.

18. *திருப்பலியில் பகிரங்கத் திருச்சடங்கின் போது குருவானவர் பலிபீடத்தை சுற்றி தூப அர்ப்பணம் நடத்துவது எதைக் குறிக்கிறது?* இயேசுவின், பிறப்பு மற்றும் திருமுழுக்கு நிகழ்ச்சிகளைக் முழக்கமிட்டுக் கொண்டு குருவானவர் தூப அர்ப்பணம் நடத்தி பலிபீடத்தை வலம் வருகிறார். இடையர்களும், ஞானிகளும் பெத்லகேமில் வைத்து குழந்தை இயேசுவை ஆராதித்ததை உணர்த்துவதற்காகவே இவ்வாறு தூபக்கலசம் வீசப்படுகிறது.

19. *திருப்பலியில் 'இறைவா நீர் தூயவராகின்றீர்' என்ற செபம் வழியாக நாம் புகழ்வது என்ன?* இயேசுவின் இறைத்தன்மையையும், சிலுவை மரணத்தையும் புகழ்கிறோம்.

20. *திருப்பலியில் இறைவார்த்தை வழிபாட்டின்போது நினைவு கூரப்படுவது என்ன?* இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வும், அவருடைய போதனைகளும்

21. *திருப்பலியின்போது புதிய ஏற்பாட்டிலிருந்து எத்தனை வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன?* மூன்று

22. *திருப்பலியில் பாவபரிகார மன்றாட்டுகளைப்பற்றி கூறுக?* தூப அர்ப்பணத்துக்குப் பின்னர் குருவானவர் பாவபரிகாரத்துக்காக மன்றாடுகிறார். திருப்பலியின் முக்கியப் பகுதிக்கு நுழைவதற்கு முன்னர் இறைவனிடமிருந்து கடன்களுக்கு பரிகாரமும், பாவங்களுக்கு மன்னிப்பும் பெறுவதற்காகவே இம்மன்றாட்டுகள் நடத்தப்படுகின்றன.

23. *திருப்பலியில் தூபகலசம் ஆசீர்வதிக்கும்போது தூய மூவொரு இறைவனை புகழ்வது எவ்வாறு?* தூய மூவொரு இறைவனை புகழ்ந்து கொண்டு தூபகலசம் ஆசீர்வதிக்கப்படுகிறது. திருச்சபையின் மன்றாட்டுக்கள் நறுமண தூபத்தைப் போன்று, தந்தை மகன் தூய ஆவியாகிய கடவுளுக்கு ஏற்புடையது என்பதை குறிப்பதற்காகவே தூபக்கலசம் மூவொரு கடவுளின் பெயரால் ஆசீர்வதிக்கப்படுகிறது.

24. *திருப்பலியில் விசுவாசப் பிரமாணம் அறிக்கையிடும்போது நிகழ்பவை என்ன?* திருச்சபையின் விசுவாசம் அதிகாரப்பூர்வமாக அறிக்கையிடுகின்ற நேரமே இது. இவ்வேளையில் குருவானவர் கைகழுவி சமாதானம் வேண்டி பலிபீடத்தின் முன் முழந்தாழ்படியிட்டு மன்றாடுகின்றார்.

25. *திருப்பலியில் குருவானவர் கைகழுவுவதன் பொருள் என்ன?* குருவானவர் கைகழுவி சமாதானம் வேண்டி பலிபீடத்தின் முன் முழந்தாழ்படியிட்டு மன்றாடுகின்றார். கை கழுவுதல் ஆன்மீக தயாரிப்பின் பகுதியாகும். இயேசு தம் இறுதி இராவுணவின் போது சீடர்களின் காலடிகளைக் கழுவினார் என்பதையும் இது குறிக்கின்றது.

26. *திருப்பலியில் சமாதான மன்றாட்டுக்குப் பின்னர் மென்துகில் உயர்த்தி கொண்டாடப்படுவதன் பொருள் என்ன?* விண்ணகம் திறக்கப்பட்டதும், விண்ணக மறைபொருள்கள் தேவ நற்கருணையின் வாயிலாக பூமியில் வெளிப்பட்டதும் மென்துகில் உயர்த்துவதின் வாயிலாக குறிப்பிடப்படுகிறது. தொடர்ந்து குருவானவர் மக்களை ஆசீர்வதித்து திறக்கப்பட்ட விண்ணகத்தில் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றார்.

27. *திருப்பலியில் வானதூதர்களின் புகழ்ச்சி பற்றி குறிப்பு வரைக?* விண்ணகம் திறக்கப்பட்டிருக்கின்ற இவ்வேளையில் விண்ணவர்களும் மண்ணவர்களும், வானதூதர்களும் மனிதர்களும் ஒன்று சேர்ந்து கடவுளைப் புகழ்கின்றனர். 'தமது மகிமையால் விண்ணும் மண்ணும்...' என்ற செபத்தை மக்கள் சொல்கின்றனர். ஏசாயா 6:3 ஐ அடிப்படையாகக் கொண்டதே இம் மன்றாட்டு.

28. *திருப்பலியில் நினைவு கூறுதல் பற்றி குறிப்பு வரைக?* இறுதி இராவுணவின் வேளையில் "இதை என் நினைவாக செய்யுங்கள்" என்று இயேசு அருளிச் செய்தார். இதற்கேற்ப இயேசுவின் இறப்பு, கல்லறை

www.malankaralibrary.com

அடக்கம், உயிர்தெழுதல், இரண்டாம் வருகை ஆகியவற்றை நாம் இங்கு நினைவு கூர்கின்றோம்.

29. *திருப்பலியில் தூய ஆவியாரை அழைத்து மன்றாடும் போது நிகழ்பவை என்ன?* தூய ஆவியே அனைத்தையும் முழுமையாக்குபவர். எனவே அப்பத்தையும் இரசத்தையும் இயேசுவின் திருவுடலாகவும், திருஇரத்தமாகவும் மாற்றி முழுமை ஆக்குவதற்காகவே தூய ஆவியாரை அழைத்து மன்றாடுகின்றோம்.

30. *திருப்பலியில் பரிந்துரை மன்றாட்டுக்கள் என்பதன் சுறியானி பெயர் என்ன?* 'துப்தேன்'

31. *திருப்பலியில் பரிந்துரை மன்றாட்டுக்கள் மொத்தம் எத்தனை?* பீடச்சிறுவர் சொல்கின்றதான ஆறு மன்றாட்டுகளும், குருவானவர் மென்குரலிலும், உரத்த குரலிலும் சொல்கின்ற பன்னிரண்டு மன்றாட்டுக்களுமாக *மொத்தம்* பதினெட்டு மன்றாட்டுக்கள் இந்த பரிந்துரை மன்றாட்டில் அடங்கியிருக்கின்றன.

32. *திருப்பலியில் பீடச்சிறுவர்களின் பரிந்துரை மன்றாட்டுக்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?* பீடச்சிறுவர்கள் சொல்கின்ற முதல் மூன்று மன்றாட்டுக்கள் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்காகவும், ஏனைய மூன்று மன்றாட்டுக்கள் இறந்து போனவர்களுக்காகவும் சொல்லப்படுகின்றன.

33. *திருப்பலியில் அப்பம் பிட்குதல் திருச்சடங்கிற்குப் பின்னர் திரை விலக்குதலின் பொருள் என்ன?* இயேசுவின் உயிர்ப்பு

34. *திருப்பலியில் இயேசு கற்பித்த 'பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே' நாம் எவ்வாறு மன்றாடுகிறோம்?* இயேசுவின் மரணம், உயிர்ப்பு இவற்றின் வழியாக கடவுளின் மக்களாக்கப்பட்ட நாம் ஆன்மத்திடமுடன் கடவுளை 'பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே' என்று அழைத்து மன்றாடும் நேரமே இது.

35. *திருப்பலியில் திருவுடல் திருஇரத்த கொண்டாட்டங்களின் பொருள் என்ன?* குருவானவர் திருப்பாத்திரங்களை கரங்களில் ஏந்தி திருவுடல் திரு இரத்தங்களை கொண்டாடுவதன் வாயிலாக மூவொரு இறைவனின் பிரசன்னத்தை நாம் நினைவு கூருகின்றோம். குருவானவர் திருவுடலையும் திரு இரத்தத்தையும் கைகளில் ஏந்திக் கொண்டாடும் போது தலைமைக்குருவான இயேசு தந்தையின் முன்னிலையில் தம்மைத்தாமே பலியாக ஒப்புக் கொடுத்ததை நாம் காண்கின்றோம். தொடர்ந்து தூய இறையன்னையையும், புனிதர்களையும் எல்லா இறந்துபோனவர்களையும் நினைவு கூர்ந்து அவர்களுடைய பரிந்துரையை வேண்டவும், மன்றாடவும் செய்கின்றோம். இவ்வேளையில் திரை இடப்படுகிறது. திரையிட்டபின் திருவுடல் திருஇரத்தத்தை ஏந்தி பவனிக்கு ஆயத்தமாகின்றனர். திரையிடுவது இயேசுவின் விண்ணேற்றத்தையும், திரைவிலக்கப்படுதல் இயேசுவின் இரண்டாம் வருகையையும் குறிக்கின்றது.

36. *திருப்பலியில் இயேசுவின் மாட்சி நிறைந்த இரண்டாம் வருகையைக் குறிப்பிடும் நிகழ்வுகளைக் குறிப்பிடுக?* திருவுடல் திருஇரத்த கொண்டாட்டங்களின் இறுதியில் திரைவிலக்கப்படுதல் இயேசுவின் இரண்டாம் வருகையையும் குறிக்கின்றது. குருவானவர் ஆடம்பரமாக திருவுடலையும் திரு இரத்தத்தையும் ஏந்தி மேற்குத் திசையில் வருவதும் இயேசுவின் மாட்சி நிறைந்த இரண்டாம் வருகையைக் குறிக்கின்றது.

37. *திருப்பலியில் தேவ நற்கருணை பெற்றுக் கொள்ளும் போது நாம் பெறும் அனுபவம் என்ன?* நாம் நற்கருணையை பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு முறையும் இயேசுவோடு இணைந்து அனுபவிக்க இருக்கின்ற நிலையான விருந்தின் முன் சுவையை அனுபவிக்கிறோம்.

38. *திருப்பலியில் நற்கருணை உட்கொண்ட பின்னர் நாம் ஏன் நன்றி கூறுகிறோம்?* திருவுடலையும், திரு இரத்தத்தையும் உட்கொள்ள அருள் செய்த இறைமகனுக்கும், தந்தைக்கடவுளுக்கும் இவ்வேளையில் நாம் நன்றி கூறுகின்றோம்.

39. *திருப்பலியில் இறுதி ஆசீர்வாதம் பற்றிக் குறிப்பிடுக?* தேவ நற்கருணை என்ற பயண உணவு வழங்கி கொண்டு தூயமூவொரு இறைவனின் அருளுக்கு குருவானவர் மக்களைச் சமர்ப்பிக்கின்றார். தூய மூவொரு இறைவனின் பெயரால் மக்களை ஆசீர்வதித்து அனுப்புகின்றார்.

40. *திருப்பலி எவ்வாறு நம் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெறுகிறது?* அருள் அடையாளங்களின் அருள்

www.malankaralibrary.com

அடையாளமான தேவ நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் மையமாகும். இயேசுவின் திருவுடலையும் திருஇரத்தத்தையும் உட்கொள்வதன் வழியாக நாம் தூயமூவொரு இறைவனுடன் அருளுறவு கொள்கின்றோம். அதனால் தகுந்த தயாரிப்போடும், பயபக்தியோடும் திருப்பலியில் பங்குபெறுவோம்.

41. *திருப்பலிக்கு முன் செய்ய வேண்டியதைப் பற்றி திருவிவிலியம் என்ன கூறுகிறது?* நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும் பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப்போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். (மத் 5:23, 24)

## பாடம் 14 திருப்பலிப் பாடல்கள்

பயிற்சி வினாக்கள் :

*1. "ஒளிநிறை இயேசுவே .." என்ற பாடலின் பொருள் யாது?*

*ஒளி நிறை இயேசுவே உம் ஒளியால் நாங்கள் காண்கின்றோம்.*

*அனைத்துலகும் நின் சுடரால் சுடர்ந்திடுதே சுடரொளியே*

*தந்தையின் கதிரே நீர் எம்மை*

*ஒளியால் ஒளிரச் செய்வீரே*

திருப்பலியின் ஆயத்தத்திருச்சடங்கின் வேளையில் இந்த பாடல் பாடப்படுகிறது. இந்தப் பாடல் கீழ் வருமாறு பொருள்படுகிறது. 'ஒளி நிறைந்த இயேசுவே உம் ஒளியால் நாங்கள் ஒளியைக் காண்கின்றோம். அனைத்தின் அடிப்படையான ஒளியும் நீயே தான். தந்தையின் கதிரான மெசியா அரசரே உம்முடைய ஒளியால் எங்களை ஒளிரச் செய்தருளும்!

*ஒளியின் சுடரில் வாழும் ஆண்டவரே, தூயவரே பொல்லாத்துன்பம் வீண் சிந்தனைகள் எம்மில் நின்றகற்றும் நன்மைகள் ஆற்றிடுமோர் பண்பை தருவீர் மனத்தூய்மை நல்கி*

ஒளியின் மேல் வாழும் ஆண்டவரே, தூயவரே, எல்லா துன்பங்களையும், தீய சிந்தனைகளையும் எங்களில் நின்று நீக்கியருளும். தூய்மையான மனத்தோடு நல்லச் செயல்கள் செய்யும் பண்பை எங்களுக்குத் தந்தருளும்.

*ஆபேலின் செம்மறியும், நோவாவின் எரிபலியும் ஆபிரகாமின் வேள்வியும் ஏற்றவராம் ஆண்டவரே நோன்பும், வேண்டுதலும் ஏற்று பரிவாய் பதிலருளும் நாதா*

ஆபேல் செம்மறி ஆட்டை உமக்காக பலி செலுத்தினார். நோவா பேழையிலிருந்து இறங்கிய பின்னர் உமக்கு பலி செலுத்தினார். ஆபிரகாம் உமக்காக பலி செலுத்தினார். (தொ.நூ. 4: 4, 8: 20, 9 : 13). இந்த பலிகளை ஏற்றுக்கொண்ட ஆண்டவரே, நாங்கள் திரு முன்னிலையில் செலுத்துகின்ற நோன்பும், வேண்டுதலும் ஏற்றுக் கொண்டு உம்முடைய அடியாரை காத்து வழிநடத்தும்.

*பாவம் அகல பாவிகளே வருவீர் வேண்டிடுவீர் தட்டிடுவோர்க்கு திறந்திடுவார் கடவுள் தம் வாசல் வேண்டிடுவோர் அடைவார் என்றும் தேடிடுவோர் காண்பார் திண்ணம்*

பாவிகளே 'பாவமன்னிப்பு அடைவதற்காக வந்து வேண்டிடுங்கள். தன்னுடைய வாசலில் தட்டுகின்ற அனைவருக்கும் ஆண்டவர் தன்னுடைய கருணையின் வாசலைத் திறந்து தருவார். கேட்போருக்கு கொடுக்கப்படும். தேடுவோர் கண்டடைவார்கள். (மத்தேயு. 7:7 - 9)

*ஆண்டவரே உம் உடலும் உதிரமதும் அருந்தியொராய் விசுவாசமுடன் இறந்தோர்க்கருளிடுவீர் நன்னினைவை*

www.malankaralibrary.com

*மாட்சியுடன் தோன்றும் நாளில் அவர்களை உம் வலம் சேர்ப்பீரே*

ஆண்டவரே உம்முடைய விலைமதிப்பற்ற உடலும், இரத்தமும் அருந்தி உமக்கு ஏற்புடையவர்களாக இறந்து போனவர்களுக்கு நல்ல நினைவைக் கொடுத்தருளும். உம்முடைய இரண்டாம் வருகையின் போது அவர்களை உமது வலப்பக் கத்தில் நிறுத்தியருளும். (யோவான். 6:35 - 58)

*2. "மண்ணுலகெல்லாம்..." என்ற பாடல் நமக்கு உணர்த்துவது என்ன?*

மண்ணுலகெல்லாம் இறைவன் தம் ஏவுதலாலே சீடர் சென்று மானிடரிடையில் பூவுலகின் எல்லைவரையும் நல்லிறை வார்த்தை ஏற்பவர்கள்- அடைந்திடுமோர் பேறிதுவென் - றோதினரே வானுலகின் மாட்சி

புதிய ஏற்பாட்டில் முதல் வாசகத்திற்கு முன் இப்பாடல் பாடப்படுகிறது. உலகமக்கள் அனைவரின் மத்தியிலும், கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட சீடர்கள் நற்செய்தி அறிவிக்கப் புறப்பட்டனர். அவர்கள் உலகின் எல்லைவரை நற்செய்தி பறைசாற்றினர். இறை வார்த்தையான எவன்கேலியோனை (நற்செய்தி) ஏற்றுக் கொள்பவர்களுக்கு விண்ணுலக மாட்சி கிடைக்குமென்று அவர்கள் பறைசாற்றினர். (மாற். 16 : 15 - 20, தி. தூ. ப. 2:1- 41)

*3."பவுலடியாரின் சொல்லமுதம்" என்று ஆரம்பிக்கும் பாடலின் பொருள் தருக?*

*பவுலடியாரின் சொல்லமுதம் கேட்டே- னிதுவாம் நாங்களுரைத்தது தன்னெதிராய் வேறொருவன் வந்துரைப்பானேல் வானகதூதன் தானெனினும் திருச்சபையின் - சாபம் ஏ-ற்பான் போதனை உலகில் மிகமிகவாய்! அனுதினமும் முளைத்தெழுந்தாலும் இறைவன் தூதினில் நிலைகொள்வோர் மேன்மையரென்றுமவர் சான்றோர்*

புனித பவுலடியாரின் திருமுகவாசகத்திற்கு முன் இப்பாடல் பாடப்படுகிறது. புனித பவுலடியார் இவ்வாறு அறிவுரை கூறுவதை நான் கேட்டேன். நாங்கள் உங்களோடு பறைசாற்றிய நற்செய்திக்கு எதிராக யாராவது கற்பித்தால் அவர் வானதூதராக இருந்தாலும் திருச்சபையில் சபிக்கப்பட் டவராயிருப்பர். இக்காலத்தில் வேறுபட்ட தவறான போதனைகள் பரவிவருகிறது. ஆனால் உண்மை விசுவாசத்தை வாழ்க்கை முழுவதும் கடைபிடிப்பவர்கள் பேறுபெற்றவர்கள்'. (கலாத்தியர் 1: 8)

*4. "அன்புடையோரே." என்ற பாடலில் நாம் கடவுளோடு வேண்டுவது யாது?*

*அன்புடையோரே உம் வாசல் தட்டிடுதே எங்கள் நாதம் தேவையினாலே கதறுகிறோம் கைவிட வேண்டாம் ஆண்டவரே தண்டனையில் நீர் தயவருளும் கடுஞ்சினமின்றிக் காத்தருளும் வாசல் திறந்து வேண்டுதலின் குரலைக் கேளும் ஆண்டவரே தலைவா உம்மை அழைக்கின்றோம் வலுவற்றோர் மேல் அருள்புரியும் நல்லவரே உம் கருணையினால் நல்கிடுவீர் எம் வேண்டுதலை ஆண்டவரே நீர் கனிவுடனே அடியாரின் மேல் இரங்கிடுவீர் அருளின் நிறைவே அடியாரின் தீமைகள் எல்லாம் பொறுத்தருளும்*

அப்பம் பிட்குதல் திருச்சடங்கின் வேளையில் இப்பாடல் பாடப்படுகிறது. 'குருவானவரோடு சேர்ந்து இறைமக்கள் தங்கள் பலவீனத்தை ஏற்று சொல்லி கடவுளின் இரக்கத்துக்காக மன்றாடுகிறார்கள். இந்த கொடைக்கு தகுதியுடையவராக்கியதால் கடவுளைப் புகழ்கின்றார்கள். இரக்கம் நிறைந்த ஆண்டவரே உம் அடியோர் உம் வாசலில் தட்டுகிறோம். தேவையினாலே கதறுகின்ற உம் அடியானைக் கைவிடா-தேயும். தயைகூர்ந்து நீர் எங்களைத் தண்டித்து உம் கோபத்தைப் போக்கி எங்களை வழிநடத்தியருளும். இந்த வேண்டுதலைக் கேட்டு உம்முடைய வாசலைத் திறந்து எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும். ஆண்டவரே உம்முடைய அருளை வேண்டி உம் அடியார்கள் உம்மை அழைக்கின்றோம். ஆண்டவரே உம் கருணையினால் எங்கள் வேண்டுதல்களுக்கு பதிலளித்தருளும். அருளின் நிறைவே உம் கருணையால் எங்கள் தீயசெயல்களை எல்லாம் பொறுத்தருளும்'.

*5. "எரிமய தூதர் .." என்ற பாடலின் பொருள் யாது?*

எரிமய தூதர் யாரைக் காணின் நடுங்கின்றா - ரோ

அவரைத் தானே அப்பரசங்களாய் நீ காண் கின்-றாய்.

யாரைத் தீத்துகிலணிந்தவர் நோக்கின் - எரி கின்றா - ரோ

www.malankaralibrary.com

அவரை மானிடர் உண்டு மகிழ்வை அடைகின்றார்கள்.

எரிசுடர் மகனின் மறையுண்மைகளாம் விண்ணோரி - டையே

இதைப் பார்த்தவராம் ஏ சாயாவும் சாற்றுகின்றா-ரே.

தெய்வீகமதாம் இயல்பினில் கலந்த மறைபொருள் தா -னே

ஆதாம் மரபினர்க்காயிதோ இவற்றைப் பகிர்ந்தளிக்கின்-றார்.

கெருபுகளின் ரதமதனைப் போல் நிதம் தூயக மென்-றும்

விண்ணகப் படைகள் இதன் புடைசூழ உள்ளன காணீ-ர்.

இறைமகனாரின் திருவுடலன்றோ பீடமிதன் - மேல்

கைகளிலாதாம் குலத்தினரேந்தி புகழிசைக்கின்றார்.

பட்டுடை அணிந்தவரின் பதிலாக வேண்டிடுவோர்க்காய்

நிகரறு மணிகளை குருவானவர்தாம் பகிர்ந்தளிக்கின்றார்.

விண்ணோர் நடுவில் அழுக்காறடையும் இயல்புண்டாயின்

மண்ணோர் மீதே விண்ணோர் அதனைக் கொள்வார் திண்ணம்

'எரிமய தூதர்கள் இறைபிரசன்னத்தில் பயந்து நடுங்குகிறார்கள். ஆனால் அந்த இறைவனை த்றோணோஸில் அப்பத்தினுடையவும், இரசத்தினுடையவும் வடிவில் நீ காண்கின்றாய். இடி மின்னல் போல் ஒளிமிக்க ஆடை அணிந்திருக்கின்ற தூதர்கள் கடவுளை கண்ட உடனேயே எரிகின்றார்கள். ஆனால் அந்த இறைவனை மானிடர் உண்டு மகிழ்ச்சி அடைகின்றார்கள். விண்ணோரிடையே எரிசுடராகிய இறைமகனின் மறையுண்மைகளைக் கண்ட ஏசாயா மக்களோடு இவ்வாறு பறை சாற்றுகிறார். கடவுளின் இயல்பினில் கலந்த மறைபொருளான மெசியாவை இங்கே த்றோணோசில் ஆதாம் மரபினர்க்காக பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இந்த தூயகம் வானதூதர்கள் தாங்கியிருக்கின்ற தேரைப் போன்று நிரந்தரமானதாகும். விண்ணகப் படைகள் இதனைச் சூழ்ந்து நிற்கின்றனர். இறைமகனின் திருவுடலை இங்கே பலி பீடத்தில் இறைமக்கள் தங்கள் கரங்களிலேந்தி கொண்டாடுகின்றார்கள். இங்கே குருவானவர் பட்டு ஆடை அணிந்தவரைப் போல் நின்றுகொண்டு தேவைப்படுவோருக்கு தேவ நற்கருணையை வழங்குகிறார். வானதூதர்களுக்கு பொறாமை ஏற்படலாமென்றால் குறுபே தூதர்களுக்கு மனிதர்கள் மேல் பொறாமை ஏற்படும்.

குறுவினாக்கள்

1. *இசை எவ்வாறு மனிதனை இறைவனோடு இணைக்கிறது?* இசை மனிதர்களின் மனதை மகிழ்ச்சி கொள்ளச்செய்கின்றது. மனிதர்களின் மனதை இறைச் சன்னிதியில் கொண்டு சேர்க்கவும், இறை அருளை மனிதனில் கொண்டு வரவும் இசையால் முடியும்.
2. *பாடுபவன் "இரண்டு தடவை ஜெபிக்கிறான்" என்றவர் யார்?* புனித அகுஸ்தினார்
3. *மலங்கரை கத்தோலிக்க வழிபாட்டு முறையில் இசையின் முக்கியத்துவம் என்ன?* மலங்கரை கத்தோலிக்க வழிபாட்டு முறைப்படி இசைக்கு அதிகமான முக்கியத்துவம் உண்டு. நமது ஆராதனை இசைமயமானது.
4. *அன்னை மரியே ஆண்டவரின் தாயே என்ற பாடலின் பொருள் என்ன?*

*அன்னை மரியே ஆண்டவரின் தாயே*

*நறுமண தூபமுடன் உன் நினைவைக்*

*கொண்டாடுகிறோம் தாயே*

*உந்தன் வேண்டுதலால் உலகம்*

*எங்கும் பேரமைதி திருச்சபை அதனில்*

www.malankaralibrary.com

*நிம்மதியும் நிலவுகவே எங்கள் தாய்மரியே*

'இறை அன்னையாகிய தூய மரியே, நறுமண தூபத்தோடு உம்முடைய நினைவை நாங்கள் கொண்டாடுகிறோம். தாயே உம்முடைய வேண்டுதலால் உலகம் முழுவதும் அமைதியும், திருச்சபையில் நிம்மதியும் நிலவ வேண்டும்'

5. *நாம் இறைமக்கள் ஆகிடவே என்ற பாடலின் பொருள் என்ன?*

*நாம் இறைமக்கள் ஆகிடவே*

*தங்கள் வாழ்நாளில் நம்மைப் பயில்வித்தோராம்*

*தந்தையரை நினைவில் கொள்வோம்,*

*அவர்களையும் நிதிமான்கள்*

*புனிதருடன் விண்ணில் -*

*இறைமகன் தேற்றிடுவார்*

நாம் இறைவனின் மக்களாகும்படி நம்மை பயிற்றுவித்த மூதாதையரை திருப்பலிகளிலும், ஆராதனைகளிலும் நாம் நினைவு கூர வேண்டும். நீதிமான்களோடும், புனிதர்களோடும் இறைமகன் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பார். ஆண்டவரே எங்கள்மேல் இரக்கமாயிருந்து எங்களைக் காப்பாற்றியருளும்.

6. *இறைவா அருள் பொழிவீரெம்மேல் என்ற பாடலின் பொருள் என்ன?*

*இறைவா அருள் பொழிவீரெம்மேல்*

*அருள் பொழிவீரே பதிலருளி*

*அருள் பொழிவீரே நீர் போற்றி*

*அருள் எம்மேல் உண்டாகுகவே*

ஆண்டவரே அளவில்லாத உமது அன்பால் எங்கள் மேல் இரக்கமாயிரும். எங்கள் வேண்டுதல்களுக்கு பதிலளித்து இரக்கம் காட்டியருளும். ஆண்டவரே இரக்கமாயிரும். உமது அருளை எங்கள் மேல் பொழிந்தருளும். ஆண்டவரே உமக்குப்புகழ்.

7. *புகழுன்-னதத்தின் இறைவனுக்கே என்ற பாடலின் பொருள் என்ன?*

*புகழுன்-னதத்தின் இறைவனுக்கே மாட்சிமை அன்னை மரி தமக்கே*

*மாண்முடி நிணச்சான்றினர்களுக்கே இறந்தோர்க்கருளும் ஆகுகவே*

உன்னதங்களில் இறைவனுக்குப் புகழும், அவரன்னைக்கு மகிமையும், இரத்த சாட்சிகளுக்கு புகழ்ச்சியின் மகுடங்களும், இறந்தோர் மேல் பரிவிரக்கமும் என்றென்றும் இருப்பதாக.

8. *இறைவா, மண்ணோர் போற்றிடுவர் என்ற பாடலின் பொருள் என்ன?*

*இறைவா, மண்ணோர் போற்றிடுவர்*

*நாவுகள் அனைத்தும் புகழ்பாடும்*

*கல்லறை உறைவோர் நம்பிக்கை நீர்*

*இறந்தோர்க்குயிர்ப்பும் நீர் தாமே*

ஆண்டவரே, மண்ணுலகம் உம்மைக் கும்பிட்டு வணங்குகின்றது. நாவுகளெல்லாம் உம் திருப்பெயரைப் போற்றுகின்றன. எனெனில், இறந்தோர்க்கு உயிரளிப்பவரும் கல்லறை அடக்கம் செய்யப்பட்டோரின் நம்பிக்கையும் நீர் தாமே, இறைவா உமக்குப் புகழ். (பிலி. 2: 10 - 11)

9. *பலியிதனில் ஆண்டவரே உம் என்ற பாடலின் பொருள் என்ன?*

www.malankaralibrary.com

*பலியிதனில் ஆண்டவரே உம்திருவுள்ளம் மகிழ்வெய்துகவே*

*இறந்தோர் நற்பேறடைவாரே விண்ணோர் முகமலர்வடைவாரே*

ஆண்டவரே இந்த திருப்பலியை உமக்கு ஏற்புடையதாக்கியருளும். இறந்த விசுவாசிகள் உம் இரக்கம் பெறுவார்களாக. விண்ணக தூதர்கள் இதில் மகிழ்வார்களாக.

10. *எனது கடன்களனைத்தும் நீர் என்ற பாடலின் பொருள் என்ன?*

*எனது கடன்களனைத்தும் நீர் உம் திருவருளால் நீக்கிடுவீர்*

*என் பாவங்களையும் போக்கி என்னைப் புனிதம் செய்தருள்வீர்.*

*ஆண்டவர் மெசியா மன்னவரே உந்தன் உடலுதிரம் கொண்டேன் எனவே நின்னடியார்களுடன் நின் தோழமை தந்தருளிறைவா*

*இறைவா உம்திரு வான்வீட்டில்என்றும் அழியா பேரரசில் இன்றும் என்றும் எந்நாளும் நின் சேவையில் நான் நிலைத்திருப்பேன்*

*ஆண்டவரென்றும் புகழ்பெறுவோர் தீர்ப்பினில் அவரே பரிவுடையோர் அவரின் கருணை உங்களிலும் பாவியேன் என்னிலுமாகுகவே*

*அருளின் ஆண்டவரே இறைவா என்மீதருளைப் பொழிந்திடுவீர் என்னைப் பாரும் நானுமிதோ என்மீதருளைப் பொழிந்திடுவீர்*

*பலியிதனை நிறைவேற்றியொராம் எங்கள் குருவானவர் மேலும் பீடச்சிறுவர்களிவர் மேலும் ஒரு போலருளைப் பொழிந்திடுவீர்*

குருவானவர் நற்கருணைப் பாத்திரங்களை தூய்மைப்படுத்தும் வேளையிலும், பலிபீடத்திலிருந்து விடை பெற்று செல்லும் வேளையிலும் இப்பாடல் பாடப்படுகிறது.

'உமது அருளால் என்னுடைய பாவங்களைப் போக்கி என்னைப் புனிதப்படுத்தியருளும். உம்முடைய மறையுண்மைகள் கொண்டாடப்படுவதனால் உம் அடியார்களோடு என்னையும் இணைத்திடுவீர். வான் வீட்டில் உமக்கு சேவை செய்ய எனக்கு அருள்தந்தருளும். தீர்ப்பின் நாளில் பாவியாகிய என்மேல் கருணையாயிரும். அருளின் ஆண்டவரே என்மேலும் அருளைப் பொழிந்திடுவீர்'. இப்பலி செலுத்தின குருவானவரையும், துணையாளர்களையும் உம் அருளால் நிரப்பிடுவீராக. தொடர்ந்து வரும் பகுதியில் இறந்தவர்களை நினைவு கூர்கின்றோம்.

11. *திருப்பலியில் பாடல்களை நாம் எவ்வாறு பாட வேண்டும்?* திருப்பலியில் பாடப்படும் பாடல்களின் பொருள் உணர்ந்து பக்திப்பற்றுதலோடு பாடும் போது அது நமக்கு மிகுந்த இறை அருளைப் பெற்றுத்தரும். திரு வழிபாட்டின் பாடல்களை பக்திப்பற்றுதலோடு நாம் பாடுவோம்.

12. “உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள், புகழ்ப்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் ஆகியவை இடம்பெறட்டும். உளமார இசைபாடி ஆண்டவரைப் போற்றுங்கள்” (எபேசியர் 5:19)

## பாடம் 15 வீடாசீர்வாதம்

பயிற்சி வினாக்கள்

1. *அருள் அடையாளம் என்றால் என்ன?* 'காதேஷ்' என்ற சுறியானி வார்த்தையிலிருந்தே 'அருள் அடையாளம்' என்ற வார்த்தை உருவானது. இவ்வார்த்தையின் பொருள் புனிதப்படுத்துதல் என்பதாகும். கண்ணுக்குப் புலப்படாத இறை அருளை குறிக்கின்ற காணக்கூடிய அடையாளங்களே அருள் அடையாளங்கள். திருச்சபையில் ஏழு அருளடையாளங்கள் உள்ளன.

2. *வீடாசீர்வாதத்தின் முக்கியத்துவம் என்ன? இதற்கு தேவையான முன்தயாரிப்புகள் யாவை?* வீடாசீர்வாதம் வாயிலாக குருவானவர் ஒரு இல்லத்தைப் புனிதப்படுத்தவும், அந்த இல்லத்தில் இறையருளும், சமாதானமும் என்றென்றும் நிலைத்திருக்கவும் மன்றாடுகிறார்.

வீடாசீர்வாத வேளையில் வீடும், சுற்றுப்புறமும் தூய்மையாக இருக்க வேண்டும். வீடு ஆசீர்வதிப்பதற்காக மேசையின் மேல் சிலுவையும், இரு பக்கங்களில் எரிகின்ற மெழுகுவர்த்தியும், சிலுவையின் முன்னால் பாத்திரத்தில் ஆசீர்வதிக்க வேண்டிய தண்ணீரும், தண்ணீர் தெளிக்கவேண்டிய உபகரணமும் தயாராக வைக்க வேண்டும். குருவானவர் திருவுடை அணிந்து (மேலாடையும், ஹைமீனியாவும்) ஆரம்ப ஜெபத்துடன் வீடு அர்ச்சித்தல் திருச்சடங்கை தொடங்குவார்.

*3. வீடாசீர்வாதத்தின் போது வாசிக்கும் நற்செய்திப் பகுதி யாது ?* புனித லூக்கா எழுதிய நற்செய்தி 19-ம் அதிகாரம் 1 முதல் 10 வரையிலான இறைவார்த்தைகள் பொதுவாக வீடு ஆசீர்வதித்தலின் வேளையில் வாசிக்கப்படுகின்றது. இயேசு இவ்வுலக வாழ்நாளில் சந்தித்த வீடுகளில் ஒன்று சக்கேயுவின் வீடு. இயேசுவின் முன்னிலையில் சக்கேயுவுக்கு உண்மையான மனமாற்றம் ஏற்பட்டது. அதன் வாயிலாக சக்கேயுவின் வீட்டில் மீட்பு உண்டாயிற்று. இயேசு நம்முடைய இல்லத்தில் வந்து வாழும் போது நம்முடைய இல்லத்திலும் அந்த மீட்பு உண்டாகும் என்று இந்த நற்செய்தி நம்மை நினைவூட்டுகின்றது.

*4. பழைய ஏற்பாட்டிலுள்ள எந்த மரபை வீடாசீர்வாதத்தில் தொடர்கிறோம்?* பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் இல்லங்களை ஆண்டவர் பாதுகாப்பதைப் பார்க்கிறோம். பாஸ்காவின் வேளையில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசற்படியில் பூசியதால் இஸ்ரயேல் குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டது (விய 12 : 23 - 26) அதைப்போன்று, வீடு அர்ச்சித்தலின் வேளையில் இந்த ஆசீர்வாதமும், பாதுகாப்பும் கடவுள் இன்றும் வாக்களிக்கின்றார். குருவானவர் மூவொரு கடவுளின் பெயரால் தண்ணீரை ஆசீர்வதித்து வாசற்படியிலும், மக்கள் மீதும் தெளிக்கும் போது தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பும், இறையருளும் வழங்கப்படுகின்றது.

குறுவினாக்கள்

1. *'அருள் அடையாளம் என்ற வார்த்தை எந்த சுறியானி வார்த்தையிலிருந்து உருவானது?* "காதேஷ்'
2. *"காதேஷ்' என்ற வார்த்தையின் பொருள் என்ன?* புனிதப்படுத்துதல்
3. கண்ணுக்குப் <u>புலப்படாத</u> இறை அருளை குறிக்கின்ற <u>காணக்கூடிய</u> அடையாளங்களே <u>அருள் அடையாளங்கள்.</u>
4. *திருச்சபையில் எத்தனை அருளடையாளங்கள் உள்ளன?* ஏழு
5. *திருச்சபையில் உள்ள அர்ச்சிப்புத் திருச்சடங்குகளுக்கு எடுத்துக்காட்டுகள் யாவை?* தேவாலயம் அர்ச்சித்தல், வீடு அர்ச்சித்தல்
6. *தேவாலயம் அர்ச்சித்தலின் வாயிலாக என்ன செய்யப்படுகிறது?* தேவாலயம் அர்ச்சித்தலின் வாயிலாக அந்த ஆலயம் இறை ஆராதனைக்காக அர்ப்பணிக்கப்பட்டு, புனிதப்படுத்தப்படுகின்றது.
7. *வீடாசீர்வாதம் வாயிலாக குருவானவர் செய்வது என்ன?* வீடாசீர்வாதம் வாயிலாக குருவானவர் ஒரு இல்லத்தைப் புனிதப்படுத்தவும், அந்த இல்லத்தில் இறையருளும், சமாதானமும் என்றென்றும் நிலைத்திருக்கவும் மன்றாடுகிறார்.
8. *வீடாசீர்வாத திருச்சடங்கின் போது குருவானவர் அணியும் திருவுடைகள் யாவை?* மேலாடை, ஹைமீனியா
9. *வீடாசீர்வாத திருச்சடங்கின் தொடக்க செபத்தில் குருவானவர் மன்றாடுவது என்ன?* தொடக்க செபத்தில் ஆண்டவரின் அமைதியும், சமாதானமும் இந்த வீட்டில் தங்கி வாழ வேண்டுமென்றும் எல்லா நன்மைகளாலும் ஐசுவரியங்களாலும் இவ்வீட்டையும் வீட்டில் வசிப்போரையும் நிறைக்க வேண்டுமென்றும் குருவானவர் மன்றாடுகின்றார். அவர்கள் தங்கள் வாழ்நாளெல்லாம் மறைவானதும், வெளிப்படையானதுமான எல்லா செயல்களிலும் ஆண்டவரை மகிழ்விப்பவராகவும் இறந்து போனவர்களுக்கு நல்நினைவும் ஆறுதலும் வழங்க வேண்டுமென்றும் மன்றாடுகின்றார்.
10. *வீடாசீர்வாத திருச்சடங்கில் பாடப்படும் குக்கிலியோனின் பொருள் என்ன?*

    ஆரம்பத் திருச்சடங்கைத் தொடர்ந்து குக்கிலியோன் சொல்லப்படுகிறது. -

    என்னான்மாவினை உம்மிலுயர்த்துகிறேன் நாதா ஹா - ஹா நீரென் சரணம் வெட்கிப் போகேன் நான்

www.malankaralibrary.com

மாற்றா னென்னை நகைக்கவிடாதீர் ஹா - உ - ஹா உமை நம்புநர் யாரும் தலைதாழ்த்த விடாதீர்

தீயோர் வீணில் வெட்குமுறுவார்கள் ஹா - உ - ஹா நாதாவும் பாதைகளென்னைக் காட்டிடுவீர்

இறைவா - நின் நெறி அறிவியுமே ஹா - உ - ஹா அந்நெறி நடத்தி என்னை கற்பியுமே.

நம்மை வழிநடத்துகின்ற கடவுளை கூவி அழைத்து மன்றாடுகின்ற மன்றாட்டே இந்த திருப்பாடல். "ஆண்டவரே, உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்துகின்றேன். என் கடவுளே உம்மில் நம்பிக்கைக் கொள்கிறேன். நான் வெட்கமுறவிடாதேயும்... ஆண்டவரே உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்; உம் வழிகளை எனக்கு கற்பிக்கருளும்". (திரு. பா. 25 : 1 - 5) என்று இந்த மன்றாட்டில் வேண்டுகிறோம்.

11. *மலங்கரை வழிபாட்டு முறையின் ஒரு சிறப்பு அம்சமே எனப்படுவது யாது?* எக்போ மன்றாட்டு.

12. *வீடாசீர்வாத திருச்சடங்கின் எக்போ மன்றாட்டின் பொருள் என்ன?*

மானிடரன்பே அலைகடல் நடுவே

மீட்டருளினையே யோனாவை !

பிழைகடல் நின்றடியே னெனையும்

அருளால் கோரியெடுத்தருளும்.

மீட்பிற்கான மன்றாட்டே இது. 'மக்களை அன்பு செய்த ஆண்டவரே, நடுக்கடலின் ஆழத்திலிருந்து யோனா இறைவாக்கினரை மீட்டது போன்று, (யோனா 2 : 10) என்னுடைய எண்ணமற்ற பாவக்கடலிலிருந்து உம்முடைய அருளால் என்னையும் தூக்கியெடுத்தருளும் என்று மன்றாடுகின்றோம்.

13. *வீடாசீர்வாத திருச்சடங்கில் உள்ள புறுமியோன், செதறா மன்றாட்டின் பொருள் என்ன?*

குருவின் பரிந்துரையால், இல்லத்தை ஆசீர்வதிக்க வேண்டும் என்றும், அங்கு கூடியிருக்கின்ற அனைவரையும் மிகுதியான ஆசீரால் நிறைக்க வேண்டும் என்றும் மன்றாடுகின்றோம். சமூகத்தின் அடிப்படையான ஒன்றே குடும்பம். பல குடும்பங்கள் சேர்ந்து இறைசமூகம் உருவாகும். திருச்சபை வாயிலாக இறை அருள் திருச்சபை மக்களில் வருவதைப் போன்று, குடும்பத்தின் வாயிலாக இறை அருள் குடும்பத்தினர் மேல் வருவதற்காகவும், தூய ஆவியின் அருளுக்கும், கொடைகளுக்கும் இவ்வேளையில் மன்றாடுகின்றோம். அதன்பலனாக அக்குடும்பத்தில் திருச்சபையின் புனிதமும், தூய்மையும் நிலைநிற்கவும் செய்கின்றது.

14. *வீடாசீர்வாத திருச்சடங்கில் உள்ள புறுமியோன், செதறா மன்றாட்டிற்குப் பின்னர் பாடப்படும் பாடல் எது?* "அன்புடையோரே உம் வாசல் .."

15. *வீடாசீர்வாத திருச்சடங்கில் பாடப்படும் மார் யாக்கோபின் மன்றாட்டின் பொருள் என்ன?*

நற்செய்தி வாசித்தலைத் தொடர்ந்து மார் யாக்கோபின் மன்றாட்டு பாடப்படுகிறது. கீழைத் திருச்சபையின் தந்தையாகிய மார் யாக்கோபு இப்பாடலை எழுதினார்.

உடையோர் தலைவா கனிவின் வாசல் திறவாய் எங்களுக்காய் வேண்டுதல் யாவும் கேட்டடியார் மேல் அருள் செய்தருளிடுவாய்

தா-ழிடு நீநின் னறையை அதனுள் வேண்டின் கேட்போரேமே-லோர் மாண்பை எய்தியதுலகின் சந்தடியதி - லாமோ

மோசே கடலை ரண்டாய்ப் பிரித்தார் தன் வேண்டுதலாலே மாந்தர்களதிலே நடந்திட பார்வோன் மூழ்கிப் போனானே

தாவீதவரின் வேண்டுதலாலே இறைவன் நெஞ்சுருகி பாவம் போக்கி இறைவாக்குவரம் மீண்டும் தந்தாரே

தீயின் நடுவே அன்னிய முதலோர் மன்றாடியகாலை ஆண்டவரவர்கள் வேண்டுதல் கேட்டு விடுதலையீந்தா-ரே-

சாவும் நீதியின்னையும் நரகும் இவையாகிய மூன்றும் நாதா என்னில் நாளும் கிலிதரு மூ நிஜமாமன்றோ

www.malankaralibrary.com

நாம் எவ்வாறு செபிக்க வேண்டும் என்று இந்த மன்றாட்டு நமக்குக் கற்பிக்கின்றது. மென்குரல் மன்றாட்டு வாயிலாக நீதிமான்கள் விண்ணகத்திற்கு சென்றார்கள் என்றும், மோசேயின் மன்றாட்டால் கடவுள், கடலை இரண்டாகப் பிரித்து இஸ்ரயேல் மக்களை மீட்டுக்கொண்டார் என்றும் இங்கு நினைவுகூரப்படுகிறது. தாவீதின் மனவருத்தத்தை கடவுள் ஏற்றுக்கொண்டார் என்றும். அனனியா முதலானவர்களின் மன்றாட்டால் தீச்சூளையிலிருந்து கடவுள் அவர்களை பாதுகாத்தார். இத்தகைய பழைய ஏற்பாட்டுப் பகுதிகளை இந்த மன்றாட்டில் நினைவுகூரப்படுகிறது. .

16. *வீடாசீர்வாத திருச்சடங்கில் ஆசீர்வதித்த தண்ணீரை பயன்படுத்தி வாசல்களில் சிலுவை அடையாளம் வரைந்து ஒவ்வொரு இல்லமும் எவ்வாறு ஆசீர்வதிக்கப்படுகிறது?* தூய மூவொரு இறைவனின் பெயரால்

17. *வீடாசீர்வாத திருச்சடங்கிற்கு பின்னர் பாடப்படும் குக்கிலியோன்கள் யாவை?* இறை அன்னை, மற்றும் அனைத்து புனிதர்களின் குக்கிலியோன்கள்

18. *வீடாசீர்வாத திருச்சடங்கில் பாடப்படும் மார் எஃப்ரேமின் மன்றாட்டின் பொருள் என்ன?* குக்கிலியோனைத் தொடர்ந்து கீழைத்திருச்சபைத் தந்தையான மார் எஃப்ரேம் எழுதிய பாடல் பாடப்படுகிறது.

"ஆண்டவரே - இரக்கம் - வையும்

அன்னை தூயோர் வேண்டுதலால்

அன்புடனே இல்லம் இதையும் -

இங்-குறைவோ-ரையும் வாழ்த்திடுமே"

19. *வீடாசீர்வாத திருச்சடங்கில் <u>ஹூத்தோமோ</u> (இறுதி செபம்) பற்றி கூறுக?* ஆண்டவர் வழங்கிய எல்லா அருள் வரங்களுக்கும் நன்றி கூரப்படுகிறது. திருச்சடங்கில் பங்குகொண்ட அனைவரையும் குருவானவர் மூவொரு இறைவனின் பெயரில் ஆசீர்வதிப்பதோடு வீடாசீர்வாதம் நிறைவு பெறுகிறது.

20. *வீடு அர்ச்சித்தலின் வாயிலாக எவ்வாறு அது கடவுளின் ஆலயமாக மாறுகின்றது?* வீடு அர்ச்சித்தலின் வாயிலாக வீடு முழுவதும் தூய மூவொரு இறைவனின் பெயரால் புனிதப்படுத்தப்படுகின்றது. ஆனால் அதை விட மேலாக வீட்டில் உள்ள அங்கத்தினர்களின் புனிதமடைதலே இங்கு நடைபெறுகிறது. வீடு அர்ச்சித்தலின் மன்றாட்டுகளின் வாயிலாக குடும்பத்தை சமர்ப்பித்து இயேசுவிலிருந்து பாதுகாவலும், அந்த குடும்பத்தின் முழுப்பொறுப்பையும் கடவுளின் கைகளில் ஒப்படைத்தலும் நடைபெறுகிறது. இவ்வாறு வீடு புனிதமடையவும், அங்கு வாழ்கின்றவர்கள் ஆசீர்வதிக்கப்படவும், அந்த வீடு கடவுளின் ஆலயமாக மாறவும் செய்கின்றது.

21. "இன்று இந்த வீட்டிற்கு <u>மீட்பு</u> உண்டாயிற்று" (லூக்கா 19 : 9)

## பாடம் 16 அடக்கத் திருச்சடங்கு

பயிற்சி வினாக்கள் :

1. *இறந்தவர்களை அடக்கம் செய்ததாக பழைய ஏற்பாடு கூறும் இரண்டு நிகழ்ச்சிகளைக் கூறுக?* பழைய ஏற்பாட்டின் காலத்திலும் இறந்தவர்களை அடக்கம் செய்திருந்ததாக திருவிவிலியத்தில் நாம் காண்கின்றோம். நமது முற்பிதாவான ஆபிரகாமும், சாராளும் ஒரே குகையில் அடக்கம் செய்யப்பட்டதாக தொடக்க நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. முற்பிதாவான யோசேப்பின் எலும்புகளுக்கு இஸ்ரேல் மக்கள் மதிப்பு அளித்து தங்களுடன் எகிப்திலிருந்து கானான் நாட்டுக்கு கொண்டு போனார்கள். (2 அரசர்கள் 23 : 17 - 18). தாவீது அரசர் இறந்தபோது அவருடைய நகரிலேயே அவரது உடலை அடக்கம் செய்தார்கள். (1அரசர்கள் 2 : 10).

2. *தலை மேற்குத் திசையில் வைத்து உடலை அடக்கம் செய்வது ஏன்?* நீதியின் சூரியனான இயேசுவைக் காணும்படியாக இறந்தவரின் தலை மேற்குத் திசையில் வரும்படியாக கிழக்கு - மேற்காக வைக்கப்படுகிறது. எரியச் செய்த மெழுகுவர்த்திகளும், புனித சிலுவையும் உடலின் மேற்குத் திசையில் வைத்தே செபங்கள் நடத்தப்படுகின்றன.

3. *மனித வாழ்வு மரணத்துடன் முடிவுறாது என்பதன் பொருள் என்ன?* இவ்வுலக வாழ்க்கை

www.malankaralibrary.com

தற்காலிகமானதென்றும், இறப்பு இங்கிருந்து நம்மை வேறுபடுத்துகிறது என்றும் மன்றாட்டுகளில் நாம் நினைவுகூர்கின்றோம். இங்கிருந்து புறப்படுகின்ற ஆன்மாவை புத்துயிரின் நாளில் தண்டனைத் தீர்ப்பிலிருந்து விடுவித்தருள வேண்டுமென்று விசுவாசிகள் மன்றாடுகிறார்கள். ஆதாமிலிருந்து ஆரம்பமான மரணத்தின் ஆதிக்கத்தை இயேசு தன்னுடைய சிலுவை மரணத்தின் வாயிலாகத் அழித்தார். இயேசு தன்னுடைய இரண்டாம் வருகையின் போது இறந்துபோனவர்களுக்கு புத்துயிர் அளிப்பார் என்ற மாபெரும் விசுவாசம் இந்த மன்றாட்டுகளில் அடங்கியிருக்கிறது. காண முடியாத இறையருளை அருள் அடையாளங்கள் வழியாகப்பெற்றுக்கொண்ட விசுவாசிகளான இறந்துபோனவர்களுக்கு கருணை காட்ட வேண்டுமென்று மக்கள் அனைவரும் மன்றாடுகிறார்கள். மனித வாழ்க்கை இறப்போடு முடிவுறாது என்றும், ஒரு புதிய வாழ்வு உண்டு என்ற ஒரு எதிர்நோக்கு அடக்கச்சடங்குகளின் வழியாக எடுத்துரைக்கப்படுகிறது.

*4.திருப்பலியில் இறந்தவர்களை நினைவுகூறும் குக்கிலியோன் யாது? அதன் பொருளை விவரி?*

*மக்கள்மேல் தந்தை இரங்குவதைப் போல் ஹா - தமதன்பர்களில் இறைவன் இரங்குகிறார்*

*புல்நிகரானது மனிதரின் வாழ்நாட்கள் ஹா - வயல்வெளி மலர்நிகராய் மலர்ந்திடுவார்- பாறெக்மோர்*

தந்தை மக்களிடம் இரக்கம் காட்டுவதைப்போல கடவுள் தன் அன்பர்களோடு இரக்கம் காட்டுகிறார். மனிதனின் வாழ்நாட்கள் வயல் வெளி புற்களைப் போன்றது. வயல்வெளி மலர்கள் போன்று மலர்ந்து அவர்கள் மடிகின்றார்கள். (தி. பா. 103 : 13 - 16)

*சரணத்தாலே உம்மருளில் மரணமடைந்தோ ரடியா-ரை நின்வாழ்வின் குரலெழுப்பிடுக கல்லறை நின்று வானிடமாய் ஸ்தெளமென்காலொஸ் - குறியேலாயிசோன்*

இந்த எக்போயின் பொருள் இதுவே, 'ஆண்டவரே, உம்மீதுள்ள எதிர்நோக்கில் இறந்துபோன உமது அடியாரை உயிருள்ள உமது குரலால் அழைத்து கல்லறையில் இருந்து உயிர்த்தெழச் செய்து விண்ணரசில் சேர்ப்பீராக'

*வாழ்வீகின்றோர் அரசர் வானில் நின்று எழுந்தருளி இறந்தோர்க்கெல்லாம் மீண்டும் வாழ்வீகின்றார் தத்தம் உயிரைப் பெற்றவராய் கல்லறைவிட்டு எழுந்தவர்கள் வாழ்வருள்வோராம் உம்மைப் புகழ்ந்து போற்றிடுவர் - பாறெக்மோர் . சுபஹோ .......*

*எந்தன் உடலை உண்டு என் இரத்தத்தைப் பருகிடுவோர் கீழுலகில் போய் அழியவிடே-னே நான் அவர்கள் என்றும் வாழ வாழ்வைத் தந்து மடிந்தேன் நான் என்றருள்செய்த தம்மருளென்றும் போற்றி ! மொறியோ ....*

'வாழ்வின் ஊற்றான அரசர் வானிலிருந்து எழுந்தருளி வந்து இறந்தவர்களுக்கு மீண்டும் வாழ்வைக் கொடுக்கின்றார்' என்று இப்பாடல் பொருள்படுகிறது.

'தனது உடலை உண்டு இரத்தத்தை பருகவும் செய்கின்றோரை ஆண்டவர் கீழுலகில் போய் அழிய விடமாட்டார். அவர்கள் என்றும் வாழ்வதற்காகவே நான் பூமியில் வந்து எனது உயிரை ஈந்தேன் என்றருளிய ஆண்டவருக்கு மகிமை' (யோவான் 6:51)

*சிலுவையின் மீது ஆண்டவரே . கள்வன் பெற்ற உமது வரம் மூவோரிறைவனைப் புகழ்ந்தோராம் இறந்தோரும் பெறுதல் வேண்டும்*

'ஆண்டவரே, நீர் சிலுவையில் தொங்கிக் கொண்டு வலப்பக்க கள்வனுக்கு கொடுத்த வாக்குறுதியை, மூவோரிறைவனை வணங்கி வாழ்ந்து இறந்துபோன அனைவருக்கும் கொடுக்க வேண்டும்' என்று இப்பாடல் வழியாக மன்றாடுகின்றோம்.

குறு வினாக்கள்

1. *இயேசு இறந்து அடக்கம் செய்யப்பட்டதைக் கூறுக?* உலக மீட்பரான இயேசு கல்வாரி மலையில் சிலுவையில் தனது உயிரைத் துறந்தார். இயேசுவின் சீடர்களுள் ஒருவரான அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பும், யூதத் தலைவர்களுள் ஒருவரான நிக்கதேம் என்பவரும் சேர்ந்து உரோமன் ஆளுநரான பிலாத்துவின் அனுமதியுடன் இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து இறக்கி யூதர்களின் முறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணிகளால் சுற்றிக்கட்டினார்கள். பின்னர் பாறையில் குடைந்திருந்த ஒரு புதிய கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்தார்கள். (யோவா 19 : 38 - 42) இறைமகனான இயேசு ஒரு சாதாரண மனிதனைப்போன்று இறந்து அடக்கம் செய்யப்பட்டார். ஆனால் அவர் மூன்றாம் நாள்

உயிர்த்தெழவும், சாவின்மேல் வெற்றி கொள்ளவும் செய்தார்.

2. *முற்பிதாவான ஆபிரகாமுடன் ஒரே குகையில் அடக்கம் செய்யப்பட்டவர் யார்?* சாரா
3. *இலாசரை குகையில் அடக்கம் செய்த நிகழ்வை திருவிவிலியத்தில் எங்கே காண்கிறோம்?* யோவான் 11ஆம் அதிகாரத்தில்
4. *இறப்பு பற்றிய பொதுக் கருத்து என்ன?* இறப்பு படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானதாகும். ஆனால் இறப்பு அனைத்திற்கும் முடிவு அல்ல. இறப்பிற்குப் பின்னும் வாழ்வு உண்டு என்னும் சிந்தனை மனித இனத்திற்கு பழக்கமான ஒன்றாகும்.
5. *'இயேசுகிறிஸ்து இறந்து உயிர்த்தெழுந்தார்' என்ற நம்பிக்கை எவ்வாறு நமக்கு உயிர்ப்பின் நம்பிக்கை தருகின்றது?* 'இயேசுகிறிஸ்து இறந்து உயிர்த்தெழுந்தார்' என்பதே நம்முடைய விசுவாசத்தின் அடித்தளம். புனித பேதுரு இவ்வாறு கூறுகிறார் : "கடவுள் இறந்த அவரை உயிரோடு எழுப்பினார்" (திருத்தூதர் பணிகள் 3 : 15). இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டதனால் கிறிஸ்துவில் இறந்தவரும் உயிர்ப்பிக்கப்படுவார் என்று புனித பவுலடியார் நமக்குச் சொல்லுகிறார். (1கொரிந்தியர் 15: 12 - 34).
6. *அடக்கத் திருச்சடங்குகளின் குறிக்கோள் என்ன?* அடக்கத் திருச்சடங்குகள் இறந்த மனிதரோடுள்ள ஆதரவும், மதிப்பும் வெளிக்காட்டுவதோடு உயிர்த்தெழுதலின் எதிர்பார்ப்பையும் தருகிறது.
7. *இறந்தவர்களை மிகுந்த பக்தியோடு அடக்கம் செய்கின்ற கிறிஸ்தவ மரபின் பொருள் என்ன?* இறப்பிற்குப் பின்னர் கடவுளை நேருக்குநேர் சந்தித்தலே விண்ணக பேறு என்பதன் பொருள். இறப்பின் வாயிலாக இவ்வுலக வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைக்கும் போது கிறிஸ்துவிலுள்ள புதிய வாழ்வு ஆரம்பமாகின்றது. அதனால் தான் இறந்தவர்களை மிகுந்த பக்தியோடு அடக்கம் செய்கின்ற ஒரு மரபு தொன்றுதொட்டே கிறிஸ்தவ திருச்சபையில் இருந்து வருகிறது.
8. மலங்கரைத் திருச்சபையின் அடக்கச்சடங்கு முறை பொருள் செறிந்ததும், இறையியல் சிந்தனைகள் நிறைந்ததும் ஆகும்.
9. *மலங்கரை கத்தோலிக்க அடக்கச்சடங்கு முறைகள் யாவை?* ஆடவர் இறுதிச்சடங்கு முறை, மகளிர் இறுதிச்சடங்கு முறை, குழந்தைகள் இறுதிச்சடங்கு முறை
10. *மிகவும் எளிமையான இறுதிச்சடங்குமுறை யாது?* குழந்தைகள் இறுதிச்சடங்கு முறை
11. *மலங்கரை கத்தோலிக்க இறுதிச்சடங்குமுறையின் திருச்சடங்குகள் எத்தனை?* இறந்துபோன விசுவாசிகளின் உடலை அடக்கம் செய்வதற்கு நான்கு திருச்சடங்குகள் உள்ளன. முதல் மூன்று திருச்சடங்குகள் வீட்டில் வைத்தும், இறுதிச்சடங்கு தேவாலயத்தில் வைத்தும் நடைபெறும்.
12. *எரியும் மெழுகுவர்த்திகளும், திருச்சிலுவையும் உடலின் எந்த திசையில் வைக்கப்படுகின்றன?* மேற்கு
13. *தேவாலயத்தில் திருச்சடங்குகளுக்கு இடையில் வரும் முக்கிய நிகழ்வுகள் என்ன?* திருவிவிலியத்திலிருந்து வாசகங்கள்
14. *உடலை அடக்கம் செய்யும் போது எண்ணெய் வார்க்கும் முறை எப்படி?* உடலை அடக்கம் செய்யும் வேளையில் தந்தையுடையவும், மகனுடையவும், தூய ஆவியுடையவும் திருப்பெயரால் சிலுவை வடிவில் இறந்தவரின் முகத்திலும், நெஞ்சிலும், கால் முட்டுகளிலும் எண்ணெய் ஊற்றப்படுகிறது.
15. *குருவானவர் உடலின்மேல் சிலுவை வடிவில் மண் போடும்போது செபிப்பது என்ன?* "நீ மண்ணாகின்றாய், மண்ணுக்கே திரும்புவாய்; மீண்டும் நீ புதுப்பிக்கப்படவும் செய்வாய்"
16. *உடல் அடக்கம் செய்யப்பட்ட பின்னர் நடத்தப்படும் மன்றாட்டுக்குப் பெயர் என்ன?* இறந்தவர்களுக்கான தூப மன்றாட்டு
17. *மலங்கரை திருவழிபாட்டுமுறையில் இறந்தவர்களின் நினைவு பற்றி குறிப்பு வரைக?* இறந்துபோன அனைத்து விசுவாசிகளையும் நினைவு கூர்ந்து, அவர்களுக்காக மன்றாடவும் செய்கின்ற மரபு மலங்கரை வழிபாட்டு முறையிலுள்ள எல்லா திருச்சடங்குகளிலும் காணலாம். எல்லா ஆராதனைகளிலும் குறிப்பாக திருப்பலியிலும் நாம் இறந்தவர்களுக்காக மன்றாடுகிறோம். திருப்பலியின் துவக்கத்தில் குறிப்பாக மென்

www.malankaralibrary.com

குரல் மன்றாட்டில் ஆதாம் முதல் இன்றுவரை கடவுளை மகிழ்வித்த அனைவரையும் நினைவு கூர்கின்றோம். திருப்பலியில் பல பகுதிகளிலும் இறந்தவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காக மன்றாடுகின்றோம். இறந்தவர்களை நினைவுகூர்ந்து தூப மன்றாட்டு நடத்தும்போது "மக்கள்மேல் தந்தை இரங்குவதைபோல்..." என்ற குக்கிலியோன் பாடப்படுகிறது.

18. *மலங்கரை திருவழிபாட்டுமுறையின் இறுதிச் சடங்குமுறை செபங்கள் தரும் நம்பிக்கை என்ன?* இந்த உலகத்தில் வாழும்போதே நிலை வாழ்விற்காக ஆயத்தமாக வேண்டும் என்றும், இறப்பிற்கு பின் ஒரு வாழ்வு உண்டு என்ற நம்பிக்கையை இந்த மன்றாட்டுகள் வழங்குகின்றன

19. *அடக்கத் திருச்சடங்குகள் நமக்கு தரும் பாடம் என்ன?* அடக்கச்சடங்குகளும், இறந்தவர்களுக்கான மன்றாட்டுகளும் நமக்கு ஒரு உண்மையை நினைவூட்டுகிறது. இறப்பிற்கு பின் உள்ள வாழ்வின் ஆயத்தமே இவ்வுலக வாழ்வு. இவ்வுலகத்திலுள்ள நம்முடைய செயல்களின் அடிப்படையிலே தீர்ப்பின் நாளில் ஆண்டவர் நமக்கு தீர்ப்பு அளிப்பார். எனவே நாம் நற்செயல்கள் செய்து வாழ முயல்வோம்.

20. *இறந்தவர்களுக்காக எப்போது மன்றாடலாம்?* இறந்தவர்களை நினைவு கூரவும் அவர்களுக்கு வேண்டி மன்றாடவும் செய்ய வேண்டியது நமது கடமையாகும். அனுதின மன்றாட்டுகளிலும், திருப்பலிகளிலும் நம்முடைய இறந்து போனவர்களை நினைவுகூர்ந்து மன்றாடுவோம்.

21. "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25)

## பாடம் 17 நோன்பும் உபவாசமும்

பயிற்சி வினாக்கள் :

*1. நோன்பு, உபவாசம் என்பதன் பொருள் எழுது ?* நோன்பு என்ற வார்த்தைக்கு விரதம் இருத்தல், காத்திருத்தல், உபவசித்தல் என பல பொருள்கள் உள்ளன. சிறிதளவு உணவு உண்டு விரதம் எடுத்தல், உணவு கட்டுப்பாடான வாழ்க்கை என நோன்பை நாம் புரிந்துகொள்ளலாம். உபவாசித்தல் என்பதற்கு கடவுளோடு வாழுதல், கடவுளுடன் இருத்தல் என்று பொருள்படுகின்றது.

*2. நோன்பு கடைபிடிப்பதன் முக்கியத்துவத்தை திருவிவிலியத்திலிருந்து விளக்குக?* மோசே பாலைவனத்தில் நாற்பது நாட்கள் உபவசித்து மன்றாடியதாக பழைய ஏற்பாட்டில் காணலாம். (இ.ச. 9 : 11) அதைப்போன்று எலியா நோன்பு இருந்ததாகவும், நினிவே மக்கள் சாக்கு உடுத்தி, சாம்பல் பூசி நோன்பு இருந்ததாகவும் நாம் பழைய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாலைநிலத்தில் நாற்பது நாள் நோன்பு இருந்ததாக புதிய ஏற்பாட்டில் நாம் காண்கின்றோம். (மத். 4: 2, மாற். 1: 13, லூக். 4 : 1 - 2). நோன்பாலும், உபவாசத்தாலுமல்லாமல் தீயசக்திகளை விரட்ட முடியாது என்று இயேசு கற்பித்தார். அதுபோல நாம் ஒவ்வொருவரும் நோன்பு இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார். (மத்தேயு 9 : 15, மாற்கு 2 : 20, மத்தேயு 17: 21). இந்த உலகிலுள்ள தீய சக்திகளைத் தோற்கடிக்க இயேசு தந்த ஆன்மீக கருவியே நோன்பும் உபவாசமும்.

முதல் கிறிஸ்தவ சமூகம் நோன்பிருந்து மன்றாடுகின்ற சமூகமாகக் காணப்பட்டது. (தி.தூ.ப. 13:2, 14 : 23, 2கொரி 6: 5, 11: 27). புனித பவுலடியார் ஆன்மீக கட்டுப்பாட்டிற்கான ஒரு நெறிமுறையாக உபவாசத்தைக் காண்கிறார். (1கொரி. 9 : 27, கலா. 5 : 24)

*3.* மலங்கரைத் *திருச்சபையின் முக்கியமான நோன்புகள் யாவை? ஒவ்வொன்றின் முக்கியத்துவத்தையும், காலத்தையும் விளக்குக ?*

மலங்கரைத் திருச்சபையில் முக்கியமாகக் கடைபிடிக்க வேண்டிய நோன்புகள் ஐம்பது நோன்பு, இருபத்தி ஐந்து நோன்பு, மூன்று நோன்பு என்பவை ஆகும்.

1. ஐம்பது நோன்பு அல்லது பெரியநோன்பு: மோசே நாற்பது நாட்கள் பாலைநிலத்தில் நோன்பு இருந்ததினுடையவும், இஸ்ரயேல் மக்களின் நாற்பது ஆண்டு பாலைநில வாழ்க்கையுடையவும், ஆண்டவரின் நாற்பது நாட்கள் நோன்பினுடையவும் நினைவுகூர்தலே பெரிய நோன்பு. சுறியானித் திருச்சபைகளில் நாற்பது

www.malankaralibrary.com

நாட்களுக்குப் பதிலாக ஏழு வாரம் நோன்பு இருக்கும் பழக்கம் ஏற்பட்டது. அவ்வாறாகவே ஐம்பது நாட்கள் நோன்பு கடைபிடிக்கும் முறை உருவானது. ஆண்டவரின் திருப்பாடுகளுடையவும், இறப்பினுடையவும், உயிர்ப்பினுடையவும் ஆயத்தமாகவே இந்த ஐம்பது நோன்பு கடைபிடிக்கப்படுகிறது. இந்த நோன்பின் இறுதியில் புனித வாரம் அனுசரிக்கிறோம்.

2. இருபத்தி ஐந்து நோன்பு (டிசம்பர் 1 முதல் 25 வரை): நமது மீட்பரான இயேசுக்கிறிஸ்துவின் பிறப்புத் திருநாளின் (கிறிஸ்துமஸ்) ஆயத்தமாக 9-ம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட நோன்பு முறையே இருபத்தி ஐந்து நோன்பு இயேசுவை நமது இதயத்தில் வரவேற்பது வழியாக இறை ஒன்றிப்பில் நாம் வளர்வதற்கு இந்த நோன்பு நமக்கு உதவிபுரிகிறது.

3. மூன்று நோன்பு: நான்காம் நூற்றாண்டின் இறுதியில் பேர்ஷியாவில் இந்த நோன்பு ஆரம்பமானது. நினிவே மக்களைப் போன்று மனம்திரும்புவதற்கு இந்த நோன்பு நமக்குத் துணைபுரிகிறது. ஐம்பது நோன்பின் பதினெட்டு நாட்களுக்கு முன்னேயுள்ள திங்கள், செவ்வாய், புதன் என்ற மூன்று முழுநாட்களில் இந்த நோன்பு கடைபிடிக்கப்படுகிறது.

*4. உபவாசம், ஒறுத்தல் என்பவை பற்றி திருச்சபை கற்பிப்பது என்ன?* 1. ஆதித்திருச்சபையில் திங்கள் முதல் சனி வரையிலான நாட்களில் இறைமக்கள் உபவாசம் இருந்தனர். பின்னர் அது வெள்ளிக்கிழமை மட்டுமாகக் குறைக்கப்பட்டது. 2. பெரிய நோன்பின் நாற்பதாம் வெள்ளி நீங்கலாக ஏனைய அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் உபவாசம் இருக்க வேண்டும். 3. பெரியநோன்பு ஆரம்பிக்கின்ற சுபுக்கோனோ திங்கட்கிழமையும், 4. மூன்று நோன்பின் செவ்வாய்க்கிழமையும் உபவசிக்க வேண்டும் 5. நோன்பு நாட்களில் ஒரு நேரம் உபவாசிக்க வேண்டும் என்பது சாதாரண முறை. 6. குழந்தைகள், வயதானவர், நோயாளிகள், கடினமாக உழைப்பவர், கர்ப்பிணிகள் ஆகியோருக்கு உபவாசத்திலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. 7. தேவ நற்கருணை உண்பதற்கு முன் ஒரு மணி நேரமாவது உபவசிக்க வேண்டும்

எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் இருபத்தி ஐந்து நோன்பு, மூன்று நோன்பு, பெரிய நோன்பு போன்ற காலங்களிலும் மாமிசம் உண்ணக்கூடாது என்று திருச்சபை அறிவுறுத்துகின்றது. ஆனால் மூன்று நோன்பு முடிந்து ஐம்பது நோன்பு வரையிலான பதினெட்டு நாட்களிலும் உயிர்ப்பு முதல் பெந்தெகோஸ்தே வரையிலான ஐம்பது நாட்களிலும் வெள்ளிக் கிழமையிலும் ஒறுத்தல் கடைபிடிக்க தேவையில்லை.

மூன்று நோன்பிலும், பெரிய நோன்பின் திங்கள் கிழமையிலும், நோன்பின் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும், நாற்பதாம் வெள்ளி முதல் உயிர்ப்பு வரையிலான நாட்களிலும் மீன், முட்டை ஆகியவையும், புனித வெள்ளியன்று மேற்சொன்னவை அல்லாமல் பாலும், பாலிலிருந்து பெறுகின்ற பொருட்களும் உண்ணக்கூடாது என்பதும் திருச்சபையின் சட்டம். நோன்பு எந்த நாள் முடிகின்றதோ அன்று ஒறுத்தல் இல்லை.

*5. உங்களுடைய ஆன்மீக வாழ்வின் புதுப்பித்தலுக்கு நோன்பும், உபவாசமும், ஒறுத்தலும் தேவைதானா? நீங்களும் இவ்வாறு கடைபிடிப்பீர்களா ?*

விண்ணகத் தந்தையின் நிறைவில் சென்று சேர்வதற்கான (மத்தேயு 5 : 48) ஒரு அழைப்பு நம் ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ளது. வாழ்வை புனிதப்படுத்துவதன் வாயிலாக மட்டுமே இதை அடைய முடியும். இந்த புனிதப்படுத்துதலுக்கு துணைபுரியும் மனந்திரும்புதலுக்கு நம்மை வழிநடத்துகின்ற ஒரு கருவியாகவே நாம் நோன்பைக் காண வேண்டும். உபவாசித்தல், செபித்தல், தர்மம் செய்தல் என்பவை நோன்பின் முக்கியமான பகுதிகளாகும்.

குறுவினாவிடைகள்

1. *நோன்பு என்ற வார்த்தையின் பொருள் என்ன?* விரதம் இருத்தல், காத்திருத்தல், உபவசித்தல்,
2. *நோன்பை நாம் எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?* சிறிதளவு உணவு உண்டு விரதம் எடுத்தல், உணவு கட்டுப்பாடான வாழ்க்கை
3. *உபவாசித்தல் என்பதன் பொருள் என்ன?* கடவுளோடு வாழுதல், கடவுளுடன் இருத்தல்
4. *அனைத்து மதத்தினரும் எவ்வாறு நோன்பையும், உபவாசத்தையும் புரிந்து கொள்கின்றனர்?*

www.malankaralibrary.com

விசுவாசிகளுக்கு ஆன்மீகபலம் கிடைப்பதற்கான வழியாகவே நோன்பையும், உபவாசத்தையும் எல்லா மதத்தினரும் காண்கின்றார்கள். குறைவான உணவை உண்டு இறை சிந்தனையோடு கட்டுப்பாடான வாழ்க்கை முறையே நோன்பும், உபவாசமும் ஆகும்.

5. *இந்திய பண்பாட்டில் நோன்பின் முக்கியத்துவம் என்ன?* நமது இந்திய பண்பாட்டில் நாம் காண்கின்ற விரதங்களும், தவங்களும் ஒருவருடைய ஆன்மீக வளர்ச்சிக்கு அடிப்படையான செயல்களாகும். நோன்பின் வழியாகவும், உபவாசத்தின் வழியாகவும் ஒருவர் ஆன்மீக பலம் படைத்தவராகின்றார்.

6. *எவ்வாறு நோன்பும் உபவாசமும் கிறிஸ்தவ வாழ்வின் முக்கிய பகுதிகளாக உள்ளன?* கிறிஸ்தவ வாழ்வின் ஒரு முக்கியமான பகுதியே நோன்பும் உபவாசமும் ஆகும். விண்ணக வாழ்வை குறிக்கோளாகக் கொண்டிருக்கின்ற ஒரு புனித பயணமே கிறிஸ்தவ வாழ்வு. இந்தப் பயணத்தில் தீயசக்திகளை எதிர்ப்பதற்கு ஆன்மீகசக்தி தேவைப்படுகிறது. விண்ணை நோக்கிய பயணத்திற்கு சக்தி கிடைப்பது நோன்பின் வழியாகவும், உபவாசத்தின் வழியாகவும் ஆகும். திருச்சபை மக்களின் ஆன்மீகமான புனித பயணத்தில் சக்தி பகர்கின்ற ஊற்றே நோன்பும் உபவாசமும் ஆகும்.

7. *திருச்சபையில் நோன்பும் உபவாசமும் கொண்டுள்ள பங்கு என்ன?* நோன்பு காலத்தை திருச்சபை மக்களின் உண்மையான மனதிரும்புதலின் காலமாக திருச்சபை கருதுகின்றது. பண்டைக்காலம் முதலே திருச்சபையில் நோன்பும் உபவாசமும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உயிர்ப்பு முதல் பெந்தேகோஸ்தே வரையிலான நாட்களிலும், சனி, ஞாயிறு நாட்களிலும், திருவிழா நாட்களிலும் உபவாசம் இல்லை. மற்ற நாட்களிலெல்லாம் உபவாசம் இருப்பதை திருச்சபை ஊக்குவிக்கின்றது.

8. *மலங்கரைத் திருச்சபையில் கடைபிடிக்க வேண்டிய கட்டாயமற்ற நோன்புகள் யாவை?* மலங்கரைத் திருச்சபையில் கட்டாயமற்ற நோன்புகள் ஆன்மீக வளர்ச்சிக்காக விசுவாசிகள் கடைபிடித்து வருகிறார்கள்.

| நோன்பின் பெயர் | கடைபிடிக்கப்படும் நாட்கள் |
|---|---|
| பதிமூன்று நோன்பு | ஜூன் 16 முதல் 29 வரை |
| பதினைந்து நோன்பு | ஆகஸ்டு 1 முதல் 15 வரை |
| எட்டு நோன்பு | செப்டம்பர் 1 முதல் 8 வரை |

9. *பதிமூன்று நோன்பின் மறு பெயர் என்ன?* ஸ்லீஹா நோன்பு

10. *பதிமூன்று நோன்பின் முக்கியத்துவம் என்ன?* புனித பேதுரு மற்றும் புனித பவுலடியாரின் திருநாளையொட்டிய பதிமூன்று நாட்கள் திருச்சபையில் கடைபிடிக்கின்ற நோன்பே ஸ்லீஹா நோன்பு.

11. *பதிமூன்று நோன்பின் குறிக்கோள் என்ன?* திருத்தூதர்களைப் போன்று திருச்சபை மக்களின் மறைபரப்புப்பணியார்வத்தை வளர்த்துதல் என்பதே இந்த நோன்பின் குறிக்கோள்.

12. *பதினைந்து நோன்பின் மறு பெயர் என்ன?* சூனோயோ நோன்பு

13. *பதினைந்து நோன்பின் முக்கியத்துவம் என்ன?* தூய இறை அன்னையின் விண்ணேற்புத் திருநாளின் ஆயத்தமாக பதினைந்து நாள் கடைபிடிக்கின்ற நோன்பே இது. இறைஅன்னையை போன்று அனைத்து திருச்சபை மக்களும் விண்ணுலக வாழ்வை அடைவதற்காக இந்த நோன்பு கடைபிடிக்கப்படுகின்றது.

14. *எட்டு நோன்பின் முக்கியத்துவம் என்ன?* இறை அன்னையின் பிறப்புத் திருநாளையொட்டிய தனிப்பட்ட தேவைகளை சமர்ப்பித்து தூய அன்னையின் பரிந்துரை வேண்டி எட்டு நோன்பு கடைபிடிக்கப்படுகிறது.

15. *உபவாசம் இருக்க வேண்டிய நாட்கள் யாவை? 1.* பெரிய நோன்பின் நாற்பதாம் வெள்ளி நீங்கலாக ஏனைய அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் 2. பெரியநோன்பு ஆரம்பிக்கின்ற சுபுக்கோனோ திங்கட்கிழமையும், 3. மூன்று நோன்பின் செவ்வாய்க் கிழமையும் 4. நோன்பு நாட்களில் ஒரு நேரமும் உபவசிக்க வேண்டும் என்பது சாதாரண முறை. 5. தேவ நற்கருணை உண்பதற்கு முன் ஒரு மணி நேரமாவது உபவசிக்க வேண்டும்

16. *உபவாசத்திலிருந்து விடுப்பு பெறுவர்கள் யாவர்?* குழந்தைகள், முதியவர்கள், நோயாளிகள், கடின உழைப்பாளிகள், கர்ப்பிணிகள் ஆகியோருக்கு உபவாசத்திலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

www.malankaralibrary.com

17. *மாமிசம் உண்ணக்கூடாத ஒறுத்தல் கடைபிடிக்க வேண்டிய நாட்கள் யாவை?* எல்லா வெள்ளிக்கிழமைகளிலும், இருபத்தைந்து நோன்பு, மூன்று நோன்பு, பெரிய நோன்பு போன்ற காலங்களிலும் மாமிசம் உண்ணக்கூடாது

18. *மாமிசம் உண்ண அனுமதிக்கப்பட்டுள்ள வெள்ளிக்கிழமைகள் யாவை? 1.* மூன்று நோன்புக்கும் ஐம்பது நோன்பு துவக்கத்திற்கும் இடையில் வரும் பதினெட்டு நாட்களிலும் உள்ள வெள்ளிக்கிழமைகளிலும், 2. உயிர்ப்பு முதல் பெந்தெகோஸ்தே வரையிலான ஐம்பது நாட்களில் வரும் வெள்ளிக்கிழமைகளிலும் மாமிச உணவு வகைகள் உண்ணலாம்.

19. *மீன், மற்றும் முட்டை உண்ணக்கூடாத ஒறுத்தல் கடைபிடிக்க வேண்டிய நாட்கள் யாவை?* 1. மூன்று நோன்பு நாட்களிலும், 2. பெரிய நோன்பின் முதல் திங்கட்கிழமையிலும், 3. பெரிய நோன்பின் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும், 4. நாற்பதாம் வெள்ளி முதல் உயிர்ப்பு வரையிலான அனைத்து நாட்களிலும் மீன், மற்றும் முட்டை போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

20. *புனித வெள்ளியன்று தவிர்க்க வேண்டிய உணவுப் பொருட்கள் யாவை?* மாமிசம், மீன், முட்டை, பால், பாலிலிருந்து பெறுகின்ற பொருட்களும் உண்ணக்கூடாது.

21. *நோன்பு முடிகின்ற நாளில் கடைபிடிக்க வேண்டாதது என்ன?* ஒறுத்தல் கடைபிடிக்க வேண்டாம்

22. *நோன்பின் முக்கியமான பகுதிகள் யாவை?* உபவாசித்தல், செபித்தல், தர்மம் செய்தல் என்பவை நோன்பின் முக்கியமான பகுதிகளாகும்.

23. *மலங்கரைத் திருச்சபையின் "நாற்பது நோன்பை நோற்றிடு என்ற பாடல் யாது?*

*"நாற்பது நோன்பை நோற்றிடு நீ*

*வறியார்க்கமுது படைத்திடு* நீ*

*ஈசாய் மகனைப்* போல் நீயும்*

*மன்றாடிடு தினமேழு முறை*

24. *நோன்பில் ஆர்வம் கொண்டு கிறிஸ்துவோடு ஒன்றாவதற்கு நற்செய்தி வாசகத்திற்குப்பின் பாடப்படும் பாடலின் பொருள் என்ன?* உலக இன்பத்தையும், உடலின்பத்தையும், நாடி செல்கின்ற இந்த உலகத்தில் கடவுளை அடைவதற்குரிய வழியே நோன்பும் உபவாசமும் ஆகும். நோன்பின் வாயிலாக ஆன்மீக புதுப்பித்தலும், மனந்திரும்புதலும் நடைபெறுகிறது. அதன் வழியாக தீமைகளை விட்டு விலகி நன்மையில் வளர்கிறோம். இவ்வாறு கிறிஸ்தவ வாழ்வுக்கு உண்மையான சான்று பகிர்ந்து வாழ நாம் முயல்வோம்.

"பெரியோ ராயுதமாம் நோன்பில் ஆர்வம் கொள்வோமே

இதனால் மெசியாவில் இறந்தோர்

அனைவரும் வென்றாரே

மலையில் மோசே இதனால் மிளிர்ந்தாரே

தோற்கடித்தாரே இயேசு சாத்தானை

எலியா இறைவாக்கினர் தேரில் விண்ணகம் சென்றாரே

நிணச்சான்றினர் புனிதர் இதனால் மாட்சிமை அடைந்தாரே

ஹாலேலூயா - உ - ஹாலேலூயா"

25. "மனிதர் <u>அப்பத்தினால்</u> மட்டுமல்ல, கடவுளின் <u>வாய்ச்சொல்</u> ஒவ்வொன்றாலும் வாழ்வர் என <u>மறைநூலில்</u> எழுதியுள்ளதே" (மத்தேயு 4 : 4)

www.malankaralibrary.com

## பாடம் 18 திருத்தூதர் தோமாவின் வருகை

பயிற்சி வினாக்கள்

1. *திருத்தூதர்கள் உலகெங்கும் சென்று நற்செய்தி பரப்பக் காரணம் என்ன?* இயேசு, தம் திருப்பணியைத் தொடர்வதற்காக சீடர்களை அழைத்தார். அவர்களில் பன்னிருவரைத் தனியாகத் தேர்ந்தெடுத்தார். அவர்களுக்குத் திருத்தூதர் என்றும் பெயரிட்டார். இயேசு இறந்து உயிர்த்தெழுந்த பின்னர் அவர்களிடம் பின்வருமாறு கூறினார். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்." (மாற்கு 16:15-18, மத்தேயு 2 8 :18 - 2 0 ) . அவ்வாறு திருத்தூதர்கள் நற்செய்தியை பறை சாற்ற உலகமெங்கும் சென்றார்கள்.

2. *இந்தியாவில் தோமையார் மறைபரப்பு பணியாற்றியதன் சான்று என்ன?* புனித தோமையாரின் தூதுரைப்பணிகளில் பாரத நாடு சிறப்பிடம் பெற்றது. பாரதத்தின் வட நாடு முதல் தென்பகுதி வரை பலமுறை பயணம் செய்து பல கிறிஸ்தவ சமூகங்களைக் கட்டியெழுப்பினார். இந்தியாவின் தெற்குப் பகுதியிலுள்ள 'மார் தோமா கிறிஸ்தவர்கள்' என்னும் கிறிஸ்தவ சமூகமே அவருடைய மறைபரப்புப் பணிக்கு சிறந்த சான்று ஆகும்.

3. *தோமையார் இந்தியாவிற்கு வருகை தரக் காரணங்கள் யாவை?* புனித தோமா பாரதத்தில் வருவதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று அக்காலத்தில் ஏராளமான யூதர்கள் வணிகத்திற்காக இந்தியாவுக்கு வந்து குடியிருப்புகள் அமைத்து வாழ்ந்திருந்தனர். இவர்கள் மேற்கத்திய நாடுகளுடன் வாணிபம் செய்து வந்தனர். யூதர்களிடம் அரமாயிக் மொழியில் பேசவும் அவர்கள் வாயிலாக இந்நாட்டு மக்களோடு கருத்து பரிமாறவும் தோமையாருக்கு இயன்றது.

இரண்டாவதாக பயண வசதியும் ஒரு காரணமாக கூறலாம். மேற்கத்திய நாடுகளிலிருந்து கிழக்கு திசை நோக்கி வீசுகின்ற பருவக்காற்றின் வேகத்திற்கு ஏற்ப கடல்வழியில் குறைந்த நேரத்தில் பாரத நாட்டை வந்தடைய இயலும் என்று கண்டறிந்த போது இந்தியாவுக்கும், மேலை நாடுகளுக்கும் இடையேயான வணிகம் வேகமடைந்தது. அவ்வாறு வந்த வணிகர்களோடு சேர்ந்து தோமாவும் இந்தியாவுக்கு வந்தார்.

4. *தோமையார் நிறுவிய திருச்சபைகள் எத்தனை? அவை யாவை?* கி.பி 52- ல் தோமையார் கொடுங்கல்லூருக்கு அருகில் உள்ள மாலியங்கரை என்ற இடத்தில் வந்து சேர்ந்தார். அவர் நற்செய்திப்பணிவழியாக பல திருச்சபைச் சமூகங்கள் உருவாகக் காரணமானார். புனித தோமையார் ஏழு திருச்சபை சமூகங்களை நிறுவினார். புனித தோமையாரின் பாரம்பரியத்தை உரிமையாகக் கொண்ட ஏழு திருச்சபை சமூகங்கள் கேரளாவில் உள்ளன. இவை 'சப்த தேவாலயங்கள்' என்று அறியப்படுகிறது. (1) கொடுங்கல்லூர் (2) கொல்லம் (3) நிரணம் (4) நிலய்க்கல் (5) கோட்டய்க் காவு (6) கோக்கமங்கலம் (7) பாலயூர் என்பவையே அந்த இடங்களாகும். அரை தேவாலயம் என்று சிறப்புப் பெற்றிருக்கும் திருவிதாங்கோடு தேவாலயம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகிய மண்டபத்தின் அருகிலுள்ளது. இது புனித தோமையாரால் நிறுவப்பட்டது என்று நம்பப்படுகிறது.

5. *குறிப்பு வரைக: மார் தோமையாரின் இரத்த சாட்சியம்.*

கேரளாவிலிருந்து தோமையார் தமிழ்நாட்டிலுள்ள சோழநாட்டிற்கு வருகை தந்தார். மயிலாப்பூரில் உள்ள சின்ன மலையை மையமாகக் கொண்டு இவர் நற்செய்தி அறிவித்தார். மயிலாபூரில் அனேக மக்களை இவர் மனம் மாறச் செய்தார். இதனால் கோபம் கொண்ட சிலர் தோமையாரை எதிர்த்தனர். தோமையார் சின்னமலையில் செபித்துக் கொண்டிருந்த போது அவரை ஈட்டியால் குத்தினார்கள். அவ்வாறு அவர் இரத்த சாட்சியானார். புனித தோமையாரின் சீடர்கள் அவரை மயிலாப்பூரிலேயே அடக்கம் செய்தனர்.

### குறு வினா விடைகள்

1. *திருத்தூதர்கள் நற்செய்தியை பறைசாற்ற உலகமெங்கும் சென்றதன் காரணமான இயேசுவின் கட்டளைச் சொல் என்ன?* "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்." (மாற்கு 16:15-18, மத்தேயு 28:18-20)
2. *இந்தியாவின் திருத்தூதராக அழைக்கப்படுபவர் யார்?* புனித தோமையார்

www.malankaralibrary.com

3. *புனித தோமையார் எந்நாட்டைச் சார்ந்தவர்?* பாலஸ்தீனாவிலுள்ள கலிலேயா

4. *புனித தோமையாரின் தொழில் என்ன?* மீன்பிடித்தொழில்

5. *தோமா என்ற பெயரின் பொருள் என்ன?* 'இரட்டை பிறவிகள்'

6. *தோமாவின் கிரேக்கப் பெயர் என்ன?* திதிம்

7. *தோமையாரைப் பற்றிய யோவான் நற்செய்தியில் உள்ள குறிப்புகள் யாவை?* யோவான் 11:16, 14:5, 20:28-29).

8. *புராதன கையெழுத்துப் பிரதிகளில் தோமாவின் பெயர் என்ன?* யூதாதோமா

9. *தோமையார் நற்செய்தியை அறிவித்ததாக வரலாறு கூறுகின்ற இடங்கள் யாவை?* மெசபடோமியா, பேர்ஷியா, மேதியா, ஹிர்க்கானியா, எடேசா, பாக்ட்றிய

10. *இந்தியாவுக்கு வந்து குடியிருப்புகள் அமைத்து வாழ்ந்திருந்த யூதர்கள் பேசிய மொழி யாது?* அரமாயிக்

11. *இந்தியாவில் யூதர்களுக்கான செபக்கூடம் உள்ள இடம் எது?* கொச்சி

12. *கி.பி 52-ல் தோமையார் வந்தடைந்த இடம் எது?* கொடுங்கல்லூருக்கு அருகில் உள்ள மாலியங்கரை

13. *புனித தோமையார் நிறுவிய ஏழு 'சப்த தேவாலயங்கள்' யாவை?* (1) கொடுங்கல்லூர் (2) கொல்லம் (3) நிரணம் (4) நிலய்க்கல் (5) கோட்டய்க் காவு (6) கோக்கமங்கலம் (7) பாலயூர்

14. *திருவிதாங்கோடு அரை தேவாலயம் பற்றி குறிப்பு வரைக?* அரை தேவாலயம் என்று சிறப்புப் பெற்றிருக்கும் திருவிதாங்கோடு தேவாலயம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அழகிய மண்டபத்தின் அருகிலுள்ளது. இது புனித தோமையாரால் நிறுவப்பட்டது என்று நம்பப்படுகிறது.

15. *மலங்கரை திருச்சபை பெயர்க்காரணம் கூறுக?* தோமையார் கொடுங்கல்லூருக்கு அருகிலுள்ள மால்யங்கரை என்ற இடத்திலேயே முதலில் வருகை தந்தார். அங்கேயே தான் நற்செய்தியை அறிவித்து முதல் திருச்சபை சமூகத்தை நிறுவினார். எனவே அவர் நிறுவிய சபை மலங்கரை திருச்சபை என்று அழைக்கப்பட்டது. மலங்கரை என்னும் வார்த்தைக்கு மலைகளின் கரை என்ற பொருளும் உண்டு. புனித தோமையாரின் வருகை முதல் இங்குள்ள அப்போஸ்தலிக்க திருச்சபை மலங்கரை சபை என்று அழைக்கப்பட்டது.

16. *தோமையார் தமிழ்நாட்டில் சின்ன மலையை மையமாகக் கொண்டு நற்செய்தி அறிவித்த இடம் எது?* மயிலாப்பூரில்

17. *தோமையார் எங்கே இரத்த சாட்சியானார்?* சின்னமலையில்

18. *புனித தோமையாரின் சீடர்கள் தோமையாரை எங்கே அடக்கம் செய்தனர்?* மயிலாப்பூர்

19. புனித தோமையாரின் கல்லறை எங்குள்ளது? மயிலாப்பூர் பேராலயத்தில்

20. *மூன்றாம் நூற்றாண்டில் புனித தோமையாரின் திருவுடலின் முக்கியப் பகுதி மயிலாப்பூரிலிருந்து எங்கே மாற்றப்பட்டது?* மெசபட்டோமியாவில் உள்ள எடேசாவுக்கு

21. *1953- ல் புனித தோமையாரின் திருவுடலின் ஒரு பகுதி கேரளாவில் எங்கே வைக்கப்பட்டது?* கொடுங்கல்லூரிலுள்ள புனித தோமையார் தேவாலயத்தில்

22. *இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்துக்குப்பின் கிறிஸ்தவர்கள் புனித தோமையாரின் நினைவு நாளை எந்நாளில் கொண்டாடுகிறார்கள்?* ஜூலை 3

23. *புனித தோமையாரின் நினைவு நாளுக்குப் பெயர் என்ன?* 'துக்றானா'

24. *ஞாயிறு காலை மன்றாட்டில் மார் தோமையாரின் விசுவாசத்தையும் மறைதூதுப் பணியார்வத்தையும் பற்றிய பாடல் எது?*

“மார் தோமா சீரெழுமூழியரே

விசுவாசத்தின் ஆர்வலரே

www.malankaralibrary.com

தம் வீட்டை வானிலமைத்தவரே.

எழில்மிகு சிற்பியுமானவரே

வளர்மரமாகும் கிளைகளிலே

தூயாவி குடிகொள்வாரே மக்கள் நானாதிசை நின்றும்

வருகின்றனர் உம் அருள் பெறவே உம் மகிமையின் புகழ் பாடிடவே"

25. "நீ என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறு பெற்றோர்." (யோவான் 20 : 19)

## பாடம் 19 மலங்கரை திருச்சபை பதினாறாம் நூற்றாண்டு வரை

பயிற்சி வினாக்கள் :

*1. மலங்கரைத் திருச்சபையின் பேர்ஷியன் தொடர்பு பற்றி விளக்குக?* மலங்கரைத் திருச்சபை ஆரம்பகாலத்தில் பேர்ஷியாவில் உள்ள சுறியானி திருச்சபையோடு தொடர்பு கொண்டிருந்தது. இந்தியா மற்றும் பேர்ஷியா திருச்சபையின் பொது தந்தையே புனித தோமையார். அதனால் தான் இரு திருச்சபைகளும் தொடர்பு கொண்டிருந்தன என்று கருதப்படுகிறது.

நான்காம் நூற்றாண்டு முதல் பேர்ஷியன் திருச்சபை வளர்ச்சியடைந்து, பிற திருச்சபைகளோடு தொடர்பு கொள்ளத் தொடங்கியது. அவ்வாறு இந்தியத்திருச்சபை பேர்ஷியன் திருச்சபையோடு தொடர்பு கொள்ளத் தொடங்கியது. ஏழாம் நூற்றாண்டு வரை தோமையாரின் வழிவந்தவர்களான இந்நாட்டு ஆயர்கள் கேரளாவிலுள்ள கிறிஸ்தவ திருச்சபைக்கு தலைமை வகித்தனர். மலங்கரைத் திருச்சபையின் ஆயர்கள் ஆன்மீகதந்தையர்களாக இருந்தார்கள். நிர்வாகத்தை ஆர்ச்சு டீக்கன் (ஆர்க்கதியாக்கோன்) என்று அறியப்பட்ட குருநிலையிலுள்ள ஒருவர் கவனித்து வந்தார். மலங்கரை கிறிஸ்தவர்கள் சுறியானி வழிபாட்டு முறையையே பயன்படுத்தினர். பதினாறாம் நூற்றாண்டில் மலங்கரைத் திருச்சபைக்கு பேர்ஷியன் திருச்சபையோடு உள்ள தொடர்பு முறிந்தது. வேறு பல திருச்சபைகளின் தலைவர்களும் இந்த காலங்களில் மலங்கரைத் திருச்சபையை சந்தித்ததாக சான்றுகள் கூறுகின்றன. பிற இடங்களிலிருந்தும் கிறிஸ்தவர்கள் பிற்காலங்களில் கேரளாவில் வந்து குடியேறினர். நான்காம் நூற்றாண்டுக்கு பின்னர் பேர்ஷியாவிலிருந்து க்னாயித்தொம்மனுடைய தலைமையில் பல கிறிஸ்தவ குடும்பங்கள் கொடுங்கல்லூரில் வந்து குடியேறினர். இந்த கிறிஸ்தவ சமூகத்தின் பின்வந்தவர்களே கனானாய கிறிஸ்தவர்கள்.

*2.போர்த்துகீசியர்கள் எவ்வாறு மலங்கரைத் திருச்சபையுடன் தொடர்பு கொண்டனர்?* இந்தியாவோடு வாணிபம் புரிய போர்த்துகீசியர்கள் 1498 முதல் வந்தனர். முதன் முதலில் வந்தவர் போர்த்துகீசிய மாலுமி வாஸ்கோடகாமா ஆவார். மேலைநாடுகளிலிருந்து வருகை தந்த கிறிஸ்தவர்களை மலங்கரை கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றனர். அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து கொடுத்தனர். இங்குள்ள போர்த்துகீசியர்களும் கிறிஸ்தவர்களுக்கு பல உதவிகள் செய்தனர். அவர்கள் இங்குள்ள மலங்கரை சபையோடு தொடர்பு கொண்டு அருளடையாளங்களும் பெற்றனர். இந்தியாவில் மக்களிடையே கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க பல நற்செய்தி பணியாளர்கள் போர்த்துகீசியாவிலிருந்து வருகை தந்தார்கள். அவர்களுள் மிகவும் முக்கியமானவர் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆவார்.

*3. புனித பிரான்சிஸ் சவேரியாரின் நற்செய்தி பணியை விளக்குக?* புனித பிரான்சிஸ் சவேரியார் இயேசு சபை துறவறசமூகத்தின் குருவாக இருந்தார். 1542 -ல் கோவாவில் வந்து சேர்ந்த இவர் இந்தியாவின் பல இடங்களிலும் நற்செய்தியை அறிவித்தார். பல்லாயிரக்கணக்கான மக்களை கிறிஸ்தவர்களாக மாற்றினார்.

1544-ல் அவர் திருவிதாங்கூரில் வந்து சேர்ந்தார். கேரளா மற்றும் தமிழக கடற்கரையோரங்களில் நற்செய்தியை பறைசாற்றிய பின் இந்தியாவின் பிற இடங்களுக்குச் சென்றார். அவ்வாறே சீனாவிலும், ஜப்பானிலும் நற்செய்தியை அறிவித்தார். 1552 -ல் இறந்த பிரான்சிஸ் சவேரியாரின் உடல் இன்றும் கோவாவில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

*4. சிறு குறிப்பு வரைக: - பத்ரவாதோ?* போர்த்துகீசிய மன்னரே வியாபாரிகளையும், நற்செய்தியாளர்களையும் இந்தியாவிற்கு அனுப்பினார். மறைத்தூதுப் பணி செய்யும் பகுதிகளின் மேல் போர்த்துகீசிய மன்னருக்கு

www.malankaralibrary.com

திருத்தந்தை அதிகாரத்தை வழங்கியிருந்தார். இதற்கு 'பத்ரவாதோ' என்று பெயர். பத்ரவாதோ என்பது ஒரு போர்த்துகீசிய வார்த்தை „மீட்பின் அதிகாரம்" என்பதே இதன் பொருள். கண்டுபிடிக்கப்பட்டதும், கண்டுபிடிக்க வேண்டிய அனைத்து கரைகளும், கடல்களும் போர்த்துகீசிய மன்னருக்கே உரியது என்று இச்சட்டம் கூறுகின்றது. அவ்வாறு இந்தியாவிலுள்ள புதிய இடங்களும் அங்குள்ள ஆலயங்களும், இனிமேல் உருவாக்கப்படுகின்றதுமான அனைத்தும் போர்த்துக்கீசிய மன்னரின் அதிகாரத்திற்குட்பட்டவை ஆயின. 1600 ஆகஸ்ட் நான்காம் நாள் மலங்கரைத் திருச்சபையின் மேல் பத்ரவாதோ ஏற்படுத்தப்பட்டது. அவ்வாறு மலங்கரை திருச்சபையில் போர்த்துகீசிய மன்னரின் அதிகாரம் உறுதி செய்யப்பட்டது.

குறுவினாவிடைகள்

1. *இயேசுவின் சீடரான புனித தோமையார் எப்போது இந்தியா வந்தார்?* கி.பி. 52-ல்
2. *புனித தோமையார் உருவாக்கிய கிறிஸ்தவ சமூகம் எந்த பெயர்களில் அழைக்கப்படுகிறது?* மலங்கரைத் திருச்சபை, மார்த்தோமா கிறிஸ்தவர்கள்
3. *மலங்கரைத் திருச்சபையின் வரலாற்று ஆதாரங்கள் இல்லாத தொடக்கக்கால வரலாற்றை எவ்வாறு அழைக்கின்றனர்?* 'இருண்டகாலம்'
4. *மலங்கரை திருச்சபை ஆரம்பகாலத்தில் எந்த நாட்டு சுறியானி திருச்சபையோடு தொடர்பு கொண்டிருந்தது?* பேர்ஷியா (இன்றைய ஈரான்)
5. *இந்தியா - பேர்ஷியா திருச்சபையினரின் தொடர்புக்கு முக்கிய காரணம் என்ன?* இந்தியா மற்றும் பேர்ஷியா திருச்சபையின் பொது தந்தையே புனித தோமையார். அதனால் தான் இரு திருச்சபைகளும் தொடர்பு கொண்டிருந்தன என்று கருதப்படுகிறது.
6. *வளர்ச்சியடைந்த பேர்ஷியன் திருச்சபை பிற திருச்சபைகளோடு எப்போது முதல் தொடர்பு கொள்ளத்தொடங்கியது?* நான்காம் நூற்றாண்டு முதல்
7. *தோமையாரின் வழிவந்தவர்களான பேர்ஷியன் நாட்டு ஆயர்கள் கேரளாவிலுள்ள கிறிஸ்தவ திருச்சபைக்கு எப்போது வரை தலைமை வகித்தனர்?* ஏழாம் நூற்றாண்டு வரை
8. மலங்கரை திருச்சபையின் ஆயர்கள் ஆன்மீக தந்தையர்களாக இருந்தார்கள்.
9. *துவக்க கால மலங்கரை திருச்சபையின் பொருள்நிர்வாகத்தை வழிநடத்தியவர் யார்?* ஆர்ச்சு டிக்கன் (ஆர்க்கதியாக்கோன்)
10. *ஆர்ச்சு டிக்கன் என்பதன் பொருள் என்ன?* தலைமைத் திருத்தொண்டர்
11. *மலங்கரை கிறிஸ்தவர்கள் பயன்படுத்தி வந்த வழிபாட்டுமுறை என்ன?* சுறியானி வழிபாட்டு முறை
12. *மலங்கரைத் திருச்சபை மற்றும் பேர்ஷியன் திருச்சபை இடையே உள்ள உறவு எப்போது முறிந்தது?* பதினாறாம் நூற்றாண்டில்
13. *நான்காம் நூற்றாண்டுக்கு பின்னர் பேர்ஷியாவிலிருந்து யார் தலைமையில் கிறிஸ்தவ குடும்பங்கள் கொடுங்கல்லூரில் வந்து குடியேறினர்?* க்னாயித்தொம்மன்
14. *க்னாயித்தொம்மன் கிறிஸ்தவ சமூகத்தின் வழிமரபினர்களின் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?* க்னானாய கிறிஸ்தவர்கள்.
15. *இந்தியாவோடு வாணிபம் புரிய போர்த்துகீசியர்கள் எப்போது முதல் வந்தனர்?* 1498
16. *முதன் முதலில் இந்தியா வந்த போர்த்துகீசிய மாலுமி யார்?* வாஸ்கோடகாமா
17. *கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க போர்த்துகீசியாவிலிருந்து வருகை தந்தவர்களுள் மிகவும் முக்கியமானவர் யார்?* புனித பிரான்சிஸ் சவேரியார்
18. *பிரான்சிஸ் சவேரியார் எந்த துறவறசமூகத்தின் குருவாக இருந்தார்?* இயேசு சபை
19. *பிரான்சிஸ் சவேரியார் கோவாவில் வந்து சேர்ந்த ஆண்டு எது?* 1542

www.malankaralibrary.com

20. *பிரான்சிஸ் சவேரியார் திருவிதாங்கூரில் வந்து சேர்ந்த ஆண்டு எது?* 1544
21. *பிரான்சிஸ் சவேரியார் நற்செய்தியை பறைசாற்றிய நாடுகள் யாவை?* இந்தியா, சீனா, ஜப்பான்
22. *பிரான்சிஸ் சவேரியார் இறந்த ஆண்டு எது?* 1552
23. *பிரான்சிஸ் சவேரியாரின் உடல் இன்றும் எங்கே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது?* கோவா
24. *போர்த்துகீசியர்கள் மலங்கரை திருச்சபையை வழிநடத்த முயன்ற முறை எவ்வாறு?* போர்த்துகீசியர்கள் வலுக்கட்டாயமாக மலங்கரை திருச்சபையை வழிநடத்த முயன்றார்கள். மேலைநாட்டு திருச்சபையின் வழிபாட்டு முறைகளையும், பழக்க வழக்கங்களையும் இந்தியாவில் புகுந்த அவர்கள் முயன்றனர். கிழக்கத்திய சுறியானி வழிபாட்டு முறையையே மலங்கரை கிறிஸ்தவர்கள் பயன்படுத்தி வந்தனர். ஆனால் போர்த்துகீசிய நற்செய்தியாளர்கள் பயன்படுத்துவது இலத்தீன் வழிபாட்டு முறையான மேலைநாட்டு வழிபாட்டு முறையே ஆகும். இங்குள்ள கிறிஸ்தவர்கள் பயன்படுத்தி வந்த சுறியானி வழிபாட்டு முறையை மாற்றி இலத்தீன் வழிபாட்டு முறையைக் கொண்டு வரவும் அவர்கள் திட்டமிட்டனர்.
25. *'பத்ரவாதோ' என்ற போர்த்துகீசிய வார்த்தையின் பொருள் என்ன?* மீட்பின் அதிகாரம்'
26. *'பத்ரவாதோ' அதிகாரம் கொண்டிருந்தவர் யார்?* போர்த்துகீசிய மன்னர்
27. *மலங்கரை திருச்சபை 'பத்ரவாதோ' அதிகாரம் வழியாக போர்த்துகீசிய மன்னரின் கீழ் வந்தது எப்போது?* 1600 ஆகஸ்ட் நான்காம் நாள்
28. *துவக்க காலங்களில் போர்த்துகீசியர்கள் மலங்கரை மக்களிடையே உள்ள நல்லுறவு பற்றி கூறுக?* போர்த்துகீசியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது இந்தியாவில் திருச்சபையை வழிநடத்திய பேர்ஷிய ஆயரான மார் யாக்கோபுடன் (1504 - 1552) போர்த்துகீசியார்கள் நல்லுறவு கொண்டிருந்தனர். போர்த்துகீசியர்கள் மார் யாக்கோபுக்கு போர்த்துகீசிய பலிபீடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுக்க அனுமதி வழங்கினர். போர்த்துகீசியர்கள் மலங்கரை திருச்சபையில் திருப்பலி நிறைவேற்றவும் மலங்கரை கிறிஸ்தவர்கள் அனுமதித்தனர். போர்த்துகீசிய கிறிஸ்தவர்களும், மலங்கரை கிறிஸ்தவர்களும் அருளடையாளங்களை மாறி மாறி பெற்றுக் கொண்டனர். வழிபாட்டு முறைகளும், பழக்கவழக்கங்களும் மாறுபட்டிருந்தாலும் தாங்கள் ஒரே திருச்சபையின் உறுப்பினர் என்றே கருதியிருந்தனர். இவ்வாறு அன்பும், சகோதரத்துவமும் மலங்கரைத் திருச்சபையில் போர்த்துகீசியர்களோடு இருந்தது..
29. *போர்த்துகீசியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது இந்தியாவில் திருச்சபையை வழிநடத்திய பேர்ஷிய ஆயர் யார்?* மார் யாக்கோபு (1504 - 1552)
30. *மார் யாக்கோபுக்கு பின்னர் பதவி ஏற்ற பேர்ஷிய ஆயர் யார்?* மார் யோசேப்பு
31. *மார் யோசேப்பு எத்தனை ஆண்டுகள் திருப்பணி ஆற்றினார்?* (1558 - 1568). பத்து ஆண்டுகள்
32. *மார் யோசேப்புக்கு பின்னர் பதவி ஏற்ற பேர்ஷிய ஆயர் யார்?* மார் ஆபிரகாம் 1588 -ல்
33. *மார் ஆபிரகாம் எந்த இடத்தை மையமாகக் கொண்டு திருப்பணியாற்றினார்?* அங்கமாலி
34. *போர்த்துகீசியர்களோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்த பேர்ஷிய ஆயர்கள் யாவர்?* மார் யோசேப்பு, மார் ஆபிரகாம்
35. *போர்த்துகீசியர்களோடு பேர்ஷிய ஆயர்கள் கொண்ட கருத்து வேறுபாடு பிற்காலத்தில் எந்த நிகழ்வுகளுக்கு காரணமானது?* உதயம் பேரூர் திருச்சங்கம், கூனன் குரிசு சபதம்
36. *மார் தோமையாரின் திருப்பணிகள் சிறந்தது என்றும் அந்த தந்தையின் நினைவு உலக முடிவு வரை நிலை நிற்க வேண்டும் என்றும் திருச்சபை எவ்வாறு நினைவு கூர்கின்றது?*

    வானம் ஜொலித்திடும் விண்மீனால்

    பூமுகம் அழகுறும் பசுமையினால்

    ஒளிர்வார் தமது செயல்களினால்

www.malankaralibrary.com

தந்தை மார்த்தோமா

அழியும் வானும் விண்மீனும்

வெறுமையதாகும் பூவுலகும்

மார்த்தோமா உன் நினைவதுவோ

என்றென்னும் நிலைத்திருக்கும்

37. “நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன.” (உரோமையர் 10 : 15)

## பாடம் 20 நன்மையும் தீமையும்

பயிற்சி வினாக்கள்

*1. நன்மை தீமை என்பதன் பொருள் என்ன?* கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதே நன்மை என்பதன் பொருள். கடவுளே நன்மைகளின் உறைவிடம். கடவுளுக்கு கீழ்ப்படியாதிருத்தல், கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றாதிருத்தல் இவையே தீமை என்பதன் பொருள்.

*2. நன்மையை தேர்ந்தெடுப்பதற்கு தேவையான வழிமுறைகள் யாவை?*

1. நன்மை என்ன என்பதை அறிய வேண்டும்: நாம் வாழ்கின்ற சமூகத்தில் நன்மையும், தீமையும் உள்ளன. நன்மையையும் தீமையையும் பகுத்தறியும் ஒரு தனிப்பட்ட அருளை கடவுள் மனிதர்களுக்கு அளித்திருக்கிறார். அதைப்போன்று அனுதின வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்தும், அறிவிலிருந்தும் நன்மையும் தீமையும் பகுத்தறிய நம்மால் முடியும். கடவுளே நன்மையென்றும், அவரே மீட்பு என்றும் உள்ள தெளிவான பகுத்தறிவு நன்மையைத் தேர்ந்தெடுக்க உதவி புரிகிறது. நன்மை செய்யும் போது மகிழ்ச்சியும், தீமை செய்யும் போது துன்பமும் ஏற்படும் என்ற பலரின் சிந்தனையும் நன்மை செய்ய நம்மை தூண்டுகிறது.

2. உறுதியான தீர்மானம்: நன்மை மட்டுமே செய்வேன் என்று உறுதியான தீர்மானம் எடுத்த ஒருவரால் மட்டுமே எப்போதும் நன்மையைத் தேர்ந்தெடுக்க முடியும். நாற்பது நாள் உபவாசத்துக்குப் பின்னர் சோர்வடைந்த இயேசுவை சோதிக்க அலகை வந்தது. நன்மையைத் தேர்ந்தெடுப்பதற்கான இயேசுவின் உறுதியான தீர்மானம் அவரை அலகையின் சோதனைகளை வெல்ல வைத்தது. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான இயேசுவின் உறுதியான தீர்மானம் வாயிலாக எப்போதும் நன்மையைத் தேர்ந்தெடுக்க அவரால் முடிந்தது.

3. சுதந்திரம்: உண்மையான சதந்திரம் அனுபவிப்பவனால் மட்டுமே எப்போதும் நன்மையை தேர்ந்தெடுக்க முடியும். தீய பழக்கவழக்கங்களுக்கும், தீய நண்பர்களுக்கும் அடிமையானால் நன்மையைத் தேர்ந்தெடுக்க ஒருவராலும் இயலாது. தீமையில் வாழ்ந்து, தீமைக்கு அடிமையான ஒருவர் தீமையோடு உறவு கொண்டிருப்பார். அவர் உண்மையான சுதந்திரம் அனுபவிப்பதில்லை. எனவே நன்மையைத் தோர்ந்தெடுக்க நாம் சுதந்திரமாக இருக்க வேண்டும்.

4. தூய ஆவியின் உதவி: நன்மையை தேர்ந்தெடுப்பதற்கும், நன்மையில் நிலைத்து நிற்பதற்கும் மனிதர்களின் ஆசையும், திறமையும், முயற்சியும் மட்டும் போதாது. தூய ஆவியின் அருளும், ஆசீரும் இருந்தால் மட்டுமே நன்மையை பகுத்தறியவும், நன்மை செய்யவும் நம்மால் இயலும். எனவே கடவுளோடு உள்ள உறவும், ஜெபமும் இறையருளும் நன்மை செய்ய நம் ஒவ்வொருவருக்கும் தேவையானதாகும்.

*3. நன்மையும் தீமையும் நிறைந்த உலகத்தில் நன்மையை தேர்ந்தெடுத்து கடவுளோடு ஒன்றித்திருக்க வேண்டிய வாய்ப்பை உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் கண்டறியுங்கள். விளக்குக*

நமது வாழ்வில் ஒவ்வொரு தீர்மானமும், நன்மையையோ அல்லது தீமையையோ தேர்ந்தெடுப்பது ஆகும். தொடர்ந்து நன்மையை தேர்ந்து கொண்டால் நன்மையில் வளர்வோம். தீமையை தேர்ந்து கொண்டால் தீமையில் வளர்வோம். தொடர்ந்து தீமை செய்கின்ற ஒருவர் சிறிது காலத்துக்குப் பின்னர் தீமையின் அடிமையாக மாற வாய்ப்புண்டு. நமது வாழ்க்கையில் ஒவ்வொரு தீர்மானமும் நல்ல கவனமுடன் எடுக்கப்பட வேண்டும். நாம் எடுக்கின்ற தீர்மானங்களும், செய்கின்ற எல்லா செயல்களும் நன்மையே என்று நாம்

உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு பிள்ளைகளான நாம் கடவுளை அன்பு செய்யவும், கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றவும் ஆவல் கொள்கிறோம். எப்போதும் நன்மைகள் செய்து கடவுளோடு ஒன்றிப்படைகிறோம்.

குறுவினாவிடைகள்

1. *கடவுள் ஆதிபெற்றோர்களிடம் ஏதேன் தோட்டத்தில் குடியமர்த்திய பின்னர் கட்டளையிட்டுக் கூறியது என்ன?* "தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்." (தொ.நூல். 2 : 16-17)
2. *கடவுள் மனிதனைப் படைத்து அவனுக்கு அளித்த மாபெரும் கொடை என்ன?* சுதந்திரம்.
3. *கடவுள் மனிதனுக்கு ஏதேன் தோட்டத்தில் அளித்த சுதந்திரம் என்ன?* ஏதேன் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை உண்ணவும் உண்ணாதிருக்கவும் உள்ள சுதந்திரத்தை *மனிதனுக்கு* அளித்தார்.
4. *கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவது என்றால் என்ன?* நன்மை
5. *நன்மையின் உறைவிடம் யார்?* கடவுள்
6. *கடவுளுக்கு கீழ்ப்படியாதிருத்தல், கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றாதிருத்தல் என்றால் என்ன?* தீமை
7. *ஆதி பெற்றோர்கள் எவ்வாறு கடவுளின் அன்பை இழந்தனர்?* ஆதி பெற்றோர்கள் அவர்களின் சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தினர். நன்மைக்கு பதிலாக தீமையைத் தேர்ந்தெடுத்தனர். கடவுளின் கட்டளையை மீறி அவர்கள் கடவுளின் அன்பை இழந்தனர்.
8. *நன்மையையும் தீமைகளையும் வேறுபடுத்தி அறிவதற்கு யாரால் மட்டுமே முடியும்?* மனிதனால்
9. *நன்மையின் குறிக்கோள் என்ன?* ஆண்டவர் அளித்த சுதந்திரத்தை பயன்படுத்தி நன்மையை தேர்ந்தெடுக்கும் போது நாம் கடவுளின் மக்களாக உயர்த்தப்படவும், தெய்வீக அன்பையும் அனுபவிக்கின்றோம். நன்மை என்ன என்பதை அறிந்து நன்மையை அன்பு செய்து வாழவே நாம் படைக்கப்பட்டிருக்கின்றோம்.
10. *தீமை செய்வதால் ஏற்படுவது என்ன?* நாம் ஆதி பெற்றோர்களைப் போன்று தீமையை தேர்ந்தெடுத்தால் தெய்வீக அனுபவத்திலிருந்தும் பரலோக அனுபவத்திலிருந்தும் அகன்று போகின்றோம்.
11. *நன்மை பற்றி இணைச்சட்ட நூல் கூறுவது என்ன?* "வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன் வைக்கின்றேன். நீயும் உனது வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்தெடுத்து கொள்." (இணைச் சட்டம் 30 : 19).
12. *இணைச்சட்ட நூல் எவ்வாறு நன்மையையும் தீமையையும் வேறுபடுத்துகிறது?* நன்மை என்பது வாழ்வும் ஆசியுமாகும். தீமை என்பது சாவும் சாபமுமாகும்.
13. *மனிதனின் மனச்சான்று எனப்படும் கடவுளின் குரல் யாது?* "நன்மை செய், தீமை செய்யாதே"
14. *கடவுள் மக்களுக்கு கட்டளைகளை அளித்தது ஏன்?* நன்மை செய்யவும், தீமை செய்யாதிருக்கவும்
15. *நன்மையைப் பற்றி அறிந்து கொள்ள நமக்கு உதவி புரிபவை யாவை?* இறைக்கட்டளைகள், அரசியல் சட்டங்கள், திருச்சபை சட்டங்கள், சமுதாயச் சட்டங்கள்
16. *திருமுழுக்கின் வழியாக நாம் எவ்வாறு மாற்றப்படுகிறோம்?* கடவுளின் மக்களாக
17. கடவுள் <u>நன்மையின்</u> முழுமையாக உள்ளார். கடவுளில் வாழ்பவர் <u>நன்மையில்</u> வாழ்கின்றார்.
18. *சமூகத்தில் நாம் எவ்வாறு நன்மையை அறிந்து கொள்ள முடியும்?* நன்மையையும் தீமையையும் பகுத்தறியும் தனிப்பட்ட அருளை கடவுள் மனிதர்களுக்கு அளித்திருக்கிறார். இவ்வாறு அனுதின வாழ்க்கை அனுபவங்களிலிருந்தும், அறிவிலிருந்தும் நன்மையையும் தீமையையும் பகுத்தறிய நம்மால் முடியும். கடவுளே நன்மை, அவரே நம் மீட்பு என்ற தெளிவான பகுத்தறிவு நன்மையைத் தேர்ந்தெடுக்க நமக்கு உதவுகிறது. நன்மை செய்யும் போது மகிழ்ச்சியும், தீமை செய்யும் போது துன்பமும் ஏற்படும் என்ற சிந்தனை நம்மை நன்மை செய்ய தூண்டுகிறது.

www.malankaralibrary.com

19. *நன்மை செய்வதற்கான உறுதியான தீர்மானம் கொள்வது எப்படி?* நன்மை மட்டுமே செய்வேன் என்ற உறுதியான தீர்மானம் எடுத்த ஒருவரால் மட்டுமே எப்போதும் நன்மையை செய்ய முடியும். நன்மையைத் தேர்ந்தெடுப்பதற்கான இயேசுவின் உறுதியான தீர்மானம் அவரை அலகையின் சோதனைகளை வெல்ல வைத்தது. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான இயேசுவின் உறுதியான தீர்மானம் வாயிலாக எப்போதும் நன்மையைத் தேர்ந்தெடுக்க அவரால் முடிந்தது.

20. *நன்மைக்கும் சுதந்திரத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?* உண்மையான சதந்திரம் அனுபவிப்பவனால் மட்டுமே எப்போதும் நன்மையை தேர்ந்தெடுக்க முடியும். தீய பழக்க வழக்கங்களுக்கும், தீய நண்பர்களுக்கும் அடிமையானால் நன்மையைத் தேர்ந்தெடுக்க இயலாது. தீமையில் வாழ்ந்து, தீமைக்கு அடிமையான ஒருவர் தீமையோடு உறவு கொண்டிருப்பார். அவர் உண்மையான சுதந்திரம் அனுபவிப்பதில்லை. எனவே நன்மையைத் தோர்ந்தெடுக்க நாம் சுதந்திரமாக இருக்க வேண்டும்.

21. *நன்மை செய்ய தூய ஆவி எவ்வாறு உதவுகிறார்?* நன்மையை தேர்ந்தெடுப்பதற்கும், நன்மையில் நிலைத்து நிற்பதற்கும் மனிதர்களின் ஆசையும், திறமையும், முயற்சியும் மட்டும் போதாது. தூய ஆவியின் அருளும், ஆசீரும் இருந்தால் மட்டுமே நன்மையை பகுத்தறியவும், நன்மை செய்யவும் நம்மால் இயலும். எனவே கடவுளோடு உள்ள உறவும், ஜெபமும் இறையருளும் நன்மை செய்ய நம் ஒவ்வொருவருக்கும் தேவையானதாகும்.

22. *தீமையை விட நன்மையை தேர்ந்தெடுக்க முடிவெடுக்க வேண்டியது ஏன்?* நமது வாழ்வில் ஒவ்வொரு தீர்மானமும், நன்மையையோ அல்லது தீமையையோ தேர்ந்தெடுப்பது ஆகும். தொடர்ந்து நன்மையை தேர்ந்து கொண்டால் நன்மையில் வளர்வோம். தீமையை தேர்ந்து கொண்டால் தீமையில் வளர்வோம். தொடர்ந்து தீமை செய்கின்ற ஒருவர் சிறிது காலத்துக்குப் பின்னர் தீமையின் அடிமையாக மாற வாய்ப்புண்டு. நமது வாழ்க்கையில் ஒவ்வொரு தீர்மானமும் நல்ல கவனமுடன் எடுக்கப்பட வேண்டும். நாம் எடுக்கின்ற தீர்மானங்களும், செய்கின்ற எல்லா செயல்களும் நன்மையே என்று நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

23. *சிறுபருவத்தில் தீய நண்பர்களின் நட்பு எவ்வாறு தீமை செய்ய தூண்டுகிறது?* சிறுபருவம் மிகவும் கவனமாக வளர வேண்டிய பருவமாகும். தீய நண்பர்கள் மூலமாகவும், தீய வழிகளில் வாழ்வது வாயிலாகவும் இளமைப்பருவம் தீமையானதாக மாறவும் வாய்ப்புண்டு. குடிப்பழக்கம், புகைப்பிடித்தல், தீய படங்கள், தீய சினிமாக்கள் ஆகியவை தீய நண்பர்களின் வாயிலாக உருவாகும் தீமைகளே ஆகும். இவ்வாறான தீமைகள் நம்முடைய வாழ்க்கையை முழுவதுமாக அழிக்கிறது.

24. *எவ்வாறு நம்மால் நன்மையில் வளர முடியும்?* 1. இளமைப் பருவத்தில் நன்மையில் வளரவும், நன்மை செய்யவும் கவனம் செலுத்த வேண்டும். 2. நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், தீய நண்பர்களிடமிருந்து விலகுவதிலும் கவனம் செலுத்த வேண்டும். 3. பெற்றோர்களையும். ஆசிரியர்களையும், பெரியோர்களையும் மதிக்க வேண்டும். 4. நன்றாகப் படித்து பிறருக்கு உதவி செய்து அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்க வேண்டும். 5. ஆன்மீக செயல்களில் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும். இவ்வாறாக நன்மையில் வளர நம்மால் இயலும்.

25. *திருப்பலியில் "அன்புடையோரே ..........." என்ற பாடலின் இறுதியில் கடவுளின் நன்மைகளை நினைவு கூர்ந்து, மனிதனின் தீமைகளை பொறுத்தருள வேண்டுமென்று திருச்சபை எவ்வாறு மன்றாடுகிறது?*

"நல்லவரே உம் கருணையினால்

நல்கிடுவீர் எம் வேண்டுதலை / ஆண்டவரே நீர் கனிவுடனே

அடியாரின் மேல் இரங்கிடுவீர்

அருளின் நிறைவே அடியாரின் / தீமைகள் எல்லாம் பொறுத்தருளும்."

26. <u>தீமை</u> செய்யாதே; <u>தீமை</u> ஒருபோதும் உனக்கு நேராது. <u>அநீதியை</u> விட்டு அகன்று செல்; <u>அநீதியும்</u> உன்னை விட்டு விலகும். (சீராக் 7:1-2)

www.malankaralibrary.com

## பாடம் 21 புண்ணிய வாழ்வு

பயிற்சி வினாக்கள் :

*1. இறை புண்ணியங்கள் யாவை? அவற்றைப் பற்றி சுருக்கமாகக் கூறுக?*

கடவுளைப் பற்றியதும், கடவுளின் அருகில் நம்மைக் கொண்டு சேர்ப்பதுமே இறை புண்ணியங்கள் இவை, விசுவாசம், அன்பு, எதிர்நோக்கு, என்பவையேயாகும்.

1. விசுவாசம் (நம்பிக்கை) : கடவுளோடு தனிப்பட்ட முறையில் நாம் கொண்டுள்ள அன்பே விசுவாசம் எனப்படும். பழைய ஏற்பாட்டில் விசுவாசம் மீட்புக்கான வழியாக குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் விசுவாசம் என்பது இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடுவது ஆகும். (மாற்கு 16 : 16). நற்செய்தியை ஏற்றுக்கொள்வதே விசுவாசம் ஆகும். (உரோ 10 : 17) எல்லா புண்ணியங்களுடையவும் அடிப்படை விசுவாசமே ஆகும். விசுவாசத்திற்கு எதிரான பாவங்கள் நம்பிக்கையின்மை, தப்பறை, மதத்தை மறுத்தல் என்பவை ஆகும்.

2. எதிர்நோக்கு: நிலையான மீட்பும், நிறை வாழ்வும் தேடும் போது ஏற்படுகின்ற தடைகளுக்கிடையில் ஒருவரை பலப்படுத்துகின்ற புண்ணியமே எதிர்நோக்கு ஆகும். இயேசுக் கிறிஸ்துவே நமது எதிர்நோக்கு என்று புனித பவுலடியார் கூறுகின்றார் (1திமோ. 1: 1) நிலையான எதிர்நோக்கில் நாம் வாழவேண்டும் என்று திருச்சபை கற்பிக்கின்றது. எதிர்நோக்கு நம்மை கடவுளோடு இணைக்கிறது. அகந்தை, கவலை என்பவையே எதிர்நோக்குக்கு எதிரான பாவங்கள் ஆகும்.

3. அன்பு : இறை புண்ணியங்களில் சிறந்ததும், தேவையானதுமான ஒன்றே அன்பு. அனைத்திற்கும் மேலாக கடவுளையும், தன்னைப்போல் தன் அயலானையும் அன்பு செய்ய வேண்டுமென்று நம்மை தூண்டுகின்ற ஒரு புண்ணியம் இது. அன்புக்கு இறையன்பு, பிறரன்பு என இரண்டு பக்கங்கள் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக கடவுளை அன்பு செய்ய வேண்டும் என்று இயேசுவே கூறியிருக்கிறார் (லூக். 10 : 27). பிறரன்பு புனிதத்திற்கான தலைவாசல் ஆகும். பிறரைப்பற்றி இல்லாதவற்றைச் சொல்லுதல், நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துதல், இடறல், வெறுப்பு, தடைகள் ஆகியவையே அன்புக்கு எதிரான பாவங்கள் ஆகும்.

*2. நன்னெறி புண்ணியங்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் கூறுக?*

நன்மை செய்வதற்கு நமக்கு துணைபுரிகின்றவைகளே நன்னெறிப் புண்ணியங்கள். இவற்றை அறநெறி வாழ்க்கையில் நாம் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். விவேகம், நீதி, உண்மை, திடன், எளிமை, பொறுமை, அமைதி, கீழ்படிதல், பரிவு இவைகள் நன்னெறி புண்ணியங்கள் ஆகும். இறை அருளில் ஒன்றித்து வாழ்பவர்களுக்கு மட்டுமே இந்த புண்ணியங்களில் வளர முடியும்.

*3. புண்ணியத்தில் வளர்வதற்கு ஒருவருக்குக் தேவையானவை யாவை?* புண்ணியங்களை நல்ல பழக்க வழக்கங்கள் என்று நாம் கூறும் போது மனிதர்களுடைய முயற்சியையே அது குறிக்கின்றது. இடைவிடா முயற்சியும், கவனமும் புண்ணியத்தில் வளர்வதற்குத் தேவையான ஒன்றாகும். நன்மை செய்வதற்கான விருப்பமும், நன்மையில் வளர்வதற்கான முயற்சியும் புண்ணியத்தில் வளர ஒருவருக்கு உதவி செய்கின்றது. எனவே ஒருவருடைய முழு ஈடுபாடும், உற்சாகமும் புண்ணிய வாழ்க்கை வாழத் தேவையானதாகும்.

மனிதர்களின் முயற்சி மட்டுமன்று கடவுளின் அருளும் இருந்தால் மட்டுமே ஒருவருக்கு புண்ணிய வாழ்வு வாழ முடியும். மனிதர்களின் முயற்சியினால் மட்டும் ஒருவரால் புண்ணிய வாழ்வு வாழ முடியாது, மாறாக கடவுளின் அருள் கொடையாகவே மனிதர்களுக்குக் கிடைக்கின்றது. அதனால் கடவுளின் அருளுக்காக நாம் தினமும் செபிப்போம்.

மனிதன் மாற்றத்திற்கு உட்பட்டவன். இந்த மாற்றத்தின் நடுவிலும் கிறிஸ்துவுக்கு சான்று பகர வேண்டும் என்ற இலக்கை அடைவதற்கு புண்ணியங்கள் உதவுகிறது. மனிதனை அழகுபடுத்துவது புண்ணியங்கள்.

### குறு வினா விடைகள்

1. *கிறிஸ்தவ வாழ்வின் மறு பெயர்கள் யாவை?* புண்ணிய வாழ்வு, அற வாழ்வு.

2. *புனித பவுலடியார் இறை புண்ணியங்களைப் பற்றி கூறுவது யாது?* புனித பவுலடியார் இறை புண்ணியங்களான விசுவாசம், அன்பு, எதிர்நோக்கு என்பவை கிறிஸ்தவ வாழ்க்கையின் மூன்று

www.malankaralibrary.com

நிலைகளாகும் என்று கூறியிருக்கின்றார். 'நம்பிக்கையையும் அன்பையும் மார்புக் கவசமாகவும், மீட்புப் பெறுவோம் என்னும் எதிர்நோக்கைத் தலைச்சீராகவும் அணிந்து கொள்வோம்' (1தெசலோனிக்கர் 5:8) என்றும் அவர் கூறுகிறார்.

3. *புண்ணியங்கள் என்றால் என்ன?* கிறிஸ்தவ வாழ்க்கையில் நன்மையை விரும்பவும் அதை செய்வதற்கான ஆயத்தமும், செயல்பாடுகளுமே புண்ணியங்கள் ஆகும்.

4. *புண்ணியங்களும் அறச்செயல்களும் எதற்கு உதவி புரிகின்றன?* ஒருவன் எந்த சூழ்நிலையிலும் கடவுளின் கட்டளைகளை பின்பற்ற புண்ணியங்கள் உதவுகின்றன. மனிதர்களின் பேராசைகளை கட்டுப்படுத்தி, கடவுளின் விருப்பப்படி வாழ அறச்செயல்கள் உதவி செய்கின்றன.

5. *பழக்க வழக்கங்கள் எவ்வாறு புண்ணிய வாழ்க்கைக்கு வழிநடத்துகின்றன?* மீண்டும் மீண்டும் செய்யும் செயல்கள் பழக்கவழக்கமாக மாறுகின்றன. பழக்க வழக்கங்களின் தன்மைக்கேற்ப நன்மைக்கும், தீமைக்கும் நாம் வழி நடத்தப்படுகிறோம். நன்மையான பழக்கங்கள் புண்ணிய செயல்களுக்கும், தீமையான பழக்கங்கள் பாவ வாழ்க்கைக்கும் நம்மை வழி நடத்துகின்றன. தவறான பழக்கவழக்கங்களை தொடர் முயற்சியால் குறைக்கவும், விட்டுவிடவும் முடியும். சில தவறான பழக்கவழக்கங்கள் அழிவின் பாதைக்கு நம்மைக் கொண்டுசெல்லும், குடிப்பழக்கத்தைக் கொண்டிருக்கின்ற ஒருவன் அவனுடைய குடும்பத்துக்கும், சமூகத்துக்கும் ஏற்படுத்துகின்ற அழிவுகள் ஏராளம். சிறிய தண்டனைகளிலிருந்து தப்பிப்பதற்காக நாம் சொல்கின்ற பொய்ப் பழக்கம் வாழ்வில் மாற்றமுடியாத ஒன்றாக மாறுகிறது. நன்மையின் உடைமைகளாக மாறும் போது நாம் புண்ணிய வாழ்க்கைக்கு வழி நடத்தப்படுகின்றோம்.

6. *புண்ணியங்களை அடைவது எவ்வாறு?* புண்ணியங்களை நல்ல பழக்க வழக்கங்கள் என்று நாம் கூறும் போது மனிதர்களுடைய முயற்சியையே அது குறிக்கின்றது. இடைவிடா முயற்சியும், கவனமும் புண்ணியத்தில் வளர்வதற்குத் தேவையான ஒன்றாகும். நன்மை செய்வதற்கான விருப்பமும், நன்மையில் வளர்வதற்கான முயற்சியும் புண்ணியத்தில் வளர ஒருவருக்கு உதவி செய்கின்றது. எனவே ஒருவருடைய முழு ஈடுபாடும், உற்சாகமும் புண்ணிய வாழ்க்கை வாழத் தேவையானதாகும்.

7. *புண்ணியங்கள் கடவுளின் கொடை எவ்வாறு?* மனிதர்களின் முயற்சி மட்டுமன்று கடவுளின் அருளும் இருந்தால் மட்டுமே ஒருவருக்கு புண்ணிய வாழ்வு வாழ முடியும். மனிதர்களின் முயற்சியினால் மட்டும் ஒருவரால் புண்ணிய வாழ்வு வாழ முடியாது, மாறாக கடவுளின் அருள் கொடையாகவே மனிதர்களுக்குக் கிடைக்கின்றது. மனிதன் மாற்றத்திற்கு உட்பட்டவன். இந்த மாற்றத்தின் நடுவிலும் கிறிஸ்துவுக்கு சான்று பகர வேண்டும் என்ற இலக்கை அடைவதற்கு புண்ணியங்கள் உதவுகிறது. மனிதனை அழகுபடுத்துவது புண்ணியங்கள். இறை அருளில் ஒன்றித்து வாழ்பவர்களுக்கு மட்டுமே இந்த புண்ணியங்களில் வளர முடியும். அதனால் கடவுளின் அருளுக்காக நாம் தினமும் செபிப்போம்.

8. *புனித பவுலடியார் கூறும் கிறிஸ்தவ வாழ்க்கையின் மூன்று நிலைகளd யாவை?* 1. விசுவாசம் (நம்பிக்கை) 2. எதிர்நோக்கு 3. அன்பு

9. *பெந்தேகோஸ்து நாளின் இரண்டாம் திருச்சடங்கில் புண்ணியங்களைப் பற்றி திருச்சபை பாடும் பாடல் எது?*

இயேசு நாதா வாரங்கள் தன் திருநாளாகும்

பெந்தே கோஸ்தின் புனிதம் நிறை நாளில்

தீச்சுவாலை போன்று-துணையாளராகும் றூகா

மாளிகையதனில் - சீடர்மேல் வந்தார்

நல்விசுவாசம் எதிர்நோக்கும் அன்பும் யாவும்

முழுமை நல்கி நற்செய்தியாளராய்

ஹாலேலூய்யா - நேர்வழி விட்டோராம் அவரை

கற்பித்தாரே உண்மையின் பாதை

www.malankaralibrary.com

10. “நீங்கள் கடவுளுடைய கோயிலென்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்கு தெரியாதா”? (1 கொரிந்தியர் 3:16)

## பாடம் 22 சட்டங்களை கடைபிடியுங்கள்

பயிற்சி வினாக்கள்

*1. சட்டங்கள் என்றால் என்ன? சட்டங்கள் கடைப்பிடிப்பதன் தேவை என்ன?* நாம் பயணம் செய்யும்போது நமக்கு வழிகாட்டியாக வழிகளில் வழிகாட்டும் பலகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. வழிகாட்டும் பலகைகள் காட்டும் விதிமுறைகளை பின்பற்றி பயணம் சென்றால் நமது இலட்சியத்தை அடைய முடிகிறது. நமது அனுதின வாழ்வின் குறிக்கோளை சென்றடைய வழி காட்டுதல். தேவைப்படுகின்றன. நல்ல செயல்களைச் செய்யவும், தவறான செயல்களை விட்டுவிடவும் விதி முறைகள் தேவையானதாகும். நன்மையின் வழிகளை காட்டித் தருகின்ற இந்த விதி முறைகளை சட்டங்கள் என்கிறோம். நம்முடைய நன்மைகளுக்காகவே சட்டங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே நாம் சட்டங்களைக் கடைபிடிக்க வேண்டும்.

*2. இறை கட்டளைகளின் கருப்பொருள் என்ன ?* கடவுள் இஸ்ரயேல் மக்களைத் தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுத்தார் என்று பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கின்றோம். கடவுள் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றவே அவர்களைத் தேர்ந்தெடுத்தார். கடவுளின் அன்பையும் இரக்கத்தையும் எல்லா மக்களிடமும் அறிவிப்பதே அத்திட்டம். அதை நிறைவேற்ற கடவுள் அவர்களுக்கு பத்து கட்டளைகளை வழங்கினார்.

திருச்சட்டம், இறைவாக்கு இவற்றின் நிறைவே புதிய ஏற்பாடு. இறைமகனான இயேசு கிறிஸ்து பத்து கட்டளைகளை இரண்டு கட்டளைகளுக்குள் கொண்டு வருகின்றனர். அவையே இறையன்பும், பிறரன்பும் ஆகும்.

கடவுளை அன்பு செய்யுங்கள், மனிதர்களை அன்பு செய்யுங்கள் இவையே திருச்சட்டங்களின் கருப்பொருள், சட்டங்களின் நிறைவு அன்பிலும், அன்பின் செயல்பாடுகளிலும் அடங்கியிருக்கின்றன. மட்டுமல்ல சகோதரர்களை அன்பு செய்பவன் கடவுளை அன்பு செய்கிறான் என்றும் நிலையான வாழ்விற்குள் நுழைந்திருக்கிறான் என்றும் இயேசு கற்பித்தார்.

*3. சட்டங்கள் மனிதர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது ஏன்?* மனிதர்களுக்கு சாதாரணச் சட்டங்கள் மட்டும் போதாது. அவர்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகள் மாறுபட்டது. அவர்களுடைய பொறுப்புகள் ஏராளம். அகிலத்தையும், பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் காத்து பராமரிப்பவன் மனிதன். கடவுள் அவற்றையெல்லாம் மனிதர்களின் பாதுகாப்பில் விட்டு வைத்துள்ளார். மட்டுமல்ல வாழ்க்கைப் பயணத்தில் ஒருவர் மற்றவரை உதவுபவராக மாற்றவும் உதவி செய்யவும் வேண்டும். இந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக விதிமுறைகள் தேவைப்படுகின்றன. இதற்காகவே சட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.
.

*4. மனித இயல்பான சட்டங்களுக்கும் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்கும் உள்ள வேறுபாடு யாது? எடுத்துக் காட்டுடன் விளக்குக.* மனிதனும் இயல்பாக தன்னுள் சில சட்டங்களை புரிந்து கொள்கின்றான். அவனுடைய இதயத்தில் உணருகின்ற சில விதிமுறைகளும் உண்டு. நல்ல செயல்களைச் செய்யவும், தவறான செயல்களை விட்டுவிடவும் அது அவனைத் தூண்டுகின்றது. மனித இயல்பே அவனோடு வேண்டுகின்ற சில ஒழுங்குமுறைகள் உண்டு. மனிதன் தன்னுடைய புத்தியைப் பயன்படுத்தி அதைப் புரிந்து கொள்ளவும் உணர்வுகளால் பெற்றுக்கொள்ளவும் வேண்டும். இறைவனை ஆராதித்தல், உண்மையுள்ளவனாக நடத்தல், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கீழ்படிதல் ஆகியவை எடுத்துக்காட்டுகளாகும்.

மனிதர்களால் உருவாக்கப்பட்ட சட்டங்கள்

மனிதர்களுக்கு சாதாரணச் சட்டங்கள் மட்டும் போதாது. அவர்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகள் மாறுபட்டது. அவர்களுடைய பொறுப்புகள் ஏராளம். அகிலத்தையும், பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் காத்து பராமரிப்பவன் மனிதன். கடவுள் அவற்றையெல்லாம் மனிதர்களின் பாதுகாப்பில் விட்டு வைத்துள்ளார். மட்டுமல்ல வாழ்க்கைப் பயணத்தில் ஒருவர் மற்றவரை உதவுபவராக மாற்றவும் உதவி செய்யவும் வேண்டும். இந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக விதிமுறைகள் தேவைப்படுகின்றன. இதற்காகவே

www.malankaralibrary.com

சட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. .

ஒருவருக்கு படைப்பாளரும், தந்தையுமான கடவுளோடு உறவு வேண்டும். தன்னுடைய சகோதரர்களான மற்று மனிதர்களோடு அன்பு கொண்டிருக்க வேண்டும். அவர்களோடு ஒன்றித்து வாழ வேண்டும். தான் வாழுகின்ற சமூகத்தின் நன்மையில் ஆர்வம் ஏற்பட வேண்டும். ஒருவர் விதிமுறைகளின் படி செயல்படும் போது தான் அவனுடைய வாழ்க்கையில் அமைதியும் சமாதானமும் நிலவும். இந்த இலக்குகளை அடைவதற்காகவே கடவுள் மனிதனுக்கு சட்டங்கள் கொடுத்திருக்கிறார். திருச்சபை மனிதனுக்கு நன்மையும், தீமையும் பகுத்தறிவதற்கான அறநெறி சட்டங்களைக் கொடுத்திருப்பது அவன் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை வாழ்வதற்காகவே ஆகும். அரசு தேவையான சட்டங்கள் கொடுத்திருப்பது பொதுமக்களின் நன்மைக்காகவே ஆகும்.

5. *நாம் வாழ்கின்ற சமூகத்தில் சட்டங்களைக் கடைப்பிடிப்பது எவ்வாறு?*

நாம் ஒவ்வொருவரும் ஒரு சமூகத்தில், பிறரோடு சேர்ந்து வாழ்கிறோம். அரசு சட்டங்களை வழங்குகிறது. சமூகத்தில் அனைவரும் சமாதனத் தோடும், ஒத்துழைப் போடும் வாழ்வதற்கு இந்த சட்டங்கள் பயன்படுகின்றன. மனிதர்களுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகளில் நீதி நடத்த வேண்டும். பொதுவான நன்மையை நிலை நாட்டுவதே அரசியல் சட்டங்களின் குறிக்கோள். சமூகத்தில் நீதி, சமாதானம், சகோதரத்துவம் இவை மலரவும், பொருளாதார சமூக மேம்பாடு அடையவும் குடிமக்கள் சட்டங்களைக் கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சமூகத்தின் வளர்ச்சிக்காக வழங்க வேண்டிய நன்கொடையைத் தீர்மானிப்பதும் சட்டங்களாகும். ஓட்டுரிமை, வரி செலுத்துதல், நாட்டின் மேம்பாட்டிற்காக பற்பல சேவைகளில் ஈடுபடுதல் இவையனைத்தும் நாட்டின் நன்மைக்குத் தேவையானவையாகும். ஒவ்வொரு சட்டமும் ஒரு மதிப்பீட்டை முன் வைத்தே உருவாக்கப்படுகிறது.

குறுவினாவிடைகள்

1. *இயற்கைச் சட்டங்கள் குறிப்பு வரைக?* இயற்கையில் நாம் பல உண்மைகளைக் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக சூரியன் உதிக்கின்றது, நீர் தாழ்வான இடத்தை நோக்கிச் செல்கின்றது, பூமி அதன் மையத்தை நோக்கி எல்லா பொருள்களையும் ஈர்க்கின்றது அதைப் போன்று விலங்குகளும், பறவைகளும், நீர் வாழ்வனவும் தங்களுடைய செயல்களைச் செய்கின்றன. அவைகளுக்கு சில விதி முறைகள் உண்டு. படைப்பாளனாகிய கடவுள் அவைகளுக்காக உருவாக்கியிருக்கின்ற சட்டங்களின் படியே அவைகள் வாழ்கின்றன.

2. *இளமைப் பருவம் சட்டங்களை கடைபிடித்து வாழ நமக்கு எவ்வாறு உதவுகின்றது?* இளமைப் பருவம் பயிற்சியின் காலகட்டமாகும். குழந்தைகளாகிய நாம் வீடுகளிலும், தேவாலயங்களிலும், பள்ளிகளிலும் நல்ல வாழ்விற்கான பயிற்சியை நடத்துகின்றோம். நாம் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் பள்ளிகளில் ஒழுங்கு முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். மறைக்கல்வி வகுப்பிலும், தேவாலயத் திருச்சடங்குகளிலும் சரியாகப் பங்குகொள்ள வேண்டும். ஆசிரியர்களிடம் மதிப்போடு பழக வேண்டும். நண்பர்களை அன்பு செய்ய வேண்டும். இந்த பயிற்சி பின்னர் சட்ட முறைப்படியான ஒரு வாழ்க்கை வாழ நம்மைத் தகுதியுடையவராக்கும்.

3. *இறைகட்டளைகளின் நோக்கம் என்ன?* கடவுளின் மக்கள் என்ற நிலையில் நாம் இறைகட்டளைகளை கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொருவரிடமிருந்தும் எப்படிப்பட்ட வாழ்க்கையை கடவுள் விரும்புகிறார் என்பதை இந்த சட்டங்களிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனுடையவும், சமூகத்தினுடையவும் உலகு சார்ந்த நன்மையை எதிர்நோக்குவதே அரசியல் சட்டங்கள். நல்ல குடிமக்கள் என்ற நிலையில் அனைவருடையவும் நன்மைக்காக ஒவ்வொருவரும் சட்டங்களை கடைபிடிக்க வேண்டும். அப்போது நாட்டில் ஒழுங்கும், சமாதானமும், வளர்ச்சியும் உருவாகும்.

4. *இறைகட்டளைகள் கடைபிடித்து இறையருளில் வாழத் தகுதியுடையவராக்கியருளும் என்ற பாடல் யாது*

   "ஆண்டவரே உந்தன்

   ஆணைகளோ திருமடியேன்

   அவை போலொழுகிடுவேன்

www.malankaralibrary.com

அருளால் நான் வாழ்வேன்

உந்தன் அருள் செல்வம்

களவாகிப் போகாமல் .

அங்கங்கள் வாயில்

காவலரை வைப்பீர்."

5. திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பது பல காணிக்கைகளைக் கொடுப்பதற்கு ஈடாகும்; கட்டளைகளைக் கருத்தில் கொள்வது நல்லுறவுப் பலி செலுத்துவதற்கு ஒப்பாகும். (சீராக் 35 : 1)

## செபப்பகுதி

காலை மன்றாட்டு

கௌமா

மன்றாட்டு

துயிலின்றி விழிப்புடன் இருக்கும் எங்கள் ஆண்டவரே உம் திருவிழிப்பைப் புகழ்வதற்கு பாவத்தில் மூழ்கி கிடக்கும் எங்களைத் துயில் எழுப்பியருளும். இறப்பில்லாத உயிருள்ள இறைவா, உமது பேரிரக்கத்தை நாங்கள் போற்ற இறப்பும் அழிவுமாகிய துயிலிலிருந்து எங்களை விழித்தெழச் செய்யும். தந்தை மகன் தூய ஆவியாகிய இறைவா விண்ணும் மண்ணும் உம்மைப் போற்றி புகழ்கின்றன. ஆகையால் உம்மை புகழ்ந்து பாடுகின்ற விண்ணக தூதர்களின் அணிகளோடு சேர்ந்து நாங்களும் தூய்மையுடன் என்றென்றும் உம்மைப் போற்றிப் புகழ அருள் தாரும். ஆமீன்.

ஆண்டவரே! உம் அன்பர்களின் வேண்டுதல்களால் எங்களை ஆசீர்வதியும். தூய ஆவியின் ஏவுதலால் உம்மை வெளிப்படுத்திய இறைவாக்கினர்கள், உம்மை அறிவித்த அப்போஸ்தலர்கள், உம் அன்பின் பொருட்டு உயிர் நீத்த இரத்த சாட்சிகள் ஆகியோர் எங்களுக்காக உம்மிடம் வேண்டுவர். இறைவிருப்பப்படி வாழ்ந்த புனிதர்களே! எங்களிடமிருந்து பாவத்தின் தண்டனைகளும், கோபத்தின் விளைவுகளும் விலக, எங்களோடு சேர்ந்து நீங்களும் வேண்டுங்கள். ஆண்டவரே, இப்புனிதர்களின் வேண்டுதலால் எங்கள் மீது இரக்கமாயிரும்.

இரக்க மன்றாட்டு

பாவிகளுக்கு இரங்கும் இறைவா, நீர் எங்களை தீர்வையிடும் நாளில் எங்கள் மீது இரக்கமாயிரும். உமது நிறைந்த அருளால் எங்கள் பாவ கடன்களை மன்னித்தருளும். நற்பண்புகள் நிறைந்தவரே, துயருற்றவர்களாய் உமது வாயிலைத் தட்டுகின்ற எங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும். வானகத் தந்தையே, உம்மிடம் நாங்கள் வேண்டுகிறோம். எங்கள் பணிவிடையை நீர் ஏற்று எங்களை ஆசீர்வதித்தருளும். விண்ணுலகோரின் தலைவரும் மண்ணுலகோரின் அடைக்கலமுமாய் இருப்பவரே, எங்கள் வழிபாட்டை நீர் ஏற்றுக்கொண்டு எங்களை ஆசீர்வதியும். ஆமீன்.

ஹாலேலூய்யா ஹாலேலூய்யா ஹாலேலூய்யா

இறைவா, உமக்கு புகழ்

ஹாலேலூய்யா ஹாலேலூய்யா ஹாலேலூய்யா

இறைவா, உமக்கு புகழ்

ஹாலேலூய்யா ஹாலேலூய்யா ஹாலேலூய்யா

இறைவா, உமக்கு புகழ்.

இரக்கம் நிறைந்த இறைவா எங்கள் மீது இரங்கியருளும். நாம் இறைவனின் மக்களாகும்படி தங்கள் வாழ்நாளில் நம்மை பயிற்றுவித்த நமது மூதாதையரை திருப்பலிகளிலும் ஆராதனைகளிலும் நாம் நினைவு கூர வேண்டும். அழிவே இல்லாத உலகமான விண்ணரசில் நீதிமான்களோடும் புனிதர்களோடும் இறைமகன்

www.malankaralibrary.com

அவர்களுக்கு ஆறுதல் அளிப்பார். ஆண்டவரே எங்கள் மீது இரக்கமாயிருந்து எங்களை காப்பாற்றியருளும்.

மூவோரு கடவுளுக்குப் புகழ்.

மூவொரு கடவுளுக்குப் புகழ்.

துவக்கமும் முடிவும் இல்லாத போற்றுதற்குரிய உண்மையான மூவொரு கடவுளை நாங்கள் புகழ்கிறோம். இறைவா எக்காலத்திலும் நீரே புகழ்ச்சிக்குரியவர்.

தூதர்களின் புகழ்

உன்னதங்களில் வானதூதர்கள் உம்மை புகழ்வது போல இறைவா, வலுவற்ற பாவிகளான நாங்களும் உம்மைப் புகழ்கிறோம். எக்காலத்திலும் எவ்வேளைகளிலும் உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையும் உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதியுமாகுக.

நாங்கள் உம்மைப் புகழ்கிறோம். உம்மை வாழ்த்துகிறோம். உம்மை வணங்குகிறோம். புகழ்ச்சிப் பாடல்களை உமக்காக எழுப்புகிறோம்.

எல்லாம் வல்ல இறைவனும் விண்ணக அரசரும் படைப்பாளருமாகிய தந்தையே உம்மையும் ஒரேமகனாகிய இயேசு மெசியாவே உம்மையும் தூய ஆவியானவரே உம்மையும் நாங்கள் புகழ்கிறோம்.

இறைமகனும் வார்த்தையும் உலகின் பாவங்களை சுமந்தவரும் சுமக்கிறவருமான இறைவனின் செம்மறியாகிய ஆண்டவரே எங்கள் மீது இரக்கமாயிரும்.

உலகின் பாவங்களைச் சுமந்தவரும் சுமக்கிறவருமான ஆண்டவரே, நாங்கள் செலுத்தும் விண்ணப்பங்களைக் கேட்டு பதிலளித்தருளும்.

தமது தந்தையின் வலப்புறத்தில் மாட்சிமையுடன் வீற்றிருக்கிறவரே, அருள் பொழிந்து எங்கள் மீது இரங்கியருளும்.

இறைவா, நீர் ஒருவரே தூயவர். தூய ஆவியுடன் இயேசு மெசியவாகும் நீர் ஒருவரே ஆண்டவர். தந்தையாகிய இறைவனுக்கு புகழ் உண்டாவதாக. ஆமீன்.

எக்காலத்திலும் எவ்வேளைகளிலும் எங்கள் வாழ்நாள் முழுவதும் போற்றுதற்குரியதும் என்றென்றும் நிலைத்திருப்பதுமாகிய உமது திருநாமத்தை நாங்கள் புகழ்கிறோம்.

எங்கள் முற்பிதாக்களின் ஆண்டவராகிய எல்லாம் வல்ல இறைவா, உம்மைப் போற்றுகிறோம். உமது திருப்பெயர் என்றென்றும் புகழப்படுவதாக.

நீரே புகழ்ச்சிக்குரியவர். மகிமை உமக்கேத் தகும். அனைத்திற்கும் ஆண்டவரும் உண்மையின் தந்தையும் நீரே உமக்கும், உம் ஒரே பேறான மகனுக்கும், உயிருள்ள தூய ஆவிக்கும், புகழ்ச்சி ஏற்றதாகும். இப்புகழ்ச்சி ஆதியிலும் இப்பொழுதும், எப்பொழுதும் ஆவதாக. ஆமீன்.

அனுதாப ஜெபம்

எங்கள் ஆண்டவராகிய இயேசு மெசியாவே, உமது அருள் வரங்களின் வாயிலை எங்களுக்கு எதிராக அடைத்து விடாதேயும். ஆண்டவரே நாங்கள் பாவிகள் என அறிக்கையிடுகிறோம். எங்கள் மேல் இரக்கமாயிரும். உமது இறப்பால் எங்கள் இறப்பு அழியும்படி எங்கள் மேல் உள்ள உமது அன்பு விண்ணிலிருந்து உம்மை எம்மிடம் இறங்கியது. ஆண்டவரே எங்கள் மேல் இரக்கமாயிரும். ஆமீன்.

திருப்பாடல் 51

இறைவா உம் இரக்கத்திற்கேற்ப என் மீது இரக்கம் வையும். உம் இரக்க பெருக்கத்திற்கேற்ப என் குற்றம் குறைகளை போக்கிவிடும்.

நான் செய்த குற்றத்தை என்னிடமிருந்து முற்றிலும் கழுவி போக்கி விடும். என் பாவத்தைக் கழுவி என்னைத் தூய்மைப்படுத்தும்.

என் குற்றங்குறைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் செய்த பாவம் எந்நேரமும் என் கண்முன்னே நிற்கின்றது.

www.malankaralibrary.com

உமக்கு எதிராக மட்டுமே பாவம் செய்தேன். உம் திருமுன்னிலையிலே செய்தேன். உமது தீர்ப்பில் உம் நீதி விளக்குகின்றது. உமது நியாய வாக்கினில் உம் நேர்மை துலங்குகின்றது.

இதோ! குற்றமுள்ள நிலையில் நான் பிறந்தேன். பாவ நிலையிலே என் அன்னை என்னைக் கருத்தரித்தாள்.

இதோ! இதயத்தின் நேர்மையைக் கண்டு நீர் பெரிதும் மகிழ்கின்றீர். இதயத்தின் உள்ளிருந்தே எனக்கு மெய்ஞானம் புகட்டுகின்றீர்.

ஈசோப்புல்லால் என்மேல் தெளித்தருளும். நான் தூய்மையாவேன். நீர் என்னைக் கழுவியருளும். வெண்பனியிலும் வெண்மையாவேன்.

அகமகிழ்வும் அக்களிப்பும் என் செவியில் விழச் செய்யும்; என்குற்றங்களையெல்லாம் போக்கிவிடும்.

என் பாவங்களினின்று உம் திருமுகத்தைத் திருப்பிக் கொள்ளும்: என் குற்றங்களையெல்லாம் போக்கிவிடும்.

தூயதோர் உள்ளத்தை இறைவா நீர் என்னகத்தே உருவாக்கும். உறுதி தரும் ஆவியை என்னுள் மலரச் செய்யும்.

உம் திருமுன்னிருந்து என்னைத் தள்ளிவிடாதேயும்; உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடதேயும்.

உமது மீட்பால் வரும் மகிழ்ச்சியை எனக்களித்தருளும். உமது பெருந்தன்மையான மனப்பான்மையில் என்னை உறுதிப்படுத்தும்.

தீயவர்களுக்கு உம் வழிகளை நான் புகட்டுவேன்; பாவிகள் உம்மிடம் திரும்பி வருவர்.

இறைவா, என் மீட்பரான இறைவா, இரத்தப் பழிக்குரிய தண்டனையினின்று விடுவித்தருளும்: உமது நீதியைக் கண்டு என் நாவு ஆர்ப்பரிக்கும்.

ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்துவிடும்; என் வாய் உமது புகழ்ச்சியை எடுத்துரைக்கும்.

ஏனெனில் பலிகளில் நீர் இன்பம் கொள்வதில்லை; தகனப்பலி கொடுத்தாலும் அதை நீர் ஏற்பதில்லை .

இறைவா, நான் உமக்குச் செலுத்த வேண்டிய பலி நொறுங்கிய உள்ளமே; தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை இறைவா, நீர் புறக்கணிப்பதில்லை.

உம் நன்மைத்தனத்திற்கேற்ப, ஆண்டவரே, சீயோனுக்கு கருணை காட்டும். எருசலேமின் மதில்களை மீளவும் எழுப்புவீராக.

அப்போது முறையான பலிகளையும், காணிக்கைகளையும், தகனப்பலிகளையும் ஏற்றுக்கொள்வீர்; அப்போது உமது பீடத்தில் இளங்காளைகளைப் பலியாய் ஒப்புக் கொடுப்பர். இறைவா, புகழ்ச்சி உமக்கு ஏற்றதாகும். பாறெக்மோர்.

செபம்

ஆண்டவரே, உம்மைப் புகழ்வதும் உன்னதமானவரே உம்மைப் போற்றுவதும் அதிகாலையில் உமது இரக்கத்தையும் இரவு வேளைகளில் உம்மீதுள்ள விசுவாசத்தையும் அறிக்கையிடுவதும் மிக இனியது.

ஆண்டவரே, காலையில் என் குரலைக் கேட்டருளும்; அதிகாலையில் நான் விழித்து ஆயத்தமாகி உமக்காக காத்திருப்பேன்.

ஆண்டவரே, உம் மக்கள் மேல் இரங்கியருளும்.

ஆண்டவரே, எங்கள் அனைவரது பாவங்களையும் மன்னித்து எங்களை மீட்டருளும்.

தூயவரே, உமது வலது கையை நீட்டி, உம் திருப்பெயரால் எங்கள் நோய்களைக் குணப்படுத்தும்.

ஒப்புக் கொடுத்தல்

இரக்கம் நிறைந்த இறைவா! இந்நாளை உமக்கு நாங்கள் ஒப்படைக்கிறோம். இன்று அனைத்துலக

www.malankaralibrary.com

திருச்சபையில் செலுத்தப்படும் திருப்பலிகளையும், செபங்களையும், நற்செயல்களையும் உமக்கு காணிக்கையாக்குகிறோம். அத்துடன் எங்கள் வேண்டுதல்களையும், இன்ப துன்பங்களையும் , எல்லா முயற்சிகளையும் உமக்கே காணிக்கையாக்குகிறோம்.

இன்று உமது நல்ல பாதையில் எம்மை வழிநடத்தும் உமது வல்லமையால் எமக்கு உதவி செய்வீராக.

எங்களது இன்றைய எண்ணங்களும் பேச்சும் செயலும் உம் திருப்பெயரின் மகிமைக்கு ஏற்றவண்ணம் அமையச் செய்யும். அலகையின் சூழ்ச்சிகளிலிருந்தும் தீமைக்கு இட்டுச் செல்லும் சோதனைகளிலிருந்தும் எங்களைக் காத்தருளும்.

இரக்கமுள்ள ஆண்டவரே, இன்று எங்கள் முன்னிலும் பின்னிலும், வலப்புறமும் இடப்புறமும் எங்கள் கீழும் மேலும் எங்கள் உள்ளும் புறமும் நீர் கூடவே இருந்து எங்களைக் காத்து புனிதப்படுத்தியருளும்.

இறை அன்னையாகிய புனித மரியாளுடையவும் புனிதர்கள் அனைவருடையவும் வேண்டுதல்களும் ஆசீரும் இப்பொழுதும் எப்பொழுதும் எமக்கு துணையாயிருப்பதாக. ஆமீன்.

தூய மூவோரிறைவா தொடக்க முடிவில்லாத உம் அருளும் வல்லமையும் எங்களுக்கு உதவுவதாக. ஆண்டவரே, உமது மீட்பு எப்பொழுதும் எங்களோடிருப்பதாக. ஆமீன்.